அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 29 | அக்டோபர் 2023 | திருவள்ளுவர் ஆண்டு 2054



## முள்ளிவாய்க்காலும் காஸாவும்

## பாலஸ்தீன் தேசிய போராட்டம்

## அடுத்த ஆபத்து

## அசாத் மௌலானா ஏன் தப்பி ஓடினார்?

## மாலதி!!



# மாலதி!!

பவானி

பெண்களின் அடையாளம்!
வீரத்தின் விளைநிலம்!
அடிமை விலங்கை
அறுத்தெறிய
ஆயுதம் தூக்கியவள்!!

வரலாறு காணா
சாதனைகள் படைத்த
தமிழீழ பெண்களில்
முதன்மையானவள்!!

அடுப்படியில் சமைப்பதும்,
அலங்கார பதுமைகளாய்
தலையாட்டி
பொம்மைகளாய்
சந்ததியை உருவாக்குவதுமே
பெண்ணின் கடமையென
எழுதப்படாத
கோட்பாட்டை
எள்ளி நகையாடி
எடுத்தெறிந்தவள்!!

பெண்மையை கண்ணென
போற்றும் தாயுமானவன்
தேசியத் தலைவன் அணியில்
வீரமங்கையாய்
முதற் பாசறையில்
பயின்று
சாதனையாளராக
புறப்பட்டபுயலவள்!!

மென்மையானவள்,
மெல்லிடையாள், தென்றல்
காற்றென பெண்களை
கவி பாடி வர்ணித்த
காலமதில்
பூவான பெண்களும்
புயலாக மாறுவர்
காலத்தின் தேவையென
கரிகாலன் சேனையில்
காலடி பதித்தவள்!!

முதற் பாசறையின்
பெண்களோடு
கடும்
பயிற்சியில்
சாதனைகள் படைத்த
பூகம்ப காற்றவள்!!

மன்னார் மண்ணின்
மகளவள்!
மண் மீட்பு போரில்
களமாடி விதையான
முதற் பெண்ணவள்!

அமைதிப்படை என்ற
பெயரில்
நினைக்கவே முடியா
நீசத்தனங்களை செய்த
நீசர்கள் செயல் கண்டு
பொங்கியெழுந்தவள்!

10/10/1987அன்று
அமைதிப் படையுடனான
போரில்
விழுப்புண் ஏந்தி
வீரகாவியமானாள்
2ம் லெப் மாலதியாக.!

அவள் வழியில்
ஆயிரமாயிரம் சகோதரிகள்
கடலிலும்,தரையிலும்
சாதனைகள் பல புரிந்து
பெண்களின் வீரத்தை
உலகமே வியப்புற
செய்தனர்.

தேசிய தலைவரினால்
மதிக்கப்பட்டு,
வழிகாட்டப்பட்டு
சாதனைகள் படைத்த
பெண்கள்
யுத்த மௌனத்தின் பின்
அனுபவிப்பது
கொடுமையின் உச்சம்.

காலம் மாறும் என
காத்திருப்போம்.

மாத இதழ் | மணம்: 29
அக்டோபர்
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| முள்ளிவாய்க்காலும்... | 06 |
| கொலை மிரட்டலுக்கு... | 09 |
| தமிழரின் வாழ்வாதாரத்திலும்... | 11 |
| அசாத் மௌலானா.... | 14 |
| தங்கம் கடத்திய அலி... | 18 |
| அடுத்த.... | 21 |
| ஆபிரிக்காவில்... | 23 |
| ஈழத்தின் ஊடகப் பேராசான்... | 27 |
| உடன்கட்டை ஏற்றுதல்... | 30 |
| எதுவும் சில (கவிதை).... | 32 |
| வெளிநாட்டு வாழ்க்கை... | 33 |
| துரோகம்... | 35 |
| மன அழுத்தம்.... | 36 |
| புத்திசாலித்தனம்.. | 38 |
| தமிழர் தாயகத்தின்... | 39 |
| கணித மேதை... | 41 |
| பாலஸ்தீன தேசிய... | 43 |
| வலை( நெடுந்தொடர்) | 51 |
| அன்று நாம் யாழ். (கவிதை) | 54 |




# திருக்குறள்

**குறள் 515:**

"அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று"

**விளக்க உரை:**

செய்யும் வழிகளைஅறிந்து, இடையூறுகளைத் தாங்கிச் செய்து முடிக்க வல்லவனை அல்லாமல், மற்றவனைச் சிறந்தவன் என்றுக் கருதி ஒரு செயலைச் செய்யுமாறு ஏவக்கூடாது.












மணம் 28 அட்டைப்படத்தில் திலீபன் அண்ணாவின் படத்தைப் பார்த்தவுடன் மனம் கலங்கிப் போய்விட்டது.

அப்போது நான் சின்னப்பிள்ளை. ஆனாலும் ஏராளமான மக்கள் கோவில் வாசலில் திரண்டதும், எல்லோரும் கதறி அழுததும் மறக்கவே முடியாது.இப்போதும் நல்லூர் கோவிலை நினைத்தாலே அடிவயிற்றை பிசையும் கனமான நினைவுகள் அவை.

அதன் பின்னான சண்டைகளில் நாங்களும் அகப்பட்டிருக்கிறோம். அந்த வயதிலும் அமைதிப்படையைக் கண்டால் பயத்துக்குப் பதிலாக வெறுப்பு பீரிட்ட அனுபவத்தை இப்போதும் என்னால் உணர முடிகிறது. எவ்வளவு பெரிய தியாகங்களை எங்களுக்காக செய்தீர்கள். காலம் முழுவதும் நினைவில் நிற்பீர்கள். நான் கண்ணால் பார்த்ததை என் பிள்ளைகளுக்கு சொல்லித்தான் வளர்க்கிறேன்.

**-மாலினி சசிகுமாரன்**
**மொன்றியல், கனடா**

அம்முக்குட்டியின் கவிதை நன்று. உணர்வுபூர்வமாக இருந்தது. ஆசிரியர் தலையங்கம் யதார்த்தத்தை புட்டு வைக்கிறது. மனதில் எவ்வளவு உணர்வுகள் இருந்தாலும் ஒதுங்கியிருக்க பழகுகிறார்கள் எங்களது மக்கள் என்பதுதான் வேதனை.

மாணவர் சக்தி ஒரு பெரிய சக்தியல்லவா? ஏன் மாணவர்கள் உணர்வுடன் கிளர்ந்தெழுந்து அனைவரையும் ஒன்றிணைக்கக் கூடாது? இன்னும் கொஞ்சம் கவிதைகள் வந்தால் நன்று. கதையைத் தராமல் இம்முறை ஏமாற்றி விட்டீர்கள். திலீபனின் படங்களுக்கு இடம் தேவைப்படும் என்பதால் உங்களை மன்னிக்கிறோம். அடுத்த முறை ஏமாற்ற மாட்டீர்கள்தானே?

**-சிவசங்கரி கேதீஸ்வரன்**
**ஸ்ரஸ்பேர்க், பிரான்ஸ்**

ஒரு வயசு வர முன்பே அழுகையை நிற்பாட்ட என்று ஃபோனை அல்லது ரப்லெட்டை பிள்ளைகள் கையில் கொடுத்து விடுகிறார்கள் பெற்றவர்கள். அது இப்போது எவ்வளவு பேரிடரில் வந்து நிற்கிறது பார்த்தீர்களா? சிறுவர்கள் சமூக வலைத்தளங்களில் சிக்காமல் தடுப்பதில் பெரும் பகுதிப் பங்கு பெற்றவர்களுக்கு இருப்பதாகத்தான் நான் கருதுகிறேன். அடுத்தது ஆசிரியர்களுக்கு. இங்குள்ள சட்டங்கள் அடி போடுவதற்கு எதிராக இருக்கின்றனவே.. என்னைக் கேட்டால் அடியாத மாடு படியாது...

**-சிவசுப்பிரமணியம்**
**நாகநாதன்**
**கலிபோர்னியா,**
**அமெரிக்கா**




இந்தியா எங்களுக்குச் செய்த துரோகத்திற்கு எல்லா நாடுகளுடனும் புடுங்குப்பட வேணும்.இவங்களை மன்னிக்கவே கூடாது. சனல் 4 பற்றிய கட்டுரை விளங்கிக் கொள்ள முடியவில்லை. கொஞ்சம் இலகுவான நடையில் எழுதினால் நல்லது. முன்பு எங்கள் தேசத்தில் சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகம் என்ற வார்த்தையைக் கேட்பதே அரிது. அவ்வளவு கட்டுக்கோப்பாக வைத்திருந்தார்கள் பெடியள். இப்ப.. தங்கடை சுய நலத்துக்காக, உயிரைக் குடுத்தவங்களை எதிர்த்த எங்கடை சனத்தின்ர ஒரு பகுதியும் தான் இந்த அநியாயங்களுக்கு உடந்தை. எங்கடை தலையிலயே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டம். இப்ப ஐயோ எண்டா வருமோ அப்பா எண்டா வருமோ?

**-சிவபாக்கியம் முருகேசு**
**லண்டன்.**

# எழுநிலம்

கலாசாரப் பண்பாடு கட்டுரையைப் பார்க்க சிரிப்புத்தான் வருகிறது. வெளிநாடுகளில் தமிழ் விழாக்கள், திருமண விழா, கலாசார விழாக்களுக்கு பெண்கள் சேலை அணிந்து, பூச்சூடி மங்களகரமாகவும் ஆண்களில் இளையோர்கூட வேட்டி சட்டை அணிந்தும் வருவது பார்க்கவே நன்றாக இருக்கும். அதே ஆட்கள் ஊருக்கு போனால் கையில்லாத சட்டையும், அரைக் களிசானும், குளிர் கண்ணாடியும் அணிந்து கோமாளித்தனமாக நடந்து கொள்வார்கள், ஊரில் இருப்பவர்களோ ஏதோ இப்போது தான் வெள்ளைக்காரன் நாட்டைவிட்டு வெளியேறியது போல நடை உடையும் பந்தாவுமாகத்தான் பாதிக்கு மேல் இருக்கிறார்கள். இடையில் இந்தியனின் கும்மாள பெருவிழாக்கள் வேறு போதாக்குறைக்கு 'ம்' என்பதற்கு முன் இந்தியாவுக்கு 'ஷொப்பிங்' புறப்பட்டு விடுகிறார்கள். இந்த லட்சணத்தில் கலாசாரம் எங்கே வாழ்வது?

**-சிவகாமி சுப்பிரமணியம்**
**பெல்ஜியம்.**

கவிஞர்கள் பற்றி, எழுத்தாளர்கள் பற்றி எழுதுகிறீர்கள். நல்ல புத்தகங்களின் விமர்சனங்களை எழுதுவதால் தேடிப்பிடித்து வாசிக்கும் ஆர்வம் தூண்டப்படலாம் அல்லவா? தாயகத்தில் இளவயது பிள்ளைகளில் நல்ல தரமான படைப்பாளிகள்கூட இருக்கிறார்கள். இலைமறைகாயாக இருக்கும் அவர்களைக் கண்டறிந்து வெளிக்கொணர்ந்து வளர்த்து விடுவதும் எமது கடமையல்லவா? துப்பாக்கி முனைக்கு நிகராக பேனாவும் இருந்ததனால்தான் எங்கள் போராட்டம் இவ்வளவு வளர்ச்சி கண்டது. தேசியத்தலைவர் இந்த விடயங்களில் எவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். செய்வீர்களா?

**-நலன் மட்டுமே விரும்பி. ஈழநாடு.**

மாலினி, முல்லை இருவருமே நல்ல தரமான ஆக்கங்கள் தருகிறீர்கள். வளரட்டும் உங்கள் பணி. பொழிலின் கவிதைகளில் எப்போதும் ஒரு ஆக்ரோஷம் இருக்கும். அதுவும் நல்லதுதான். மொழிபெயர்ப்புக் கவிதைகளில் எனக்கு எப்போதும் ஈடுபாடு உண்டு. அவைகள் போர்க்கால உணர்வுகளை மக்களிடையே கொண்டு சேர்த்ததாக நான் நம்புகிறேன். இந்தக் கவிஞர்களும் மக்கள் உணர்வுகளைத் தட்டியெழுப்பும் கவிதைகளைத் தரட்டும். வாழ்த்துகள்.

**கவி நயன். (இளங்கோ) வளசரவாக்கம், தென்னிந்தியா.**

ஐங்கரன் விக்கினேஸ்வரா பலதும் பத்துமான உலக விவகாரங்களைத் தந்து வியப்பூட்டுகிறார். தேடிப்பிடித்து படிக்க வேண்டியவை எழுநிலத்தில் இலகுவாகக் கிடைத்து விடுகின்றன. குலதெய்வ வழிபாடு என்பது இந்தியாவிற்கு சரி. இவ்வளவு தீவிரமாக எம்மவர்கள் இருப்பதில்லை. மற்றவர்கள் கேட்டுக் கொண்டபடி, கதை, கவிதைகளின் எண்ணிக்கையை கூட்டுங்கள். தரமான கட்டுரைகளை வாசித்து மூச்சு முட்டுகிறது.

**-தயாபரன் விசுவலிங்கம், சிங்கப்பூர்.**

புதுப் பொலிவுடன் உங்கள் கைகளில்...
Ezhunilam.com

## ஆசிரியர் பக்கம்

# உணர்வுகள் எங்கே போயின?

1987 அக்டோபர் 21,22 காலப்பகுதியைஎமது மக்களுக்கு நினைவுபடுத்த வேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலையில் இருக்கிறோம் நாம். இந்திய அமைதிப்படையினர் எமது தேசத்தை ஆக்கிரமித்து, எம் மக்களை சரமாரியாகக் கொன்று குவித்துக் கொண்டிருந்த காலம் அது. அக்டோபர் 21 அன்று ஒரு தீபாவளி நாள். வேலைக்குச் செல்ல மக்கள் அச்சப்பட்டாலும் யாழ் போதனா வைத்தியசாலை ஒரு பாதுகாக்கப்பட்ட பிரதேசம் என்பதனாலும், இக்கட்டான நேரத்தில் வைத்தியசாலை பூரணமாக இயங்க வேண்டியதன் அவசியம் தெரிந்ததாலும் மருத்துவர்கள், தாதிகள், பணியாட்கள் யாரும் பின்னிற்கவில்லை.

முந்தைய நாளில், இந்தியப் படையின் அகோர எறிகணை வீச்சினால் குடாநாடு எங்கும் பரவலாக 70 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தனர். அந்த சடலங்களும் யாழ் வைத்தியசாலை பிணவறையில்தான் இருந்தன.

21ம் திகதி காலை 11:00 இற்கு யாழ் கோட்டையில் இருந்து எறிகணைத் தாக்குதலைத் தொடங்கி விட்டார்கள். 11:30 அளவில் யாழ் வெளி மருத்துவ பீடம்மீது எறிகணையொன்று விழ்ந்து வெடித்தது.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் அண்மித்து வர, நோயாளர், வைத்தியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் ஒருவித அச்சம் இருந்தது. ஆனாலும் உயிர்களைக் காக்க வைத்தியசாலை இயங்க வேண்டிய அவசியம் கருதி யாரும் வெளியேறவில்லை. மருத்துவமனைப் பகுதி யுத்த சூனியப் பிரதேசம் என்பதை இந்தியர்கள் மதிப்பார்கள் என்ற ஒரு நம்பிக்கை.

மதியம் 1:30 அளவில் மருத்துவமனையின் 8ம் இலக்கக் கூடத்தில் எறிகணை வீழ்ந்து வெடித்து ஏழு பேரின் உயிரைக் காவு கொண்டது. மாலை 4:20 அளவில், இந்தியப்படையினர் சரமாரியான துப்பாக்கிச் சூட்டுடன் வைத்தியசாலையின் உள்ளேயே புகுந்து விட்டனர்.மருத்துவர்கள், தாதிகள், ஆம்புலன்ஸ் சாரதிகள், நோயாளிகள், பணியாளர்கள் என்று யாரையும் விட்டு வைக்கவில்லை. அன்றும், மறுநாளும் வைத்தியசாலையினுள் துப்பாக்கிச் சூடுகளும், கிரனைட் எறிகணைத் தாக்குதல்களும் நடந்தேறின.

கைகளை தலைக்கு மேல் உயர்த்தியபடி சரணடைய வந்த வைத்தியர்கள் உட்பட 70 பேர் வரையில் கொல்லப்பட்டிருந்தனர். இரத்த வெள்ளத்தினுள் உயிரிழந்தவர்கள் போல் நடித்தவர்கள் தப்பினர். 50 இற்கும் மேற்பட்டவர்கள் கடும் காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

இது ஒரு காட்டுமிராண்டித்தனமான இனப்படுகொலை. பல மனித உரிமை அமைப்புகளும். நாடுகளும் இதற்கு கண்டனம் தெரிவித்தன. இன வெறியர்களான சிறிலங்கா அரசுகூட இது ஒரு மனிதாபிமானமற்ற படுகொலை என்று பதிவு செய்தது.இன்றுவரை இந்தப் படுகொலைகளுக்குப் பொறுப்பானவர்களை இந்திய அரசு தண்டிக்கவுமில்லை, கண்டிக்கவுமில்லை.

இப்போது, 2023 அக்டோபர் 21. யாழ்., வைத்தியசாலையில் இருந்து சிறிது தூரத்தில் இருக்கும் முற்றவெளியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமியிருந்தது வைத்தியசாலைப் படுகொலைகளை நினைவு கூருவதற்காக அல்ல. இந்தியாவினால் திட்டமிட்டு, அதே நாளில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இலவச இசைநிகழ்ச்சியைக் கண்டு களிக்கவே எமது மக்கள் அங்கு குழுமியிருந்தனர்.

அங்கு, விழாவின் ஆரம்பத்தில் ஒப்புக்கு செய்யப்பட்ட 'ஒரு நிமிட அஞ்சலி' யில் பலர் 'செல்ஃபி' எடுத்துக் கொண்டிருந்தது வேதனை. இதே இந்தியர்களால் பொற்கோவில் படுகொலை நாளன்று அந்த இடத்திற்கு அருகில் ஒரு நிகழ்ச்சி ஒழுங்கு செய்திருக்க முடியுமா? இனவழிப்பு நடந்த நாளில், அந்த இடத்திற்கு அருகில் களியாட்ட விழா ஒழுங்கு செய்ய மனசாட்சி உள்ளவர்களால் முடியுமா?

இந்த இசை நிகழ்ச்சியை ஒழுங்குசெய்த அருண் செல்வராஜ் என்பவன் ஒரு தமிழினத் துரோகி. இந்தியாவிற்காக உளவு வேலைகள் செய்பவன். கோத்தபாயவின் அடிவருடியும் கூட. இந்த இலவச இசைநிகழ்ச்சி ஏற்பாட்டாளன் பற்றியும் அவனின் பின்னணி பற்றியும் இந்திய முன்னணி ஆங்கில ஊடகங்கள் அம்பலப்படுத்தி விட்டன. இசை நிகழ்ச்சிக்கான பணம் எங்கிருந்து வந்தது என்பது புதிராக உள்ள நிலையில் கோத்தபாய சகோதரர்களில் ஒருவரின் முகவரும் நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவில் இருந்துள்ளார். ஆக, இந்தியாவும், இலங்கையுமாக திட்டமிட்டு தமிழ் மக்களின் உணர்வுகளை மழுங்கடிப்பது வெளிப்படை.

மக்களுக்கு எங்கே போனது அறிவு? எங்கள் அரசியல் வாதிகள் நினைவுநாளில் விழா நிகழ்த்துவதை தடுத்திருக்க வேண்டாமா? உக்ரைனில் ரஷ்யாவும், பாலஸ்தீனத்தில் இஸ்ரேலும் வைத்தியசாலைகள் மீது நடத்திய தாக்குதலை உலக அரங்கிற்கு எடுத்துச் சென்று உலகெங்கும் பேசுபொருளாக்கி விட்டன. உலக நாடுகளும் மனித உரிமை அமைப்புகள், சட்டத்தரணிகள், ஆர்வலர்கள், நீதவான்கள், அரசியல் தலைவர்கள் என்று பலதரப்பட்டோரும்இவை இனப்படுகொலை எனக் குரல் கொடுக்கின்றனர். தண்டனை வேண்டும் என வாதிடுகின்றனர்.

தொடரும் இனவழிப்பினுள் சிக்கிச் சிதையும் நாங்கள் எங்களுக்கு நிகழ்ந்த அநியாயத்தை ஒரு முக்கிய நாளாக நினைவுகூர்ந்து உலக அரங்கில் நினைவூட்டியிருக்க வேண்டாமா? பேசுபொருளாக்கி இருக்க வேண்டாமா?பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், சமூக வலைத்தளங்கள் என்று எல்லா மட்டத்திலும் நினைவு அஞ்சலி செலுத்தி, இளையோருக்கு நினைவூட்டி, நாங்கள் இழந்ததை, இழப்பதை உலகிற்கு தெரிவித்திருக்க வேண்டாமா? நாங்கள் செய்யவுமில்லை. அதற்கு இந்தியத் தூதரகம் போட்ட முட்டுக்கட்டையை உலகறியச் செய்யவும் இல்லை.

வளர்ந்த, வளர்முக என்று எந்த நாடுமே துக்க நாட்களில் களியாட்டத்திற்கு அனுமதி வழங்குவதில்லை என்பதை புரிந்து கொள்ள முடியாதளவு எங்கள் மக்களின் மூளைகள் மழுங்கடிக்கப்பட்டு இருக்கின்றனவா? எதிர்ப்புக்குரல் கொடுக்க வேண்டிய அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள் எல்லோரும் எங்கே போனார்கள்?

எங்களுக்குள்ளே ஊடுருவியுள்ள புல்லுருவிகள் எங்கள் மக்களிடம் எஞ்சியுள்ள தேசப்பற்றை கருவறுத்து எங்களை அழிக்க முனைகிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். எம்மை நாங்களே அரசியல் மயப்படுத்தாதவரையும் எங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தடுத்து நிறுத்த முடியாது.

பாரி



# முள்ளிவாய்க்காலும் காஸாவும்



கடந்த 07/10/23 அன்று, இஸ்ரேலினுள் நுழைந்து ஹமாஸ் படையினர் தாக்குதல் நடத்தியதன் பின்னர்,ஹமாஸ் படைப்பிரிவினரை முற்று முழுதாக அழித்தொழிப்பது என்ற முடிவுடன் ஹமாஸின் கட்டுப்பாட்டிலுள்ள காஸா மீது மிகக் கடுமையான தாக்குதல்களை நடத்துகிறது இஸ்ரேல். 20 நாட்களுக்கு மேலாக நடைபெறும் இந்தத் தாக்குதலில் நிலைகுலைந்து போயுள்ளது காஸா.

கண்டமேனிக்கு சிதறிக் கிடக்கும் உடல்களும், காயப்பட்டு அங்கங்கள் சிதைந்தவர்களின் மரணஓலங்களும், இடிந்து தகர்ந்துபோயுள்ள இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட கட்டடங்களும் இடைவிடாத எறிகணை, ராக்கெட் தாக்குதல்களும் முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் எமது மக்கள் சந்தித்த தாங்கொணாத் துன்பங்களை கண் முன்னே கொண்டு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

இம்மாதம் 7ம் திகதி ஆரம்பித்த இந்தச் சண்டை இன்று வரை தொடர்கிறது. இதுவரையில் இஸ்ரேல் ஆயிரக்கணக்கான ராக்கெட்டுகளை தொடர்ச்சியாக காஸா மீது ஏவியதில் 8500இற்கும் மேற்பட்ட உயிர்கள் பறிபோயிருக்கின்றன என்று அஞ்சப்படுகிறது. இதில் 3000 இற்கும் மேற்பட்டவர்கள் குழந்தைகளும், பெண்களும் என்கின்றது அல்ஜசீராவின் செய்திக் குறிப்பு. இஸ்ரேல் தரப்பிலும் 1400 பேர் அளவில் கொல்லப்பட்டுள்ளதாகவும் பலர் காணாமல் போயுள்ளதாகவும் இஸ்ரேலிய வானொலி தெரிவித்திருக்கிறது.

ஹமாஸின் கட்டுப்பாட்டில் இருக்கும் காஸா பிரதேசமெங்கும் ராக்கெட்டுகளும் குண்டுகளும் மழையாகப் பொழியப்படுவது சர்வதேச சமூகத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒருபுறம் இஸ்ரேலையும், எகிப்தையும் மறுபுறம் மத்தியதரைக் கடலையும் எல்லைகளாகக் கொண்டுள்ள காஸாவெறுமனே 41கிலோமீற்றருக்கு 10 கிலோமீற்றர் துண்டுப்பகுதியை மட்டுமே நிலப்பரப்பாகக் கொண்டுள்ளது. காஸாவில் 23 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர். உலகில் மக்கள் அடர்த்தியாக வாழும் பிரதேசங்களில் காஸாவும் ஒன்று.

இப்போது, காஸாவில்உள்ள ‘கான் யூனிஸ்’ பகுதியை தேர்ந்தெடுத்து குண்டுகளாலும், ராக்கெட்டுகளாலும், பீரங்கிகளாலும் பொழிந்து தள்ளுகிறது இஸ்ரேல். இங்கு வாழும் மூன்றரை லட்சம் பலஸ்தீனியர்களின் நிலைமை என்ன



என்பது தெரியவில்லை. ஏற்கெனவே காஸாவின் கடல், வான் பரப்புகள் இஸ்ரேலின் கடுமையான கண்காணிப்பின் கீழ் இருந்தன. இஸ்ரேலிய தாக்குதல்களின் விளைவாக காஸாவில் உணவு, மருந்துப் பொருட்கள், தண்ணீர், எரிபொருள் என்பனவற்றிற்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது, மின்சாரம் துண்டிக்கப்பட்டு விட்டது. 27/10/23 இலிருந்து தொலைத்தொடர்பு, இணையவழித் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டு விட்டன. இதனால்,அங்கு என்ன நடக்கிறது என்ற உண்மையான நிலவரம் வெளியுலகத்திற்குத் தெரிய வரவாய்ப்பில்லை.

சில நாட்களுக்கு முன், கிழக்கு காஸாவைத் தாக்கப் போகிறோம், தெற்கே இடம் பெயருங்கள் என்ற இஸ்ரேலின் அறிவிப்பை நம்பி மக்கள் தென் காஸாவிற்கு இடம் பெயர்ந்தனர். ஆனால், 17/10/23 அன்று, தெற்கு காஸாவின் 'அல் அஹ்லி அரப் வைத்தியசாலை' மீது ராக்கெட் தாக்குதலை நடத்தி 471 பேரின் உயிரைப் பறித்தது இஸ்ரேல்.

இப்போது எரிபொருள் இல்லாமல் மருத்துவ சேவை முற்றாகத் தடைப்பட்டும், சர்வதேசத்தின் கண்டனத்தையும் மீறி, எரிபொருள் விநியோகிக்க தடை விதிக்கிறது இஸ்ரேல். காஸாவில்எரிபொருள் இன்மையால் அந்தப் பிரதேசமெங்கும் கழிவு நீர் அமைப்புகளும் முடங்கிப் போயுள்ளன.

யார் இந்த ஹமாஸ்? பலஸ்தீனியர்களும் இஸ்ரேலியரும் ஏன் இத்தனை வருடங்களாக மோதிக் கொள்கிறார்கள்?

இந்த முரண்பாட்டை விளங்கிக் கொள்ள பல தசாப்தங்கள் பின்னோக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. 1914ம் ஆண்டுக்கு முன்பு வரை ஓட்டோமான் பேரரசின் ஒரு பகுதியாக இருந்திருக்கிறது பலஸ்தீனம். அப்போது அங்கு பெரும்பான்மையோர் பலஸ்தீனியர். சிறுபான்மையோர் யூதர்கள். முதலாம் உலகப் போரில் ஓட்டோமான் வீழ்ச்சியடைய, பாலஸ்தீனம் பிரிட்டன் வசம் வந்தது. பாலஸ்தீனத்தின் மிகப் புராதன நகரமான ஜெருசலேம் அங்கிருந்த முஸ்லிம், யூத, கிறிஸ்தவர்கள் என்று மும் மதத்தினருக்கும் முக்கியமான இடம்.

யூதர்களுக்கு ஜெருசலேம் பூர்வீக மண். அராபியர்க்கு அது அவர்கள் நிலம். ஜெருசலேமில் யூதக் குடியேற்றத்தை அவர்கள் கடுமையாக எதிர்த்தனர், தடுத்தனர். ஹிட்லர் காலத்தில் யூதர்களுக்கு நடைபெற்ற இனப்படுகொலைகளில் இருந்து தப்பிக்க யூதர்களில் கொஞ்சப்பேர் பாலஸ்தீனத்தில் தஞ்சமடைந்தனர். இதனால் யூத - அராபிய பிரச்சனை மேலும் மேலும் பெரிதாகியது. அராபிய மக்களின் கோபம் பிரிட்டிஷார் மீதும் திரும்பியது.

1947 இல் பாலஸ்தீனத்தை விட்டு விலக முடிவெடுத்த பிரித்தானியா பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரித்து பாலஸ்தீனியருக்கும், யூதருக்கும் கொடுத்துச் சென்றது. ஜெருசலேம் இருவருக்கும் பொதுவான சர்வதேச நகரமாக இருக்கும் என்பதை ஐநாவும் ஆதரித்தது. யூதர் அதனை ஏற்றுக் கொண்டாலும் அராபியர் ஏற்றுக்கொள்ளவில்லை. 1948 மே 14 அன்று, தான் தனிநாடாகியதாக இஸ்ரேல் அறிவித்தது. உடனேயே அப்போதைய அமெரிக்க அதிபர் ஹரி ட்ரூமன் அதனை அங்கீகரித்தார்.

இஸ்ரேல் தனிநாடாகியதை அரபுக்கள் கடுமையாக எதிர்த்தனர். சண்டை மூண்டது. பல அரபுநாடுகள் இதில் பங்குபற்றின. சண்டை 1949 வரை நீண்டது. அப்போது 7,50,000 வரையான பாலஸ்தீனியர்கள் நாட்டை விட்டு ஓட வேண்டியிருந்தது அல்லது வெளியேற்றப் பட்டனர். பாலஸ்தீனியர்களால் 'அல்நக்பா' (பேரழிவு) என்று குறிப்பிடப்படும் சம்பவம் இது. போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்டபோது, 'மேற்குக்கரை' (West Bank) ஜோர்டான் வசமும் காஸா எகிப்தின் பிடியிலும் இருந்தன.

ஜெருசலேமும் துண்டுபட்டது. மேற்கு இஸ்ரேலியர்களிடமும், கிழக்கு ஜோர்டானிய படைகளிடமும் வந்தன. அமைதி ஒப்பந்தத்திற்கு இடம் கொடுக்காமல் மாறிமாறி யுத்தங்கள் நடந்தன. 1967 இல் நடந்த 6 நாள் யுத்தத்தில் கிழக்கு ஜெருசலேம், மேற்குக் கரை, காஸா, சிரியாவின் 'கோலான் குன்றுகள்', எகிப்திய 'சினாய் தீபகற்பத்தின் பெரும்பகுதி' என்பன இஸ்ரேல் வசம் வந்தன.

2005 இல் காஸாவை விட்டு விலகினாலும் மேற்குக் கரையை இன்னமும் தன் பிடியில் வைத்திருக்கிறது இஸ்ரேல். பாலஸ்தீன அகதிகளின் சந்ததியினர் காஸா, மேற்குக் கரை, ஜோர்டான், சிரியா, லெபனான் எங்கும் பரந்து வாழ்கின்றனர். அவர்கள் தாயகம் திரும்ப அனுமதி மறுக்கிறது இஸ்ரேல். காஸாவை விட்டு தான் விலகினாலும் பாலஸ்தீனியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம் அது என்கிறது இஸ்ரேல். பதிலுக்கு தமது வருங்கால தாய்நாட்டின் தலைநகர் கிழக்கு ஜெருசலேம் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள் பாலஸ்தீனியர்.

2017 இல் இஸ்ரேலின் தலைநகர் ஜெருசலேம் என்பதை அப்போதைய அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அங்கீகரித்தார். ஆனால், பிரிட்டன், சீனா, ஜப்பான், ரஷ்யா போன்ற நாடுகள் அதை கடுமையாக எதிர்த்தன. கடந்த 50 ஆண்டுகளில் மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் எங்கும் ஏராளமான





யூதக் குடியேற்றங்கள் வந்துவிட்டன. 6 இலட்சத்துக்கும் மேற்பட்ட யூதர்கள் இப்போது இங்கே வாழ்கின்றனர். இவை சட்டவிரோத குடியேற்றங்கள் என்கிறது ஐநா. இஸ்ரேல் அது பற்றிக் கவலை கொள்ளவில்லை.

மேற்குக்கரையில் யூதர்களால் பாலஸ்தீனியர்கள் கொடுமைப்படுத்தப் படுகிறார்கள். நாளொன்றுக்கு குறைந்தது 3 தாக்குதல்களாவது நடைபெறுகின்றன. அரபுக்களும் திருப்பித் தாக்குகின்றனர். பாலஸ்தீன விடுதலைக்காகப் போராடுபவர்களில் பெரிய ஆயுதக் குழுவினர்தான் ஹமாஸ் (இஸ்லாமிய கிளர்ச்சி இயக்கம் -Harakatal Muqawama al Islamiya). அவர்களின் 1987 சாசனம் இஸ்ரேலை அழித்து அங்கு பாலஸ்தீனத்தை நிறுவுவதே நோக்கம் என்று சொல்கிறது.

இஸ்ரேலுக்கு தலைவலியாக இருக்கும் ஹமாஸ் தனது மக்களுக்கான நலத் திட்டங்களை உருவாக்கி செவ்வனே நடைமுறைப் படுத்துகிறது. அரபுப் பிரதேசங்களில் பாடசாலைகள், மருத்துவமனைகள் என்பனவற்றை கட்டி மக்களுக்கு உதவுகிறது. 2005இல் காஸாவிலிருந்து இஸ்ரேல் விலகியபின் அரசியலில் இறங்கிய ஹமாஸ், தேர்தலில் வெற்றிபெற்று கூட்டணிக் கட்சியிலும் இடம்பிடித்தது. பின்னர் 'ஃபதா' அமைப்பினருடன் ஏற்பட்ட முறுகலின் பின் அரசியலில் இருந்து விலகியது. 2007 இல் ஃபதா அமைப்பினரையும் அவர்கள் ஆதரவாளரையும் காஸாவில் இருந்து வெளியேற்றி, பின்னர் இன்றுவரை காஸாவை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

இஸ்ரேலில் நடக்கும் பல தற்கொலைத் தாக்குதல்களுக்கும் ராக்கெட் தாக்குதல்களுக்கும் ஹமாஸ்தான் காரணம். இரான் ஹமாஸ் அமைப்பிற்கு ஆயுதங்கள் வழங்கி உதவி செய்கிறது. லெபனானில் இருக்கும் 'ஹிஸ்புல்லா'அமைப்பும் ஹமாஸுக்கு ஆதரவளிக்கிறது.

ஹமாஸை பயங்கரவாதக் குழுவாக அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல், ஐரோப்பிய ஒன்றியம் என்பன அறிவித்துள்ளன. ஆனால் துருக்கி, ஹமாஸ் ஒரு பயங்கரவாதக் குழு என்பதை மறுக்கிறது. ஹமாஸ் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக எதிர்த்துப் போராடும் குழு என்கிறது அது. பதிலாக, இஸ்ரேல்தான் பயங்கரவாத நாடாக அறிவிக்கப்பட வேண்டும் என்கிறது அது. எகிப்து, கட்டார் போன்ற நாடுகளுக்கும் பயங்கரவாதம் என்பதில் உடன்பாடில்லை.

07/10/23 அன்று சர்வதேச புகழ்பெற்ற இஸ்ரேலிய உளவு அமைப்பான 'மொசாட்'டின் கண்களில் மண்ணைத்தூவி இஸ்ரேலினுள் புகுந்தது ஹமாஸ். அங்கு அவர்கள் சகட்டுமேனிக்கு நடத்திய ராக்கெட் தாக்குதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். பலர் காணாமல் போயினர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். பெருமளவான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டது. தவிர, 150 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் ஹமாஸினால் சிறைப்பிடித்துச் செல்லப் பட்டனர்.

பதில் தாக்குதலைத் தொடங்கிய இஸ்ரேல் ஹமாஸை முற்றாக அழிக்கவென 'நிலி' என்ற தனிப்படையொன்றையும் ஆரம்பித்துள்ளது.

இன்றுவரை உக்கிரமாக நடைபெறும் போரில் மனிதாபிமான உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் வழி கூட கிடைக்காமல் தவிக்கிறார்கள் பலஸ்தீனியர்கள். மருத்துவ உதவியின்றி அவர்கள் செத்தாலும் பரவாயில்லை, எரிபொருள் அனுப்ப விடமாட்டேன், அதை ஹமாஸ் தமக்கெதிராக பயன்படுத்தும் என்கிறது இஸ்ரேல்.

சண்டையை நிறுத்தி மக்களைக் காப்பாற்ற கனடா கொண்டுவந்த 'மனிதாபிமான போர் நிறுத்தம்' மசோதா தோற்றுப்போக, ஐநாவின் தீர்மானம் வெற்றி கண்டிருக்கிறது. இதற்கு சட்ட அங்கீகாரம் உண்டு. அதாவது ஐநா இறங்க வேண்டிய அவசியமில்லை. உறுப்பு நாடுகள் தீர்மானத்தை அமல் படுத்த முடியும். அரபு நாடுகளுக்கு, குறிப்பாக பாலஸ்தீனத்திற்கு ஆதரவாயிருக்கும் இந்தியா 'அதிர்ச்சியளிக்கிறது' என்று மட்டும் தனது வருத்தத்தை இஸ்ரேலிடம் பதிவு செய்திருக்கிறது.

அரபு நாடுகளை வலிந்து போருக்கு இழுக்கத் தயாராக இருக்கும் இஸ்ரேல் சிரியா மீதும் விமானத் தாக்குதலையும் ஏவுகணைத் தாக்குதலையும் நிகழ்த்தியுள்ளது. இரண்டு வாரங்களில் நான்கு தடவைகள் நடைபெற்ற தாக்குதலில் ஒரு விமானநிலையம் சேதமாக்கப்பட்டு மூடப்பட்டுள்ளது. 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். இராணுவ தலைமையகத்தின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. இது, இஸ்ரேலைச் சூழவுள்ள அரபு நாடுகளும் யுத்தத்தில் குதிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே காஸாவின் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் நிவாரணத்தில்தான் வாழ்க்



கையை ஓட்டினர். இறுதி யுத்தம் நடந்தபோது முள்ளிவாய்க்கால் நிலை இருட்டடிப்புச் செய்யப்பட்டது. இங்கு நிலைமை அப்படியல்ல. பாலஸ்தீனியர்களுக்கு எதிரான யுத்தம் 27/10/23 வரையில் வெளியுலகிற்கு தெரிந்திருக்கிறது. ஐநாவும் உடனேயே தீர்மானத்தை நிறைவேற்றி விட்டது. ஆயினும், தேவையான நேரத்தில் மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் கிடைக்குமா? அல்லது இறுதி யுத்தத்தில் எங்களை கவனிக்காது விட்டதுபோல உலகநாடுகள் கண்டனம் தெரிவிப்பதோடு மட்டும் விட்டுவிடுமா? அல்லது தம்முடைய நலனைக் கருத்திற் கொண்டு நாடுகள் பிரிவுகளாக நின்று தமக்குள் அடித்துக்கொள்ளுமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



புனிதப்ரியா
பன்னீர்செல்வம்

# கொலை மிரட்டலுக்கு பயந்து ராஜினாமா

## மோசமான முன்னுதாரணம்?

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி டி. சரவணராஜா தனது இராஜினாமா கடிதத்தை நீதிச்சேவை ஆணைக்குழுவில் கடந்த சில வாரங்களுக்கு முன் சமர்ப்பித்திருந்தார். தனக்கு கடுமையான கொலை மிரட்டல்கள் வந்துள்ளதாகவும், அதனால் ஏற்பட்ட மன அழுத்தத்தால் பதவி விலகுவதாகவும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதி டி. சரவணராஜா முல்லைத்தீவு மாவட்டத்தில்

மாவட்ட நீதிபதி பதவிக்கு மேலதிகமாக மாஜிஸ்திரேட், குடும்ப நீதிமன்ற நீதிபதி, முதன்மை நீதிமன்ற நீதிபதி, சிறு தகராறு நீதிமன்ற நீதிபதி, சிறார் நீதிமன்ற நீதிபதி ஆகிய பல பதவிகளை வகித்து வரும் ஒரு முக்கியமான நபர் ஆவார்.

இந்த நாடு நிர்வாகம், அரசியலமைப்பு மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று காரணிகளால் ஆளப்படுகிறது. நிறைவேற்று அதிகாரம், அரசியலமைப்பு மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று முக்கிய தூண்கள் மீது ஜனநாயகத்தின் மாபெரும் கட்டிடம் தங்கியுள்ளது.






அப்போது, ஜே. ஆர். ஜயவர்தன ஜனாதிபதியாக இந்த நாட்டிற்குப் பொறுப்பாக இருந்த போது, குறிப்பிட்ட நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்புக்குப் பின், குண்டர்கள் தீர்ப்பு வழங்கிய நீதிபதியின் வீட்டிற்கு முன்னால் சென்று நீதிபதியின் வீட்டின் மீது கல்லெறிந்து, தகாத வார்த்தைகளை சொல்லி கத்தி கூச்சலிட ஆரம்பித்தனர்.

இந்தக் குழுவில் அன்றைய காலத்தில் ஐ.தே.க. கட்சியை ஆதரித்த குண்டர்கள், தேசிய தொழிலாளர் சங்க உறுப்பினர்கள், ஜே.வி.பி வழக்கில் முக்கிய பிரதிவாதிகளாகவும் பின்னர் அந்த முன்னணிக்கு துரோகம் செய்தவர்கள் என்போர் இருந்தனர்.

ஆயிரத்துதொள்ளாயிரத்து எழுபதுகளின் இறுதியில்,இலங்கையின் பிரதம நீதியரசராக நெவில் சமரக்கோன் இருந்தார். அவர் ஜே.ஆர்இன் தனிப்பட்ட நண்பர். பிரதமரான ஜே. ஆர். ஜயவர்தன அரசியலமைப்பை மாற்றி, இந்த நாட்டின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக நெவில் சமரக்கோன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவிருந்தார்.



ஆனால் இந்த பிரதமநீதியரசரான நெவில் சமரக்கோன் ஜே. ஆரின் அரசியல் முடிவுகளையும் நீதித்துறை முடிவுகளையும் ஒன்றாக்கிக் கொள்ளவில்லை. இதனால், ஜனாதிபதி மற்றும் பிரதம நீதியரசர் சமரக்கோன் ஆகியோருக்கு இடையில் நெருக்கடிகள் ஏற்பட்டன.

பொதுவாக இது போன்ற நெருக்கடியில், நிறைவேற்று அதிகாரமே வெற்றி பெறும். அதன்படி, தோல்வியடைந்த நெவில் சமரக்கோன் பதவி விலகி வீட்டுக்குச் சென்றார். பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க ராஜபக்ச காலத்தில் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். இவருடன் ராஜபக்சர்களுக்கு முரண்பாடுகள் காணப்பட்டன. அதுமட்டுமல்லாது 1948 இல் சுதந்திரம் அடைந்ததில் இருந்து இந்த நாட்டின் நீதித்துறையை யாராலும் பெரிய அளவில் தடுக்க முடியவில்லை.

நீதிமன்றத்தை அவமதித்ததற்காக எஸ்.பி. திஸாநாயக்க, ரஞ்சன் ராமநாயக்க போன்றோரை சிறையில் அடைத்ததன் மூலம் நீதிமன்றம் அதன் அதிகார உணர்வையும் ஸ்திரத்தன்மையையும் பல சந்தர்ப்பங்களில் எமக்கு நினைவூட்டியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி டி. சரவணராஜாவின் பதவி விலகலுக்கான காரணம் கொலைமிரட்டல் என்பது மிகத் தெளிவானது. எங்களுக்குத் தெரிந்தவரை, ஒரு நீதிபதிக்கு மரண அச்சுறுத்தல்கள் பின்வரும் தரப்பினரிடமிருந்து வரலாம்.

அதாவது,

★ பாதாள உலகில் இருந்து. (பொட்ட நௌபர் என்ற பிரபல போதைக்கு அடிமையானவர், தனது வழக்கை விசாரித்த நீதிபதி திரு. சரத் அம்பேபிட்டியவை சுட்டுக் கொன்றார். பொட்ட நௌபர் இந்த ஒப்பந்தத்தை வழங்கியபோது, அவர் சிறையில் இருந்தார். மிகக் குறைந்த விலைக்கு நீதிபதியைக் கொல்லும் ஒப்பந்தம். இராணுவத்திடம் இருந்து தப்பிய நான்கு முட்டாள்களால் விலை போனது.அதனால் குற்றம் உடனடியாக தெரியவந்தது)

★ அவரது தனிப்பட்ட எதிரிகளால்.

★ தனக்கு ஏற்றாற்போல் நீதிபதியை வளைக்க முடியாது என்று நீதிபதி மீது கோபத்தில் இருக்கும் அரசியல்வாதிகளால்..

மேற்கூறிய வகை விடயங்களைத் தவிர, வேறு எந்தத் தரப்பினரும் நீதிபதியைக் கொல்ல நினைக்க மாட்டார்கள். சாமானியர்கள் கோர்ட்டில் இருமினாலும், நாள் முழுவதும் கூண்டோடுதான் இருக்க வேண்டும். கோர்ட்டில் தூங்கினாலும் அந்த தண்டனையை தான் அனுபவிக்க வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி டி. சரவணராஜாவை கொல்ல இந்தியாவின் 'றோ ' அல்லது இஸ்ரேலின் 'மொசாட்' அல்லது அமெரிக்காவின் "CIA' இந்த நாட்டிற்கு வராது. எனவே, நீதிபதி ராஜினாமா செய்ததன் பின்னணியில் உள்ள கதையை கண்டறிந்து, இதற்கு காரணமானவர்களை பிடித்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். நீதிபதிகள் ஒருவருக்கு ஒருவர் பயந்து பதவி விலகுவது மிகவும் மோசமான முன்னுதாரணமாகும். நீதிபதி சரவணராஜாவின் ராஜினாமாவை நீதிச்சேவை ஆணைக்குழு ஏற்காமல், அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கடுமையான பாதுகாப்பு அளித்து அவரை தொடர்ந்து பணியில் அமர்த்த வேண்டும் என்பதே எங்களது கருத்து.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான வல்லபாய் படேல், சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் நேருவிடம், இந்தியாவில் ஒரு மாநிலம் கூட தனி நாடாக இருக்கக் கூடாது என்று கூறினார். இந்தியாவின் மத்திய அரசில் இருந்து ஒரு மாநிலம் பிரிந்தால் மற்ற மாநிலங்கள் அனைத்தும் பிரிந்து 24 தனி மாநிலங்கள் இந்தியப் பகுதியில் உருவாக்கப்படும் என்று படேல் குறிப்பிட்டுள்ளார்.

இப்படி ஒரு நீதிபதி இப்படி ராஜினாமா செய்தால், இதுபோன்ற மிரட்டல் உள்ள மற்ற நீதிபதிகளும் வரிசையாக ராஜினாமா செய்வார்கள். அப்போது சட்டத்தின் ஆட்சி, காடுகளின் விஷ ஜந்துக்கள் விசாரணைக்காக தீர்ப்பு இருக்கைக்கு வரும் நிலை ஏற்படும்.

பொதுவாக மரண அச்சுறுத்தல்களுக்கு அஞ்சும் அதிக நீதிபதிகளைக் கொண்ட நாடு கொலம்பியா. இந்த நாட்டில் போதைப்பொருள் வியாபாரிகள் நாட்டை ஆள்கிறார்கள், பெரும்பாலான அரசியல்வாதிகள் அந்த போதைப்பொருள் வியாபாரிகளின் ஊழியர்களாகவே மாறிவிட்டனர். இலங்கை அப்படி இருக்கக் கூடாது.



செல்வி

# தமிழரின் வாழ்வாதாரத்திலும் கை வைக்கும் சிங்கள பேரினவாதம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதான பேசு பொருளாக மாறியிருக்கும் விடயம் மயிலத்தமடு மாதவணை மேய்ச்சற்தரை விவகாரம்.

இலங்கையில் யுத்தம் மௌனிக்கப்பட்டு 14 ஆண்டுகள் கடந்தாலும் தமிழ் மக்கள் தாம் வாழும் தமிழ் தேசிய பரப்பினுள் போராட்டமே தமது வாழ்வாகிப் போன நிலையில், தினம்தோறும் பல்வேறுபட்ட பிரச்சனைகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

## சூடுபிடிக்கும் மயிலத்தமடு, மாதவணை மேய்ச்சற்தரை விவகாரம்:



பொதுவாக, அண்மைக் காலங்களில் இனமுரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தும் விவகாரங்களும் நில, பண்பாட்டு ஆக்கிரமிப்புகளும் சிங்கள பௌத்தமயமாக்கலும் என பல்வேறுபட்ட பிரச்சனைகள் தமிழ் தேசியப் பரப்பினுள் பேசும் பொருளாக கூர்மைப்படுத்தப்பட்டு தமிழ் மக்களின் வாழ்வுடமைகளை கேள்விக்கு உட்படுத்தியுள்ளது.

அந்த வகையில் மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவணை மேய்ச்சற்தரை விவகாரம் பெரும் பேசு பொருளாக மாறியிருப்பதுடன், பல நாட்களையும் கடந்து தமது வாழ்வாதாரத்துகான மேய்ச்சற்தரையினை கோரியும், அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களின் நடவடிக்கைகளை நிறுத்தக்கோரியும், அப்பகுதி பண்ணையாளர்கள் தமக்கான தீர்வு கிடைக்கும் வரை சுழற்சி முறையிலான உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

மயிலத்தனை மாதவனை மேய்ச்சல் தரை எனப்படுவது மட்டக்களப்பின் எல்லையில் மதுறு ஓயாவின் கிளையாகிய மாந்தரி ஆற்றை எல்லையாகக் கொண்ட ஒரு செழிப்பான மேச்சல் நிலம் ஆகும்.மயிலத்தமடு பிரதேச காணியானது கோரளைப்பற்று தெற்கு மற்றும் ஏறாவூர்பற்று ஆகிய இரு பிரதேசசெயலாளர் பிரிவுட்குட்பட்ட காணிகளாகும்.

இவற்றுள் ஏறாவூர் பற்றினுள் சுமார் 4000 ஏக்கர் காணிகளும், கோரளைப்பற்று தெற்கில் சுமார் 1000ஏக்கர் காணிகளும் அடங்கலாக மயிலத்தமடு தரை பண்ணையாளர்களால்



பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஏனைய பகுதி, மேய்ச்சற்தரை அற்ற பாரிய காட்டுப்பகுதிகளாக காணப்படுகின்றன.

இந்த 5000 ஏக்கர் மேய்ச்சல் நிலம் பாரியதொரு அரசியல் பின்புலத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் அடாத்தான குடியேற்றத்தினால் தினந்தோறும் அபகரிக்கப்பட்டு வருகிறது. பண்ணையாளர்களது உடமைகளும் நாளுக்கு நாள் எரிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் வருவதுடன் பண்ணையார்களின் உயிருக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில், தங்களது கால்நடைகளையும் கால்நடை மேய்ப்பில் ஈடுபட்டு வரும் பண்ணையாளர்கள் தமது உயிரையும் பாதுகாப்பதென்பது பாரிய சவாலானதொன்றாகவும் அபாயகரமான ஒன்றாகவும் தற்பொழுது மாறிவருகின்றது.

தமது மேய்ச்சல் தரையை ஆக்கிரமித்திருக்கும் ஆக்கிரமிப்பாளர்களின்பயிர்களை மாடுகள் மேயும் பொழுது, அல்லது அப்பகுதி காடுகளுக்குள் மாடுகள் ஊடறுத்து செல்லும் பொழுது ஆக்கிரமிப்பாளர்களினால் தமது மாடுகள் பிடிக்கப்படுவதாகவும், அல்லது கொல்லப்படுதல் அல்லது காணாமல் ஆக்கப்படுதல் போன்ற செயற்பாடுகள் அதிகளவில் ஆக்கிரமிப்பாளர்களால் மேற்கொள்ளப்படுவதாகவும்

> **மயிலத்தமடு மாதவணை மேய்ச்சற்தரை விவகாரம் பெரும் பேசு பொருளாக மாறியிருப்பதுடன், பல நாட்களையும் கடந்து தமது வாழ்வாதாரத்துகான மேய்ச்சற்தரையினை கோரியும், அத்துமீறிய பயிர்ச் செய்கையாளர்களின் நடவடிக்கைகளை நிறுத்தக்கோரியும், அப்பகுதி பண்ணையாளர்கள் தமக்கான தீர்வு கிடைக்கும் வரை சுழற்சி முறையிலான உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.**

பண்ணையாளர்கள் கூறுகிறார்கள்.அவ்வாறு இதுவரையில் சுமார் 5000 மாடுகள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுவாக மேய்ச்சல் தரையை ஆக்கிரமிப்பது என்பது கிழக்கின் பொருளாதாரத்தை அழிக்கும் ஒரு நடவடிக்கை. அது மட்டுமின்றி குடியேற்றம், பயிர்ச்செய்கை என்கின்ற போர்வையில் தமிழர்களின் மரபுவழி தேசியப்பரப்பு சுருக்கப்பட்டு சிதைக்கப்படுவதன் மூலம் காலப்போக்கில் தேசிய இருப்பை அழிப்பதே பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரலாக கருத முடியும்.இவ்வாறனதொரு நிகழ்ச்சி நிரல் தமிழர் தேசியப்பரப்பில் திட்டமிட்டு அரங்கேறி வருவது கண்கூடு.

இதன் அடிப்படையில், மயிலத்தமடு மாதவனையில் கடந்த 2020ஆம் ஆண்டு, அப்போதிருந்த கிழக்கு மாகாண ஆளுரின் ஏற்பாட்டில்,600 இற்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் கொண்ட சிங்களக் குடியேற்றம் ஒன்று சேனைப் பயிர்ச்செய்கை என்ற போர்வையில் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டு பாரிய ஆக்கிரமிப்பு நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர்.

2012ம் ஆண்டு தொடக்கம் 2017ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாகாண சபையினூடாக மேய்ச்சற்தரை விவகாரத்தில் அத்துமீறிய மேய்ச்சற்தரை ஆக்கிரமிப்பாளர்களை கட்டுப்படுத்தி, அவர்களுக்கெதிராக வழக்குகள் தொடரப்பட்டு ஆக்கிரமிப்பாளர்களின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், 2019க்கு பின்னராக அதன் நிலவரம் வீரியம் பெற்றதென்றே குறிப்பிட முடியும்.





**2012ம் ஆண்டு தொடக்கம் 2017ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாகாண சபையினூடாக மேய்ச்சற்தரை விவகாரத்தில் அத்துமீறிய மேய்ச்சற்தரை ஆக்கிரமிப்பாளர்களை கட்டுப்படுத்தி, அவர்களுக்கெதிராக வழக்குகள் தொடரப்பட்டு ஆக்கிரமிப்பாளர்களின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப் பட்டிருந்தாலும், 2019க்கு பின்னராக அதன் நிலவரம் வீரியம் பெற்றதென்றே குறிப்பிட முடியும்.**

மட்டக்களப்பு மாவட்டமானது பால் உற்பத்தி மற்றும் விவசாயத்திற்கும் பெயர் போன மாவட்டமாகும். இங்கு 7க்கு குறையாத கால்நடைப் பண்ணையாளர் சங்கங்களும் 250,000 லட்சத்திற்கு குறையாத கால் நடைகளும் இருப்பதாக தெரிவிக்கப்படும் நிலையில் பால் உற்பத்தியின் கேந்திரமாக மயிலத்தமடு பிரதேசமே இருக்கிறது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட முடியும். ஆனால் முறையான மேய்ச்சற்தரை இன்மையால் தற்போது பால் உற்பத்தியின் அளவு குறைந்து வருவதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கும் நிலையில், மாடுகளை மேய்கின்ற மேட்டுநில வசதி மயிலத்தமடுவில் காணப்படுவதால் உடனடியாக சட்டவிரோத குடியிருப்பாளர்களை அகற்றி தமது மேய்ச்சற்தரைப் பகுதியை தந்துதவுமாறு கோரி தற்போது போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.



மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்தவரையில், தேசியம் சார்ந்து இரு அரசியல்வாதிகளும் அரசாங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மூவரும் உள்ளனர். தேசியம் சார்ந்து செயற்படும் மக்கள் பிரதிநிதிகள் இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி வரை கொண்டு சென்று வாக்குறுதிகளை வழங்கியிருந்தாலும் பண்ணையாளர்களுக்கான பாதுகாப்பும் நிரந்தர தீர்வும் இன்னும் எட்டப்படவில்லை என்பது வேதனை.

ஆனாலும், எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயத்திலும் பால் உற்பத்தியிலும் பொருளாதாரத்தில் பாரியதொரு பாதிப்பினையும் பெரும் சிக்கலையும் ஏற்படுத்தப்போகின்ற இம் மக்கள் பிரச்சனைக்கு நிரந்த தீர்வொன்றை கட்சிபேதம் கடந்து ஓரணியில் நின்று தீர்க்கமான முடிவொன்றை ஏற்படுத்தா தவிடத்து, இது எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் பொருளாதாரத்தில் பாரிய நெருக்கடியையும் சிக்கலையும் ஏற்படுத்தும் என்பதே உண்மை.




டி.பி.எஸ்.ஜெயராஜ்

# அசாத் மௌலானா ஏன் தப்பி ஓடினார்?

ஹன்சீர் அசாத் மௌலானா சனல் 4 ஆவணப்படத்தில் இடம்பெற்ற முக்கிய விசில்ப்ளோவர் சட்டவிரோதமான அல்லது ஒழுக்கக் கேடான செயலில் ஈடுபடுவதாகக் கருதப்படும் ஒருவர் அல்லது அமைப்பு குறித்து தெரிவிக்கும் நபர்ஆவார். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சஷ, அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே மற்றும் பிள்ளையான் என பரவலாக அறியப்படும் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் ஆகியோருக்கு எதிராக அசாத் மௌலானா சில திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டார்.

கோத்தாபய, சுரேஷ் மற்றும் பிள்ளையான் ஆகியோர் குற்றச்சாட்டை மறுத்துள்ளனர்.வெளிநாட்டில் அரசியல் தஞ்சம் அடைவதற்காக மௌலானா பொய்யான கதையை உருவாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அவர் ஒரு வருடத்திற்கு முன்னர் இலங்கையிலிருந்து தப்பிச் சென்று ஐரோப்பிய நாட்டில் புகலிடம் கோரியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பத்தியில், அசாத் மௌலானா எவ்வாறு, ஏன் இலங்கையை விட்டு வெளியேறி மேற்குலகில் அகதியானார் என்ற விடயம்தான் மையமாக இருக்கும். அசாத் மௌலானாவின் அனைத்துக் குற்றச்சாட்டுகளும் இன்னும் சரிபார்க்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை என்பதை ஆரம்பத்தில் வலியுறுத்த வேண்டும். மேலும், குறிப்பாக மேஜர் ஜெனரல் சாலேக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்களால் அவை பொய்யானவை என்று மறுக்கப்பட்டது.

புத்தளம் கரடிப்பூவலில் உளவுத்துறைத் தலைவருக்கும் தேசிய தௌஹீத் ஜமாத் தலைவரும் உயிர்த்தஞாயிறு குண்டுவெடிப்புக்குப் பின்னணியில் இருந்தவருமான சஹ்ரான் ஹாஷிமுக்கும் இடையே நடந்த சந்திப்பை மையமாக வைத்து சாலே மீதுமௌலானாவால் குற்றச்சாட்டுசுமத்தப்பட்டிருந்தது. ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ள மௌலானாவின் குற்றச்சாட்டு அந்த சந்திப்பின் அடிப்படையில் அனுமானம் ஆகும்.எவ்வாறாயினும், சந்திப்பு இடம்பெற்றதாகக் கூறப்படும் வேளையில் அவர் இலங்கையில் இருக்கவில்லை என்பதை சுரேஷ் சாலே மறுத்துள்ளார் என்பதை நேர்மையானமுறையில் கூறப்பட வேண்டியது அவசியமாகும்அது

சாலேவால் நிரூபிக்கப்பட்டால், அசாத் மௌலானாவின் முக்கிய குற்றச்சாட்டு 'துல்லியமற்றசொல்லாக' பொய்யாக மாறும். அதன்பின் அவரது நம்பகத்தன்மை பறிபோகும்.

இந்தப் பின்னணியில்தான் அசாத் மௌலானா இலங்கையிலிருந்து தப்பிச் சென்றதற்கான காரணங்களையும், அவர் வெளிநாட்டில் தஞ்சம் புகுந்த விதமும் அலசப்படுகிறது. அசாத் மௌலானாவுடன் இதுவரை என்னால் உரையாட முடியவில்லை, ஆனால் அவரது கிராமமான மருதமுனையில் வசிப்பவர்கள் முதல் அவரது வழக்கின் அனைத்து அம்சங்களையும் நன்கு அறிந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆர்வலர்கள் வரை பல தகவலறிந்த ஆதாரங்களுடன் தொடர்பு கொண்டு வருகிறேன்.

மௌலானா பல அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களிடம் கூறியதாகக் கூறப்படும் ஒரு நீண்ட அறிக்கையின் சாரங்களையும் படித்துள்ளேன்.இதன் அடிப்படையில்

அசாத் மௌலானாவின்அறிக்கை என்பதை மீண்டும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தக் கதை சுரேஷ், பிள்ளையான் போன்றவர்களின் நிலைப்பாடுகளுக்கு



எதிரானது. பிள்ளையானின் இன்றியமையாத உதவியாளர் முன்னர் கூறியது போல், மொஹமட் ஹன்சீர் எனும் அசாத் மௌலானா பிள்ளையானுக்கு இன்றியமையாத உதவியாளராக இருந்தார். அவர் பிள்ளையானின் தனிப்பட்ட செயலாளராகவும் ரி.எம்.வி.பி. யின் பேச்சாளராகவும் இருந்தார்.

மௌலானா தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் நியாயமான புலமை பெற்றிருந்ததால், சில அரசியல் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரைக் கையாளும் போது பிள்ளையான் நம்பியிருந்த மொழி பெயர்ப்பாளர் மற்றும் உரை பெயர்ப்பாளராக இருந்தார்.

பிள்ளையான் தனது 'தமிழ்'பிரதிநிதிகள் பலரை விட 'முஸ்லிம்' ஹன்சீரை நம்பினார்.

இது சிலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. இலங்கைப் புலனாய்வுப் பிரிவினர் ரி எம் வி பி க்கு மாதந்தோறும் 35 இலட்சம் செலுத்திக் கொண்டிருந்த போது, அதனை ரி.எம்.வி.பி. சார்பாக வழமையாக வசூலித்தவர் மௌலானா. ஹன்சீரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் பெரிய தொகையான ரி. எம்.வி.பி. பணமும் சில நேரங்களில்வைப்பில் இடப்பட்டது .

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் பிள்ளையான் ஐந்து வருடங்களுக்கும் மேலாக சிறையில் இருந்த போது, நீதிமன்ற அனுமதியுடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் பிள்ளையானை சந்திப்பது அசாத் தான். மௌலானா ரி.எம்.வி.பி வட்டாரங்களுக்குள் என்ன நடக்கிறது என்பதை பிள்ளையானுக்குத் தெரிவித்ததோடு, பிள்ளையானின் அறிவுறுத்தல்களையும் கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கினார். பிள்ளையானின் வழக்கு தொடர்பான அனைத்து சட்டப் பணிகளையும் மௌலானா ஒருங்கிணைத்தார்.

ஹன்சீர் தனது உறவினரான பாணந்துறையைச் சேர்ந்த பாத்திமாவை மணந்துள்ளார். இவர்களுக்கு ஆயிஷா என்ற மகளும், முபாரக் என்ற மகனும் உள்ளனர். தெஹிவளை எபனேசர் பிளேஸில் குடும்பம் வசித்து வந்தது.பிள்ளையானின் உதவியாளராக கடமையாற்றிய மௌலானா, சைக்கிள் அசெம்பிள் செய்தல் மற்றும் மொத்தமாக குடிநீர் விநியோகம் போன்ற வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்.

அவரது அரசியல் தொடர்புகளைப் பயன்படுத்தி, அசாத் ஒரு 'செல்வாக்கான வியாபாரி' யாகவும் இருந்தார். மௌலானாவின் மாத வருமானம் ஏழு இலக்கங்களில் இருந்ததாக கூறப்படுகிறது.2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு வரை ஹன்சீருக்கு எல்லாமே கவலையாக இருந்தது. மௌலானாவின் சாட்சியத்தின்படி, தேவாலயங்கள் மற்றும் சுற்றுலா ஹோட்டல்கள் மீதான கொடூரமான தாக்குதல்களுக்கு சஹ்ரானும் ஏனைய என் ஜே ரி செயற் பாட்டாளர்களும் காரணம் என்று தெரிந்ததும் அவர் வருந்தினார்.

சனல் 4 படத்தில் ஹன்சீர் கூறியது போல், அவர்சாலே மற்றும் சஹ்ரான் இடையே முதல் சந்திப்பை ஏற்பாடு செய்ததாக கூறப்படுகிறது. குண்டு வெடிப்பு நடந்த அன்று சுரேஷ் சாலே தன்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இருந்து ஒருவரை ஏற்றிச்செல்லுமாறு கூறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அப்போது மட்டக்களப்பில் இருந்ததால் ஹன்சீரால் அவ்வாறு செய்ய முடியவில்லை.

தெஹிவளை ஹோட்டல் வெடிப்பில் இறந்த குண்டுதாரி தாஜ் சமுத்திரத்தில் இருந்தவர் என்பது பின்னர் தெரியவந்தது.குண்டு வெடிப்புக்குப் பிறகு சிறையில் இருந்த பிள்ளையானைச் சந்தித்தபோது,

ரி எம் வி பி தலைவர், இதையெல்லாம் பற்றி அமைதியாக இருக்குமாறும், யாரிடமும் பேச வேண்டாம் என்றும் கூறியதாகக் கூறப்படுகிறது.

2019 நவம்பரில் கோத்தா பய ராஜபக்ச ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். குண்டுவெடிப்புகளுக்குப் பிறகு, நாட்டைப் பாதுகாப்பாக வைத்திருக்க ஒரு வலிமையான மனிதனுக்காக வாக்காளர்கள் ஏங்கினார்கள்.

## சந்தேகத்திற்குரிய தொடர்புகள்

2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பிறகு, தேசிய தவ்ஹீத் ஜமாத் குண்டுதாரிகளுக்கும் இலங்கையின் புலனாய்வுத் துறையின் உயர் அதிகாரிகளுக்கும் இடையே சந்தேகத்திற்கு இடமான தொடர்புகள் இருப்பதாக அரசியல்வதந்திகள் பரபரப்பாக பேசப்பட்டது. பிரபலமான வதந்திகள் அரசாங்க அதிகாரிகளுக்கும் இஸ்லாமிய குண்டு வீச்சாளர்களுக்கும் இடையே சாத்தியமான தொடர்பு பற்றியது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் கோத்தாவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கான சதி என்று பேசப்பட்டது. சதி கோட்பாடுகள் இலங்கையில் ஏராளமாக உள்ளன, அப்போது இதை உள்வாங்கிக்கொள்பவர்கள் குறைவாகவே இருந்தனர்.

2021 மார்ச்சில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்களான அனுரகுமார திஸாநாயக்க (ஜே.வி.பி) மற்றும் மனுஷ நாணயக்கார (ஐ. ம. ச ) ஆகியோர் விவாதத்தின் போது உயர் புலனாய்வு அதிகாரிகள்உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு சதியில் சம்பந்தப்பட்டிருப்பது குறித்து பல குறிப்புகளை வெளியிட்டனர்.

2021 ஏப்ரலில், அப்போதைய ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹரின்





பெர்னாண்டோ, 2019 ஏப்ரல்தாக்கு தல்களில் உயர் புலனாய்வு அதிகாரி ஒருவருக்கு தொடர்பு இருப்பதா கக் கூறப்படும் பல பரபரப்பான தகவல்களை பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

ஹரின் பெர்னாண்டோ வெளிப்ப டையாக பெயர்களைக் குறிப்பிடா மல் கவனமாக இருந்தார், ஆனால் அந்த குறிப்புகள் அரச புலனாய்வு சேவையின் தலைவரான மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயைப் பற்றி யதென அனுமானிக்கப்பட்டது. சாலே இதற்கு முன்னர் இராணுவ உளவுத்துறையின் தலைவராக இருந் தவர். 2015ல் சிறிசேன - விக்ரமசிங்க அரசு பதவிக்கு வந்த பிறகு மலே சியாவில் உள்ள இலங்கை உயர்ஸ் தானிகராலயத்தில் ஆலோசகராகப் பணியாற்றினார். 2019ல் சுரேஷ் சாலே பாதுகாப்புகற்கை நெறிக்காக இந்தியாவுக்குச் சென்றுஉயிர்த்தஞா யிறு குண்டுவெடிப்பு நடந்தபோது புதுடில்லியில் இருந்தார்.

2021 அக்டோபரில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்பற்றி சர்வதேச இணையவழிகருத்தரங்கு இடம் பெற்றது. கொழும்பு கத்தோலிக்க பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் மற்றும் நன்கு அறியப்பட்ட கத்தோ லிக்க மதகுரு சகோ.சிறில் காமினி ஆகியோர் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே குண்டுவெடிப்பில் ஈடுபட்டதா கக் கூறப்படும் சில கருத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து, ஜெனரல் சாலே அருட்தந்தை சிறில் காமினி மீது அவ தூறு வழக்கு தொடர்ந்தார். மதகுரு தெரிவித்த சில கருத்துக்கள் தனது (சாலேயின்) நற்பெயருக்கு களங் கம் ஏற்படுத்தியதாக சிறில் காமினி குற்றஞ்சாட்டினார்.

## ஒளி நாடா பிரதிமை

இணையவழிகருத்தரங்கிற்கு சில நாட்களுக்குப் பிறகு, ஜெனரல் சாலே, ஹன்சீர் ஆசாத் மௌலானா வைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரைச் சந்திக்க விரும்பி னார். மௌலானாவின் கூற்றுப்படி, ஹரின் பெர்னாண்டோ மற்றும் ஏனைய எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஹன்சீருக்கு பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகளின் வீடியோ காட்சி களை ஹன்சீருக்கு சாலே காண் பித்திருந்தார். கர்தினால் மல்கம் ரஞ்சித் மற்றும் சகோ. சிறில் காமி னியால் தெரிவிக்கப்பட்ட கருத்துக் களின் ஒளி நாடாபிரதிமைகளையும் காண்பித்திருந்தார்.

ஹன்சீரிடம்எஸ். ஐ. எஸ் . பணிப் பாளர், 'சஹ்ரானையும் மற்றஎன்ரி ஜே உறுப்பினர்களையும் சந்தித்தது உங்களுக்கும் எனக்கும் பிள்ளையா னுக்கும் மட்டுமே தெரியும். இதை நீங்கள் மற்றவர்களுக்கு வெளிப் படுத்தினீர்களா? எம்.பி.க்களும் கத்தோலிக்க பாதிரியார்களும் ஏன் என்னை குண்டுவீச்சாளர்களுடன் தொடர்புபடுத்தி இந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைக்கி ன்றனர்?' என்று கூறியுள்ளார்.

ஹன்சீரின் கூற்றுப்படி, புத்தளம் கூட் டம் பற்றி வேறு யாரிடமும் கூறவில்லை. அப்போது ஹன்சீரின் கைபேசியை சாலே சோதனை செய்துள்ளார். சுமார் மூன்று மணிநேர வாய்மொழி விசாரணைக்குப் பிறகு, சாலே ஹன்சீரை வெளியேற அனும தித்தார்.

அசாத் மௌலானா கூறுகையில், இந்த சோதனையால் தாம் மிகுந்த மன உளைச் சலுக்கு ஆளானதாகவும், வேதனையடைந்த தாகவும் கூறுகிறார். சுரேஷ் சாலே இவ்வளவு கோபமாகவும் கடுமையாகவும் இருப்பதை அவர் பார்த்ததே இல்லை. ஹன்சீர் மட்டக் களப்பில் உள்ள பிள்ளையானுக்கு தொலை பேசியில் தொடர்பு கொண்டு நடந்ததைக் கூறினார்.

ரி எம் வி பி தலைவர் கவலை வேண்டாம் என்றும், மறுநாள் கொழும்பு வருவதாகவும், சாலேவை சந்தித்து பேசி தீர்த்து வைப்பதா கவும் கூறியிருந்தார். பிள்ளையான் மறுநாள் கொழும்பு வந்தார்.அவர்களை சந்திக்கபிள் ளையான் செல்லும் போது ஹன்சீர் அவர்க ளுடன் செல்வது வழமையான நடைமுறை யாகும். ஆனால் இச்சந்தர்ப்பத்தில் பிள்ளை யான் ஹன்சீர் இல்லாமலேயே சாலேயை சந்தித்துள்ளார்.

பிள்ளையானின் சாரதி அமலன் மூலமாகத் தான் பிள்ளையான் சாலே வைச் சந்தித்ததை ஹன்சீர் அறிந்துகொண்டார். சஹ்ரான் சந் திப்பு பற்றிய தகவல்களை கசியவிட்டதற்காக சுரேஷ் சாலே தன்னை (ஹன்சீர்) சந்தேகிக்கி றார் என்று பிள்ளையான் பின்னர் ஹன்சீரிடம் கூறினார்.

சில வாரங்களின் பின்னர் பிள்ளையான் அசாத் மௌலானாவை மட்டக்களப்புக்கு கூட்டத்திற்கு வருமாறு கூறியிருந்தார். அவர் புறப்படுவதற்கு முன், புலனாய்வுப் பிரிவில் உள்ள ஒரு முஸ்லிம் நண்பரிடமிருந்து தனக்கு அழைப்பு வந்ததாக ஹன்சீர் கூறுகிறார். மட்டக்களப்பில் போலியான 'விபத்து' ஒன் றின் மூலம் மௌலானாவை கொல்ல சதி நடப்பதாக எச்சரித்த அவர், போகவேண்டாம் என்றும் அறிவுறுத்தினார்.

மௌலானா பிள்ளையானிடம் தனக்கு திடீ ரென உடல் நலக்குறைவு ஏற்பட்டதாகவும் மட்டக்களப்புக்கு வரமுடியவில்லை என்றும் கூறியிருந்தார்.

## இலங்கையில் இருந்து தப்பிச் செல்லுதல்

ரி எம் வி பி மற்றும்/அல்லது உளவுத்துறை யால் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக அசாத் மௌலானா இப்போது கவலைப்பட் டார். இலங்கையில் இருந்து தப்பிசெல்ல



முடிவு செய்தார். இலங்கையில் இருந்து புறப்படுவதை தாமதப்படுத்தினால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்த அசாத் மௌலானா முதலில் இந்தியா சென்றார்.

சுவிட்சர்லாந்திலிருந்து மனிதாபிமான விசாவைப் பெறுவதே அவரது நோக்கமாக இருந்தது. சுவிட்சர்லாந்து பின்வரும் அடிப்படையில் தனிநபர்களுக்கு மனிதாபிமான விசாக்களை வழங்குகிறது.

★ தனிநபரின் வாழ்க்கை மற்றும் உயிருக்கு நேரடியாக, தீவிரமாக மற்றும் உறுதியான முறையில் அவர்களின் சொந்த நாட்டில் அல்லது பிறந்த நாட்டில் ஆபத்தில் உள்ளது.

★ தனிநபர் நேரடியாக ஆபத்தில் உள்ளார், மேலும் அவர்கள் ஆபத்தான குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதால் வெறுமனே ஆபத்தில் இல்லை.

★ தனிநபருக்கு இனி வேறு எந்த விருப்பமும் இல்லை மற்றும் அவர்களின் நிலைமைக்கு சுவிஸ் அதிகாரிகளின் அவசரத் தலையீடு தேவைப்படுகிறது.

முகமது ஹன்சீர் என்ற அசாத் மௌலானா ஐரோப்பாவிற்கு சென்று அரசியல் தஞ்சம் கோரினார். ஜெனீவாவை தளமாகக் கொண்ட ஐ. நா. மனித உரிமைகள் பேரவை ஐரோப்பாவில் வாழும் இலங்கை ஊடகவியலாளர் மற்றும் மனித உரிமை ஆர்வலர் மற்றும் சுயமாக வெளியேறிய முன்னாள் இலங்கை அரசாங்க அதிகாரி ஆகியோர் ஐரோப்பாவிற்கு இடம்பெயர்வதற்கு அசாத் மௌலானாவுக்கு பெரும் உதவியாக இருந்ததாக அறியப்படுகிறது.

**“2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பிறகு, தேசிய தவ்ஹீத் ஜமாத் குண்டுதாரிகளுக்கும் இலங்கையின் புலனாய்வுத் துறையின் உயர் அதிகாரிகளுக்கும் இடையே சந்தேகத்திற்கு இடமான தொடர்புகள் இருப்பதாக அரசியல்வதந்திகள் பரபரப்பாக பேசப்பட்டது. பிரபலமான வதந்திகள் அரசாங்க அதிகாரிகளுக்கும் இஸ்லாமிய குண்டுவீச்சாளர்களுக்கும் இடையே சாத்தியமான தொடர்பு பற்றியது.”**

தற்போது பாகிஸ்தானில் வசிக்கும் இலங்கை முஸ்லிம் வைத்தியரும் உதவியுள்ளார். மனித உரிமைகள் பேரவை உயர் ஸ்தானிகர் அலுவலகம் ஐரோப்பாவுக்குச் சென்ற அசாத் மௌலானா, ஐ.நா மனிதஉரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்குச் சென்று இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தின் குழுவிடம் விரிவான அறிக்கை ஒன்றை அளித்தார். அவர் சாட்சியமளிக்க ஐந்து நாட்கள் எடுத்துக் கொண்டார். தகவல் மற்றும் ஆதாரங்களை சேகரித்தல், ஒருங்கிணைத்தல், பகுப்பாய்வு செய்தல், பாதுகாத்தல் மற்றும் இலங்கையில் முழுமையான மனித உரிமை மீறல்கள் அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களுக்கு எதிர்கால பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கான சாத்தியமான உத்திகளை உருவாக்குதல், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களுக்காக வாதிடுதல், மற்றும் தகுதிவாய்ந்த அதிகார வரம்பில் உறுப்பு நாடுகள் உட்பட தொடர்புடைய நீதித்துறை மற்றும் ஏனைய நடவடிக்கைகளைஆதரித்தல் என்பது இத்திட்டத்திற்கான ஆணையாகும்

உயர் ஸ்தானிகர் அலுவலகம் தவிர, மௌலானா பல மனித உரிமை அமைப்புகள் மற்றும் சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் அறிக்கைகளை அளித்துள்ளார். பல சட்ட அமுலாக்க நிறுவனங்கள் மற்றும் புலனாய்வு அமைப்புகளால் அவர் பேட்டி காணப்பட்டுள்ளார்.

மௌலானா அவசர அவசரமாக இலங்கையை விட்டு வெளியேறிய போதிலும், பல போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பல ‘ஆதாரங்களை’ தன்னுடன் எடுத்துச் சென்றதாக அறியப்படுகிறது. சனல் 4 படத்தில் வெளிவந்தது சிறிய பாகம்மட்டுமே. .

## ஆதாரங்களுடன் ஈர்க்கப்பட்டமை

மௌலானாவை நேர்காணல் செய்த ஒரு சிரேஷ்ட அரசுசாரா நிறுவன அதிகாரி, அவர் அவரைக் கவர்ந்ததாக இந்த பத்தியில் கூறினார்.

ஹன்சீரிடம் உள்ள ஆதாரங்கள் என்னை மிகவும் கவர்ந்தன என்று என்னால் சொல்ல முடியும். நான் அவரைச் சந்தித்து நேர்காணல் செய்தேன், மேலும் அவரை மிகவும் நம்பத்தகுந்தவராகக் கண்டேன், இருப்பினும், நிச்சயமாக, நாம் சரிபார்த்து மேலும் உறுதிப்படுத்த வேண்டும்,’ என்று அவர் கூறினார்.






பா. நிரோஸ்

# தங்கம் கடத்திய அலி சப்ரி ரஹீம் சிக்கியது எப்படி?

தங்கத்தை நாட்டுக்குள் கடத்திவர முயற்சித்த நிலையில் கைது செய்யப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தொடர்பான செய்திகள் கடந்தக் காலங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதங்களை தவறாகப் பயன்படுத்தியே அலி சப்ரி ரஹீம் நாட்டுக்குள் தங்கத்தைக் கடத்திவர முயற்சித்ததாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்றத்தில் தொடர்ந்து கூறிவருகிற நிலையில், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவால் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு அமைய பாராளுமன்ற குழுக்கள் அனைத்திலிருந்தும் அலி சப்ரி ரஹீம் நீக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால், தங்கக் கடத்தல் குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து மறுத்துவரும் அலி சப்ரி ரஹீம் ஊடகங்களுக்குப் பொய் கூறி வருகிறார் என்பது தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் எமக்குக் கிடைத்த ஆவணங்கள் உறுதி செய்கின்றன.

அது மட்டுமல்லாது நாட்டுக்குள் தங்கத்தை எப்படி கடத்தி வந்தார்? இந்த தங்கக் கடத்தலுக்கு அலி சப்ரி ரஹீம் பயன்படுத்திய உத்திகள் என்ன என்பதுத் தொடர்பிலும் பல பிரத்தியேகமான தகவல்களை அந்த ஆவணம் வெளிப்படுத்து கிறது.

என்னோடு வந்தவர்தான் இந்த வேலையை செய்தது. நான் தங்கத்தை கடத்தி வரவில்லை. எனது கையிலிருந்து தங்கம் பிடிப்படவில்லை. என்னோடு வந்தவரிடமிருந்தே தங்கத்தை எடுத்தார்கள். நான் செய்யாத தவறுக்காக அபராதத் தொகையை செலுத்தியிருக்கிறேன். இப்படியான கருத்துக் களை தொடர்ந்து கூறி, தங்கக் கடத்தலில் தான் ஈடுபடவே இல்லை என்பதை அலி சப்ரி ரஹீம் கூறி வருகிறார்.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள அதிமுக்கியஸ்தர்களுக்கான முனையத்தின் ஊடாக, சட்டவிரோத





மாக தங்கம் மற்றும் கையடக்க தொலைபேசிகளை நாட்டுக்குள் எடுத்துவர முயற்சித்தமை தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை வழங்குமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தால், இலங்கை சுங்கப்பிரிவின் பணிப்பாளர் நாயகம் பி.பி.எஸ்.சீ.நோனிஸ்க்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் கடிதம் LS/TO/53 என இலக்கமிடப்பட்டிருக்கிறது.

இக்கடிதத்தில், பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் எவ்வாறு தங்கத்தை கடத்தி வர முயற்சித்தார் என்பது தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாது, அலி சப்ரி ரஹீம் ஊடகங்களுக்கு தொடர்ந்து பொய் கூறி வருவதையும் இக்கடிதம் ஊடாக நிரூபிக்க முடிகிறது. தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இக்கடிதத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முடிந்தது.

> **“பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதத்தைப் பயன்படுத்தி, சுங்கக் கட்டளைச் சட்டத்தை மீறி அலி சப்ரி ரஹீம் தங்கம், தங்க நகைகள் மற்றும் ஸ்மார்ட் போன்களை நாட்டுக்குள் எடுத்துவர முயற்சித்தமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் பாராளுமன்றத்துக்கு கடிதம் ஊடாக எழுத்துமூலம் அறிவித்திருக்கிறது”**

### நீண்ட காலமாக கண்காணிக்கப்பட்ட அலி சப்ரி ரஹீம்

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றுக்கு அமைவாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக அலி சப்ரி ரஹீமால் மேற்கொள்ளப்படும் விமானப் பயணங்கள் நீண்ட காலமாகவே கண்காணிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

2023.05.23 அன்று முற்பகல் 9.25 மணியளவில் Fly Dubai விமான சேவைக்கு சொந்தமான FZ547 விமானத்திலிருந்து அலி சப்ரி ரஹீமும் அவரது உதவியாளரான ஏ.எச்.எம்.பைரூனும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கி இருக்கிறார்கள். அலி சப்ரி ரஹீம் D5658824 என்கிற இலக்கத்தைக் கொண்ட கடவுச்சீட்டையும், பைரூன் (உதவியாளர்) N 10396987 என்கிற இலக்கத்தையும் கொண்ட கடவுச்சீட்டையும் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

வந்திறங்கியது முதலே, அலி சப்ரி ரஹீம் நடவடிக்கைகள் விமான நிலைய அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டுள்ளன. விமானத்திலிருந்து இறங்கியதுமே தன்னுடைய தனிப்பட்ட பையை எடுத்துக்கொண்டு விமான நிலையத்தில் உள்ள Crystal Lounge வந்த அலி சப்ரி ரஹீம், தன்னுடைய ஏனைய பொதிகளை எடுத்துவருவதற்காக விமான நிலையத்தில் உள்ள விமானப் பயணிகளுக்கு சேவையை வழங்கும் நிறுவனத்தின் அதிகாரி ஒருவரிடம் வழங்கியிருக்கிறார்.

விமானத்திலிருந்து வந்திறங்கிய பின்னர் விசேட பிரமுகர்களுக்கான முனையத்தில் வைத்து, தான் எடுத்துவந்த பைகளை சோதனைக்கு உட்படுத்தாது வெளியில் எடுத்துச் செல்ல முயற்சித்தபோது, அங்கிருந்த சுங்க அதிகாரிகள் அதனை அவதானித்து அலி சப்ரி ரஹீமை தடுத்து வைத்து விசாரணை செய்திருக்கிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கையில் எடுத்துவந்த பையில் தங்கத்தை மறைத்துவைத்து எடுத்துவந்திருந்த அதேவேளை, விமான நிலையத்தில் உள்ள விமானப் பயணிகளுக்கு சேவையை வழங்கும் நிறுவனத்தின் அதிகாரியிடம் எடுத்து வருவதற்கு ஒப்படைத்திருந்த இரு பைகளிலும் 91 ஸ்மார்ட் போன்கள் இருப்பதையும் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அலி சப்ரி ரஹீமின் பயணப் பையில் மிகவும் சூட்சமமான முறையில் கவர் செய்யப்பட்ட இரு பெட்டிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 3,397.7 கிராம் தங்கத்தை சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதற்கு மேலதிகமாக 91 Samsung, Xiaomi Redmi ஸ்மார்ட் போன்களும் அவரது பையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

### தங்கக் கடத்தலுக்கு பயன்பட்ட எம்.பிகளுக்கான வரப்பிரசாதம்

இதற்கு மேலதிகமாக, சுங்க அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளின் ஊடாக அலி சப்ரி ரஹீம் வந்த அதே விமானத்தில் வந்த அவரது (அலி சப்ரி ரஹீமின்) உதவியாளரான ஏ.எச்.எம்.பைரூனும் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்படுகிறார். கட்டுநாயக்க விமான நிலையத்தின் Green Channel பகுதியில் வைத்தே இவர் கைது செய்யப்படுகிறார். அவரிடமிருந்து கைது செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்ட தீவிர விசாரணைகளின் ஊடாக அவரிடமிருந்து மேலும், 19 ஸ்மார்ட் போன்களை அதிகாரிகள் பறிமுதல் செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாது, தன்னுடையது எனக் கூறி 0.828 கிராம் தங்கத்தை டுபாயிலிருந்து எடுத்து வருவதற்காக, அந்நாட்டு சுங்க



அதிகாரிகளால் ஏ.எச்.எம்.பைரூனுக்கு (அலி சப்ரியின் உதவியாளருக்கு) வழங்கப்பட்டிருந்த ஆவணம் ஒன்றையும் அதிகாரிகள் கண்டுபிடிக்கிறார்கள்.

இதற்கு மேலதிகமாக, அலி சப்ரி ரஹீமால் சட்டவிரோதமாக நாட்டுக்குள் எடுத்துவர முயற்சித்த தங்கம் மற்றும் தங்க நகைகளில், தங்க நகைகள் அனைத்தும் அலி சப்ரி ரஹீமின் உதவியாளரின் பெயரில் டுபாய் சுங்கப் பிரிவிடம் பதிவு செய்யப்பட்டிருப்பதும், இவற்றை நாட்டுக்குள் எடுத்து வருவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதத்தை அலி சப்ரி ரஹீம் தவறாகப் பயன்படுத்தினார் என பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு சுங்கத் திணைக்களம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக அலி சப்ரி ரஹீமிடமிருந்த கண்டுபிடிக்கப்பட்ட 2515.9 கிராம் தங்க பிஸ்கட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டமைக்கான எந்தவிதமான ஆவணங்களும் பாராளுமன்ற உறுப்பினரிடம் இல்லை என்பதையும் அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதத்தைப் பயன்படுத்தி, சுங்கக் கட்டளைச் சட்டத்தை மீறி அலி சப்ரி ரஹீம் தங்கம், தங்க நகைகள் மற்றும் ஸ்மார்ட் போன்களை நாட்டுக்குள் எடுத்துவர முயற்சித்தமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் பாராளுமன்றத்துக்கு கடிதம் ஊடாக எழுத்துமூலம் அறிவித்திருக்கிறது.

மேலும், பாராளுமன்ற உறுப்பினரால் நாட்டுக்குள் சட்டவிரோதமாக எடுத்துவர முயற்சித்த மொத்தத் தங்கத்தின் பெறுமதி 74,096,990 ரூபாய் எனவும் அவரால் கொண்டுவரப்பட்ட 91 ஸ்மார்ட் போன்களின் மொத்தப் பெறுமதி 4,288,500 ரூபாய் எனவும் சுங்க அதிகாரிகளின் விசாரணை இறுதியில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**“விமானத்திலிருந்து வந்திறங்கிய பின்னர் விசேட பிரமுகர்களுக்கான முனையத்தில் வைத்து, தான் எடுத்துவந்த பைகளை சோதனைக்கு உட்படுத்தாது வெளியில் எடுத்துச் செல்ல முயற்சித்தபோது, அங்கிருந்த சுங்க அதிகாரிகள் அதனை அவதானித்து அலி சப்ரி ரஹீமை தடுத்து வைத்து விசாரணை செய்திருக்கிறார்கள்.”**



சுங்கக் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாகவும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவும் அலி சப்ரி ரஹீமால் சட்டவிரோதமாக எடுத்துவரப்பட்ட தங்கம் மற்றும் ஸ்மார்ட் போன்கள் அரசுடமைஆக்கப்பட்டதோடு, 7.4 மில்லியனுக்கும் அதிகமான அபராதமும் அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினரின் உதவியாளரால் நாட்டுக்குள் எடுத்துவர முயற்சித்த ஸ்மார்ட் போன்கள் மற்றும் 119,305 ரூபாய் பெறுமதிவாய்ந்த சிகரட் பெட்டிகளும் அரசுடமையாக்கப்பட்டு, ஒரு இலட்சத்துக்கும் அதிகமான அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

# அடுத்த ஆபத்து

## இலங்கைக்குள்ளும் நுழைந்து விட்டதா Zombie போதைப் பொருள்?

Dr. PM.Arshath Ahamed
(MBBS MD PAED)

**Zombie Drugs:** இது தான் தற்போது அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவை ஆட்டிப்படைக்கும் நாமம். நாம் நினைப்பது போல யுத்தமோ, வடகொரியாவோ, ரஷ்யாவோ அல்லது அல்கைதாவோ அல்ல.

நியூயோர்க், பிலடெல்பியா, லிவர்பூல், லண்டன் போன்ற உலக பெரு நகரங்கள் இப்போது இந்த சொம்பி வகை போதைப் பொருள் பாவனையால் பெரும் அச்சுறுத்தலை எதிர் நோக்கி வருகின்றன. அதிலும் குறிப்பாக இந்த நாடுகளில் வாழும் வாலிபர்கள், இளம் பெண்கள் இதற்கு அடிமையாவது மிகப் பெரிய சிக்கலை ஏற்படுத்தி இருக்கிறது. இதனால் முழு நகரமும், நாடும் பாதிக்கப்படுகின்றது. பாதிக்கப்படுபவர்கள் எதிர்கால சந்ததியினர் என்பதால் இது மிகப்பெரிய Pandemic போன்ற சிக்கலை ஏற்படுத்தி இருக்கிறது. பிரச்சினையின் பாரதூரம், இது (Z)சொம்பிகளின் நகர், இது (Z)சொம்பிகளின் வீதி என்று அழைக்கப்படும் நிலைக்கு இந்த நாடுகளில் நிலமை மோசமடைந்திருக்கிறது.

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து, கடைசியில் தமது நாட்டின் தலை நகரிலும் இப்போது, இந்த வகை போதைப் பாவனை அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் சில

> போதை மாபியாக்கள் பிடியில் வல்லரசுகளே தடுமாறிக் கொண்டிருக்கும் இந்த கால கட்டத்தில் நாம் எப்படி இதற்கு முகம் கொடுக்க போகிறோம் என்பது தான் நமக்கு முன்னால் உள்ள மிகப் பெரும் கேள்வி. வழமை போல நம்மையும் நமது குடும்பத்தையும் நாமே காத்துக் கொள்வது தான் ஒரே வழி.

நாட்களில் நமது ஊர்களிலும், வீதியோரங்களில் இப்படியானவர்களை காண முடியும். இது தான் உண்மை. யதார்த்தம். கவலையான விஷயம்.

இந்த (Z)சொம்பி வகை ட்ராக்ஸ்களின் பாவனையால், குறுகிய காலத்திலயே உடல் தசைகளை சிதைத்து விடும். பெரிய பெரிய புண்கள் உடலில் ஏற்படும். காலப்போக்கில் தசை நார்கள் பலமிழந்து, உடல் இயக்கம் தடைப்பட்டு, சமநிலை இல்லாமல் போகும். தள்ளாடிய நடை வரும். அது தான் (Z)சொம்பி போன்ற தோற்றத்தை





உண்மையில் கொண்டு வரும். அதனால் தான் இது (Z)சொம்பிககளின் ட்ரகஸ் என செல்லமாக அழைக்கப்படுகிறது. குதிரை, மாடு, கழுதை, சிங்கம், புலி போன்ற பெரிய மிருகங்களை அமைதிப்படுத்த, கட்டுப்படுத்த, மிருக வைத்தியர்களால் பாவிக்கப்படும் Tranqulizer வகை மருந்துகளை அதிக செறிவில், சட்டவிரோதமாக, ஏனைய போதைப் பொருட்களுடன் கலந்து இந்த Zombie Drug தயாரிக்கப்படுகிறது. இதனால் இதை கட்டுப்படுத்துவது வல்லரசு நாடுகளாலே முடியாத காரியமாக இருக்கிறது. இதன் காரணமாக, கடைசியில் இதுவும் மிகவும் ஆபத்தான அடிக்ஷனை பாவிப்பவர்களில் கொண்டு வந்து சேர்க்கிறது.

இந்த போதைப் பாவனைகளுக்கு எதிராக தொழிற்படும், மீட்டெடுக்கும் எந்த மருந்துகளும் தற்போது பாவனையில் இல்லை. இதனால், இவ்வாறான (Z)சொம்பிக்கள் அதிக போதையினால் உயிரிழப்பை உடனடியாக சந்திக்க வேண்டி ஏற்படுகிறது. இது அமெரிக்காவில் உள்ள மருத்துவர்களுக்கும் வைத்தியசாலைகளுக்கும் பெரும் சவாலாகவே மாறியிருக்கிறது. அமெரிக்காவிலே கவலைக்கிடம் என்றால் நமது நாட்டில் சொல்லவா வேண்டும்??

போதை மாபியாக்கள் பிடியில் வல்லரசுகளே தடுமாறிக் கொண்டிருக்கும் இந்த கால கட்டத்தில் நாம் எப்படி இதற்கு முகம் கொடுக்க போகிறோம் என்பது தான் நமக்கு முன்னால் உள்ள மிகப் பெரும் கேள்வி.வழமை போல நம்மையும் நமது குடும்பத்தையும் நாமே காத்துக் கொள்வது தான் ஒரே வழி.

பிற் குறிப்பு- சும்மா போய் Google இல் இதை // zombie drugs videos// Pm என்ட் பேஸ்ட் பண்ணி பாருங்களேன். நீங்களே கவலைப்படுவீர்கள் பாவம் இவர்கள் என்று. உண்மையில் முன்னேறிய இருக்கிறோம் என்று சொல்லும் நவீன மனிதர்கள் தான் பாவம். நவீனம் என்ற பெயரில் நாம் நம்மையே இழந்து கொண்டிருக்கிறோம் என்பது தான் உண்மை.

# பேசும் படம்






ஐங்கரன் விக்னேஸ்வரா

# ஆபிரிக்காவில் ஆட்டங்காணும் பிரான்ஸ் ஆதிக்கம்

## நவ காலனித்துவ ஆட்சிகளுக்கு முற்றுப்புள்ளி?

> நைஜரில் இருந்து படை விலகுவதான பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானு வேல் மக்ரோனின் முடிவு, இந்தப் பிராந்தியத்தில் பிரான்சுக்கான ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறிக்கிறது. ஆட்டங்காணும் பிரான்ஸ் ஆதிக்கத்தால், நவ காலனித்துவ ஆட்சிகளுக்கு முற்றுப்புள்ளி எனவும் கருதலாம்

ஆபிரிக்காவில் கடந்த கால பிரான்சின் காலனித்துவ ஆட்சியில், அல்ஜீரிய மற்றும் கேமரூனிய சுதந்திரத்திற்கான போர்கள் நூறாயிரக் கணக்கான உயிர்களைப் பறித்தது. தற்போது மாலி மற்றும் மேற்கு ஆபிரிக்க பிராந்தியம் முழுவதும் பல தசாப்த கால இரத்தம் தோய்ந்த பிரெஞ்சின் ஆதிக்க நடவடிக்கைகளுக்குப் பிறகு, ஆபிரிக்கமக்கள் பிரான்சை வெறுப்புடனும், அவமதிப்புடன் பார்க்கின்றனர்.

1960-ஆம் ஆண்டில், மேற்கு ஆபிரிக்கா பகுதியில் மட்டும் 50 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு, பிரான்ஸ் நாட்டின் பரப்பளவைப் போல் 8 மடங்கு பிரான்ஸ் கட்டுப்பாட்டில் இருந்தது. 19ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து (1850களில்) பிரான்ஸ் காலனியாதிக்கம் ஆபிரிக்காவின் வடக்கு, மேற்கு மற்றும் மத்திய பகுதிகளில் பாய்ச்சல் வேகத்தில் பரவியதும் வரலாற்று உண்மையாகும்.

தற்போது பிரான்சின் நைஜர் தோல்வி ஆபிரிக்காவில் ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறிக்கிறது. ஆப்பிரிக்க பிராந்தியத்தில் இராணுவக் குறைப்பு உட்பட, ஆப்பிரிக்க




நாடுகளுடனான அதன் உறவை மறுபரிசீலனை செய்ய பாரிஸுக்கு பல அழைப்புகள் அதிகரித்து வருகின்றன.

ஆயினும் பிரான்ஸ் நைஜரின் இராணுவ ஆட்சிக்குழுவின் கோரிக்கையை ஏற்று அந்நாட்டிலிருந்து தனது இராணுவத்தை திரும்பப் பெற சம்மதித்துள்ளது.

## முடிவுறும் பிரான்சின் ஆதிக்கம்:

புர்கினா பாசோவில் உள்ள இராணுவ ஆட்சிக்குழு, அருகிலுள்ள நைஜர், மாலி மற்றும் சஹேல் பிராந்தியம் முழுவதும் பிரெஞ்சு ஆதிக்கம் 2013இல் மக்கள் எதிர்ப்பின் மத்தியில் பொம்மை அரசுகள் ஆட்சிக்கு வந்தது. இந்த மூன்று நாடுகளின் இராணுவ ஆட்சியாளர்களும் தற்போது முன்னாள் காலனித்துவ சக்தியான பிரான்சை தங்கள் நாடுகளில் இருந்து துருப்புக்களை திரும்பப் பெறுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

நைஜீரியா, கானா, ஐவரி கோஸ்ட் மற்றும் பிரெஞ்சு ஆதரவு பெற்ற மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகத்தில் (ECOWAS) பாரிஸின் ஆதிக்க இராணுவ ஆட்சிகளை கவிழ்க்க, மொஸ்கோ புதிய மக்கள் ஆட்சிகளுக்கு ஆதரவை வழங்குகிறது.

ஆயினும் வரலாற்று ரீதியில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் செனகல் தொடங்கி, சாட் வரை வெற்றி பெற்று அந்த நாடுகள் சுதந்திரம் பெற்றாலும், அந்நாடுகளின் நிதி மற்றும் கனிம வளத்தை பிரான்சே கையாண்டது.

## பிரான்சுக்கு எதிரான அதிருப்தி:

பிரான்சுக்கு எதிராக கிளம்பிக் கொண்டிருந்த இந்த அதிருப்தி 2011ல் லிபியாவை நேட்டோபடை சின்னாபின்னமாக்கி, சாஹேல் (மேற்கு ஆபிரிக்கா) பகுதியில் ஸ்திரமற்ற நிலையை உருவாக்கியவுடன் மேலும் அதிகரித்தது.

2014இல் இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள், சஹாரா பாலைவனம் ஊடாக செயல்பட்ட காலத்தில், சஹாராவின் தெற்கு நோக்கி அவர்கள் தங்கள் தளத்தை விரிவுபடுத்தி, மாலி நாட்டின் மூன்றில் இரண்டு பகுதிகளையும், புர்கினா பாசோவின் பெரும்பகுதிகளையும், நைஜரின் பல பகுதிகளையும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். பிரான்ஸ், இவைகளை கட்டுப்படுத்துவது என்ற பெயரில் இராணுவரீதியில், 'ஆபரேஷன் பக்யன்' (2013) தொடங்கியது.

இவற்றிற்குப் பிறகு பிரெஞ்சு இராணுவத்தின் வன்முறைகள் ஆபிரிக்காவில் அதிகரிக்கத் தொடங்கின. குறிப்பாக இந்த பிராந்தியத்தில் உள்ள மக்களுக்கு எதிராக, ஐஎம்எப் கடன், அதைத் தொடர்ந்த பொருளாதார கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், மேற்காசியாவில் மேற்கத்திய நாடுகளின் யுத்தங்கள், லிபியாவை அழித்தது போன்றவை இந்த பிராந்தியத்தில் மக்களை சீர்குலைத்து புலம் பெயரவைத்தன.

## பிரான்சே வெளியேறு முழக்கம் !


சட்டவிரோதமான வேவு பார்க்கும் தொழில்நுட்பங்களை ஆபிரிக்காவில் காலனியாதிக்க அரசுகள் நீண்ட காலம் மேற்கொண்டன. இந்தப் பின்னணியில் தான் உத்வேக கோஷமான 'பிரான்சே வெளியேறு (லா பான்ஸ் டிகேஜ்)' என்ற முழக்கம் ஆபிரிக்காவில் வலு தீவிரமடைந்தது.

இன்னமும் சாட், செனகல், ஐவரி கோஸ்ட் மற்றும் காபோன் உட்பட்ட ஆபிரிக்க நாடுகளில் சுமார் 6,700 பிரெஞ்சு வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், மாலி, புர்கினா பாசோ மற்றும் நைஜர் ஆகிய நாடுகளில் பிரெஞ்சு எதிர்ப்பு பரவலாக தூண்டிவிட்டிருப்பதை அறியலாம்.உள்ளூர் மக்களிடையே பல்வேறுபட்ட கருத்து இருப்பதைக் காட்டுகிறது என்று சர்வதேச விரிவுரையாளர் பியர் ஹரோச் கூறுகிறார். லண்டன் குயின் மேரி பல்கலைக்கழகத்தில் உறவுகள் மற்றும் சர்வதேச பாதுகாப்புத் துறையில் பயிலும் அவர், பிரெஞ்சு இருப்பு மிகவும் எதிர்மறையாக மாறிவிட்டது, பிரான்ஸ் ஒரு இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால், அது முடிந்தவரை கண்ணுக்குத் தெரியாததாக எதிரியை உருவாக்க வேண்டி இருக்க வேண்டும் எனக் கூறினார்.

## ஆபிரிக்காவில் பிரான்ஸ் நாட்கள் எண்ணப்படுகின்றன:

நைஜரில் இருந்து விலகுவதற்கான பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல்






மக்ரோனின் முடிவு, இந்தப் பிராந்தியத்தில் பிரான்சுக்கான ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறிக்கிறது. மேற்கு ஆபிரிக்க சஹேல் பிராந்தியத்தில் இராணுவத் தலையீடுகள், ஆபிரிக்காவில் அதன் முன்னாள் காலனிகள் ஆதிக்கம் செலுத்த முடியாததை எடுத்துக் காட்டுகிறது.

பிரெஞ்சு துருப்புக்களை வெளியேற்ற அழைப்பு விடுக்கும் ஆபிரிக்க இராணுவ ஆட்சியாளர்கள், செப்டம்பர் முதல் வாரத்தில் ரஷ்ய துணை பாதுகாப்பு மந்திரி யூனுஸ்-பெக் யெவ்குரோவ் தலைமையிலான ரஷ்ய தூதுக்குழு புர்கினா பாசோவிற்கு விஜயம் செய்து, இராணுவ ஆட்சிக்குழுவின் தலைவர் இப்ராஹிம் ட்ராரேவை சந்தித்தது. சந்திப்புக்குப் பிறகு, செய்தியாளர்களிடம் இராணுவ உதவி, அணுசக்தி மற்றும் பொருளாதார உறவுகள் பற்றி விவாதித்ததாக கூறினார்.

ரஷ்ய-புர்கினா பாசோ இராணுவப் பேச்சுவார்த்தைகளானது, உக்ரேனில் ரஷ்யாவுடனான நேட்டோ போருக்கு மத்தியில் நிகழும் சர்வதேச புவிசார் அரசியல் பதட்டங்களை மேலும் சிக்கலான அரசியல் பிரச்சினைகள் இரண்டையும் எடுத்துக்காட்டுகின்றன.

இந்த ஆண்டு இறுதிக்குள் பிரான்ஸ் தனது 1,500 வீரர்களை படிப்படியாக திரும்பப் பெறுவதாகவும், அண்டை நாடுகளான புர்கினா பாசோ மற்றும் மாலியில் இருந்து வலுக்கட்டாயமாக திரும்பப் பெறப்பட்டதை அடுத்து வரும் இந்த முடிவின் பின்விளைவுகள் பாரிய அளவில் உணரப்படுகின்றன.

இந்தப் பிராந்தியத்தில் பாரிஸுக்கு ஏற்பட்ட தொடர்ச்சியான பின்னடைவுகளில் இது பலத்த அடியாகும். இங்கு பிரான்சின் செல்வாக்கு கணிசமாகக் குறைந்துள்ளது. ஆனால் நைஜரில் நிலைகொண்டுள்ள வீரர்கள் எங்கு செல்வார்கள், ஆபிரிக்காவில் இன்னும் எஞ்சியிருக்கும் இராணுவ தளங்களை பாரிஸ் என்ன செய்யும், பிராந்தியத்தில் இஸ்லாமிய பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தை எப்படி தொடரும் என்பதுதான் இப்போது முக்கிய கேள்விகள் ஆகும்.

நைஜரில் இருந்து வெளியேற்றப்பட்டமை பிரெஞ்சு இராஜதந்திர வட்டங்களுக்குள்ளும் பலத்த சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

## ஆபிரிக்க நாடுகளுடனான உறவு:

இவ்வருட பிப்ரவரியில், ஆபிரிக்க நாடுகளுடன் ஒரு புதிய வகை இராணுவ உறவுக்கு பிரான்ஸ் அதிபர் மக்ரோன் உறுதியளித்தார். இது நவ-காலனித்துவக் கருத்துகளால் கறைபடாது, மாறாக சமமானவர்களின் கூட்டுறவாக இருக்கும். பிராந்தியத்தில் மீட்டமைப்பதை நோக்கமாகக் கொண்டு, உள்ளூர் அரசாங்கங்களுடன் இணைந்து பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் பிரான்சின் ஆப்பிரிக்க மூலோபாயத்தின் அடிப்படை மாற்றத்தை மக்ரோன் அறிவித்தார்.

## உலகளாவிய செல்வாக்கு சரிவு:

பிரெஞ்சு அரசியல் உயரடுக்கிற்கு, ஆபிரிக்க தோல்வியானது ஒரு உணர்வுப்பூர்வமான தொனியை ஏற்படுத்தி உள்ளது. பிரான்ஸ் ஒரு உலகளாவிய சக்தியாக அதன் அந்தஸ்தை இழக்கக்கூடும் என்ற அச்சத்தையும் ஊட்டியுள்ளது.

பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், மொஸ்கோவுடனான நைஜீரிய, புர்கினாபே மற்றும் மாலியன் இராணுவங்களின் உறவுகளை ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும், நவ ஏகாதிபத்தியங்களுடன் சுயமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஆபிரிக்கவாதிகளின் கூட்டணி என்றும் விபரித்தார்.

## புர்கினா பாசோவில் இப்ராஹிம் ட்ரொரே:

34 வயதான இராணுவ அதிகாரியான இப்ராஹிம் ட்ரொரே, இராணுவ ஆட்சிக்குழுவின் வேண்டுகோளின் பேரில் பிரெஞ்சு துருப்புக்கள் மாலியை விட்டு வெளியேறிய குறுகிய காலத்திலேயே, கடந்த செப்டம்பர் 2022 இல் ஆட்சிக்கு வந்தார்.கடந்த ஆண்டு புர்கினா பாசோவில் நடந்த ஆட்சிக்கவிழ்ப்புகள், பிரெஞ்சு அரசின் கைப்பாவை கம்போரேயின் நீண்டகால கூட்டாளியான ஜனாதிபதி ரோச் மார்க் கிறிஸ்டியன் கபோரேவின் ஆட்சியை வீழ்த்தியது. இந்த ஆட்சிக்கவிழ்ப்புகளின் போது, தலைநகர் ஒவாகடூகோவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ரஷ்ய கொடிகளை அசைத்துக் கொண்டாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.




ஆட்சிக்கு வந்த மறுநாள், தொலைக்காட்சி உரையில், இப்ராஹிம் ட்ரொரே, பாரிஸுடனான உறவுகளைத் துண்டிக்கவில்லை, ஆனால், மாஸ்கோவுடன் கூடுதல் கூட்டாண்மையை விரும்புவதாக அறிவித்தார். புர்கினாபே இராணுவத்துடன் கூட்டு சேர்ந்து சஹேலில் பிரான்ஸ் நடத்திய இரத்தக்களரிப் போரைப் பற்றி ஆத்திரமாக குறிப்பிட்டு, பிரெஞ்சுக்காரர்கள் நீண்ட காலமாக எங்கள் பங்காளிகளாக உள்ளனர். ஆனால் இப்போது எங்களுக்கு ஆதரவளிக்க வேறு பங்காளிகள் இருக்கின்றனர். நாங்கள் உண்மையில் ரஷ்யாவுடன் ஒரு கூட்டாளியாக இருக்கிறோம். அதை நாம் வலுப்படுத்துவோம் என்று ட்ரொரே கூறினார். மூன்று மாதங்களுக்குப் பிறகு, புர்கினாபே ஆட்சிக்குழு இறுதியாக பிரெஞ்சு துருப்புக்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு கோரியது.

### ரஷ்ய-ஆபிரிக்க உச்சிமாநாடு:

கடந்த 2022 ஜூலையில் செயின்ட் பீட்டர்ஸ்பேர்க்கில் நடந்த ரஷ்ய-ஆபிரிக்க உச்சிமாநாட்டின் போது ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக ட்ரொரே பின்னர் ரஷ்யா சென்றார்.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் புட்டினிடம் பேசிய இப்ராஹிம் டிராரே, ரஷ்யாவுடனான ஒத்துழைப்பை மீண்டும் பாராட்டினார். ஆனால், அவர் பிரெஞ்சு ஆதிக்கத்தை புர்கினா பாசோவில் உழைக்கும் மக்கள் மற்றும் இளைஞர்களை ஒடுக்குபவர்களாக வலியுறுத்தினார்.

### சர்வாதிகார ஆட்சிகளை நிறுவிய அமெரிக்கா :

அமெரிக்காவும் 1960 களில் தொடங்கி, ஆபிரிக்க கண்டத்தில் தனக்கு ஆதரவான வலுவான தேசிய தலைவர்களை உருவாக்க முயன்றது. கொங்கோவில் பாட்ரிஸ் லுமும்பாவின் படுகொலை, கானாவில் குவாமே நக்ருமாவை வீழ்த்துதல் மற்றும் தென்னாப்பிரிக்காவில் நெல்சன் மண்டேலாவைக் கைது செய்ததில் சி.ஐ.ஏ குறிப்பிடத்தக்க வகையிலான பங்களிப்பு இருந்ததும் வரலாற்றுச் சாட்சியங்களாகும்.

20 ஆம் நூற்றாண்டில், 1960ல் லுமும்பாவை வெளியேற்றி கொலை செய்து மொபுட்டு மோர்கன் சங்கராவை வெளியேற்றிய கம்போரே போன்ற கம்யூனிச எதிர்ப்பு சர்வாதிகாரிகளை அவர்கள் கண்டறிந்தனர். லுமும்பா அல்லது சங்கரா போன்ற தலைவர்களால் ஆபிரிக்க மக்களுக்கு அளிக்கப்பட்ட சமூக வாக்குறுதிகள் என்பன, ஏகாதிபத்திய ஆளும் வட்டங்களை பீதியடைய வைத்தன.

தற்போது புர்கினா பாசோ மற்றும் மாலி நாடுகள் தங்கள் நாட்டு துருப்புகளை நைஜர் நாட்டிற்கு உதவ அனுப்பியுள்ளன. நைஜர் நாட்டின் மீதான எந்த ஒரு இராணுவ தலையீடும் தங்கள் நாடுகளுக்கும் எதிரான தலையீடாக பார்க்கப்படும் என்று அறிவித்துள்ளன. புர்கினா பாசோ, மாலி, கினி, நைஜர் ஆகிய நாடுகளில் சுமார் 8.5 கோடி மக்கள் வாழ்கின்றனர், இந்த நாடுகளை இணைத்து புதிய கூட்டமைப்பு உருவாக்க தீவிரமான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகிறது.


செனகலில் இருந்து சாட் வரையிலும் உள்ள பகுதியில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலைமைகளைப் பார்க்கும் போது ஆப்பிரிக்க கண்டத்தில் மேற்குலக ஆதிக்கம் வலுவிழப்பதாக பார்க்கலாம்.

மிகப்பெரிய மக்கள்தொகை மற்றும் மிகவும் மூலோபாயம் வாய்ந்த யுரேனியம் மற்றும் எண்ணெய் இருப்புக்களைக் கொண்ட நைஜரில் நடந்த போராட்டங்களுக்குப் பிறகு, ஜூலை 26 அன்று ஆட்சி அதிகாரம் மக்களிடம் வந்தது. நைஜரில் உள்ள நேட்டோவின் பிரதான இராணுவத் தளத்திற்கு வெளியே நடந்த வெகுஜன ஆர்ப்பாட்டங்களுக்குப் பிறகு, இப்போது பிரெஞ்சு துருப்புக்களை அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறுமாறு ஆளும்அரசு கோரியுள்ளது. இதுவே ஆபிரிக்காவில்முடிவுறும் பிரான்சின் சகாப்த அறிகுறியாகதென்படுகிறது.



# ஈழத்தின் ஊடகப் பேராசான் எஸ்.எம்.கோபாலரத்தினம்

## போர்க் களத்தில் பேசப்படாத பக்கங்களை வரைந்தவர்!!



ஈழப் போர்க்களத்தில் பேசப்படாத பக்கங்களை வரைந்த ஊடகப் பேராசான் எஸ்.எம்.ஜி. அவர்களின் (1930 அக்டோபர்03) பிறந்தநாள் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது

**நவீனன்**

ஈழத்தின் ஊடக வரலாற்றில் பல நெருக்கடியான கால கட்டங்களில் தனது எழுத்துக்களின் ஊடாக தமிழ் மக்களுக்கான உண்மை விடயங்களை தெரிவித்துக் கொண்டிருந்தவரே ஊடகப் போராளி எஸ்.எம்.ஜி எனும் போற்றுதற்குரிய கோபாலரத்தினம்.

ஈழத் தமிழ் ஊடகவியலில் தனித்துவ முன்னெடுப்பாளராக வாழ்வுத் தடமிட்ட கோபு எனும் எழுத்தாணியே எஸ்.எம்.ஜி எனும் எஸ்.எம். கோபாலரத்தினம் 2017 நவம்பர் 15 இல் மட்டக்களப்பில் இயற்கை எய்தினார்.

ஈழ ஊடகத்துறையில் அனுபவம் மிகுந்த பேராசானாக விளங்கிய எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்கள், 50 ஆண்டுகளுக்கு மேலாக ஊடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காக தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன், அவர்களால் 2004 ஆம் ஆண்டு ஜூன் 04ஆம் திகதி விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

ஈழத்தின் போர்க்கால வரலாற்றில் களமுனையில் நின்று போரிட்டவர்களுக்கு சமமாகப் பேனா பிடித்து எழுதியவர்களில் எஸ்.எம். கோபாலரத்தினம் முதன்மையானவர்.அவர் எழுதிய 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற நூல் ஈழத்தில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த போது நிகழ்த்திய நீண்ட துன்பியல் வன்முறைக் களத்தில் பேசப்படாத பக்கங்களில் ஒரு சில பக்கங்களை நிரப்பும் நூலாக அமையும் வகையில் மிக முக்கியமானதொரு ஆவணமாகத் திகழ்கின்றது.

ஈழத்தின் பத்திரிகைத்துறையில் பல சிறந்த பத்திரிகையாளர்களையும் பத்திரிகை ஆசிரியர்களையும் இவர் உருவாக்கினார். தமிழ் தேசியம் சார்ந்து இவர் ஆற்றிய பணிகளுக்காகவே புலிகளின் தலைவர் பிரபாகரன் இவருக்கு தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.






## மூத்த ஊடகவியலாளர் எஸ்.எம். கோபாலரத்தினம்:

ஊடகத்துறையினரால் பெரிதும் மதிக்கப்பட்ட ஈழத்தின் மூத்த ஊடகவியலாளர் எஸ்.எம். கோபாலரத்தினம், 87 வயதில் மட்டக்களப்பில் இயற்கை எய்தினார். 1930ஆம் ஆண்டு அக்டோபர் 03ஆம் திகதி பிறந்த எஸ்.எம்.ஜி, கொழும்பில் வீரகேசரி நாளிதழில் ஒப்பு நோக்குநராக ஊடகத் துறைக்குள் காலடி எடுத்து தடம் பதித்தவர்.

இவர் பத்திரிகை ஆசிரியராக செயற்பட்ட காலத்திலேயே ஈழநாடு பத்திரிகை தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் பிரசித்தம் பெற்றது.

ஏழு ஆண்டுகள் பணியில் கடமையாற்றிய பின்னர், யாழ்ப்பாணத்தில் ஈழநாடு நாளிதழில் பணியாற்றத் தொடங்கினார். ஈழநாடு நாளிதழின் செய்தி ஆசிரியராகவும் ஆசிரியராகவும் பணியாற்றிய அவர், பின் ஈழமுரசு, ஈழநாதம் ஆகிய நாளிதழ்களின் ஆசிரியராகவும் செயற்பட்டார்.

1981இல் இலங்கை இராணுவத்தால் ஈழநாடு பத்திரிகை எரியூட்டப்பட்ட போது கோபாலரத்தினம் தெய்வாதீனமாக உயிர் தப்பியிருந்தார். ஊர்சுற்றி, கோபு, எஸ்.எம்.ஜி, செந்தூரன், போன்ற பல புனைபெயர்களில் ஏராளமான கட்டுரைகளை எழுதிக் குவித்தவர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த நமது ஈழநாடு நாளிதழின் ஆசிரியபீட கௌரவ ஆலோசகராகவும், இவர் பணியாற்றியிருந்தார். ஈழத்துத் தமிழ் ஊடகவியலாளர் பலர் தமது ஊடகப் பயண அனுபவங்களை நூலுருவில் ஆக்கியிருந்தாலும் போரியல் சார்ந்த வரலாற்றுப் பகிர்வுகளைச் சுய தணிக்கை செய்தே எழுத வேண்டிய நிலை இருந்தது. ஒரு சில விதிவிலக்குகள் இருப்பினும் இதுவே நடைமுறை யதார்த்தம். இதனை எல்லாம் மீறி உண்மையை பறை சாற்றியவர் எஸ்.எம்.ஜி.

## ஆறு தசாப்த பத்திரிகையாளர்:

ஆறு தசாப்தங்களாகப் பத்திரிகையாளராக வாழ்ந்தவர் எம்.எஸ்.கோபாலரத்தினம் அவர்கள். இவர் எழுதிய ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை என்ற நூல் ஈழத்தில் போர்கள வரலாற்றுப் பதிவாகும். இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் 1987 ஒக்ரோபர் முதல் 1990 பெப்ரவரி வரை இலங்கையிலிருந்த அமைதிப்படை பற்றி வாத விவாதங்கள் நிறைய உண்டு. வரலாற்றின் தவிர்க்க முடியாத குருதிக் குலைவுகளில் ஒன்றாக அது அமைந்து விட்டது.

அத்துடன் ஸ்ரீ ரங்கன் என்ற பெயரில் சிறுகதைகளில் எழுதியதோடு எஸ்.எம்.ஜி, பாலரத்தினம், ஊர் சுற்றி ஆகிய பெயர்களில் பத்திரிகையில் பணியாற்றியிருக்கிறார். ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை, அந்த உயிர்தானா உயிர், பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு ஆகிய நூல்களையும் எழுதியிருக்கிறார்.





## ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை:

1987களில் ஈழமுரசு பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த வேளை இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டு 62 நாட்கள் சிறையில் இருந்த போது பெற்ற அனுபவம், அங்கு கண்டு கேட்டுப் பெற்றவைகளையே. ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறையில் எழுதியிருக்கிறேன் என்று நூலாசிரியர் எம்.எஸ்.கோபாலரத்தினம் குறிப்பிடுகிறார்.

1987 அக்டோபர் 10ஆம் அதிகாலை வேளை, தமிழர் பூமியை ஆக்கிரமித்திருந்த இந்திய இராணுவம், தமிழர்களின் குரலாக வெளிவந்து கொண்டிருந்த ஊடகங்கள் மீதான தனது எதேச்சாதிகார நடவடிக்கையை மேற்கொண்ட கரி நாளாகும்.


இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987 ஜூலை 29இல் கைச்சானதின் பின்னர், ஈழத்தில் ஊடகத்துறையின் சுதந்திரத்தை முடக்க உருவாக்கும் வகையில், நிதர்சனம், ஈழமுரசு, முரசொலி நிலையங்களின் தகர்ப்பு அழிப்பு நிகழ்ந்தது.




1987 ஐப்பசி 10ம் நாள் காலை அமைதிப் படையினர் யாழ்ப்பாண நகரிலுள்ள இரு தமிழ் தினசரிப் பத்திரிகைகளான ஈழமுரசு, முரசொலி காரியாலயங்களுக்குள் புகுந்து, பின்னர் பத்திரிகை அச்சு இயந்திரத்திற்குள் வெடிகுண்டுகளை வைத்து அவற்றைத் தகர்த்தனர்.


## இந்திய அமைதிப் படை போர்:

இந்தியப் அமைதிப் படை 1987 அக்டோபர் 10 ஆம் நாள் விடுதலைப் புலிகளிற்கெதிராகப் போரைப் பிரகடனம் செய்து தமிழரிற்கெதிரான போரினை நடத்தியது. போரில் இந்திய இராணுவம் பீரங்கி, டாங்கி போன்ற கனரக ஆயுதங்கள் சகிதம் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதிகள் மீது தாக்குதல்களை நடத்தியது. அத்துடன் ஈழமுரசு, முரசொலி, நிதர்சனம் போன்ற




ஊடகங்களை தகர்த்தொழித்து தமிழர்கள் மீதான போர் பற்றிய செய்திகள் வெளியே வராமல் பார்த்துக் கொண்டது இந்திய அமைதிப் படை.. அமைதி காப்பதற்காகவும், ஈழத் தமிழர்களை பாதுகாப்பதற்காகவும் வந்த இந்திய இராணுவம் ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை அமைத்தது. இவ் இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு இச் சிறையில் அடைக்கப்பட்ட ஒரு பத்திரியாளரின் பதிப்பாக இது அமையப்பெற்றுள்ளது. இச் சிறையில் விடுதலைப் புலிகள் என சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கான வர்ளுடன், ஈழமுரசு, முரசொலி பத்திரிகையின் ஆசிரியரும் கைது செய்யப்பட்டனர்.

இந்திய அமைதிப் படைகளால் சிறைவைக்கப்பட்டிருந்த போது, எழுதிய எஸ்.எம். ஜி இன் சிறைக் குறிப்புகள், தமிழ்நாட்டில் ஜூனியர் விகடன் இதழில் 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற தலைப்பில் தொடராக வெளியாகி பெரும் பரபரப்பானது என்பதும் குறிப்பிடத்தக்கது.




அமைதி காப்பதற்காகவும், ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்புக் கொடுப்பதற்காகவும் வந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறிய பின் ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை அமைந்தது. இவ் இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு இச்சிறையில் அடைக்கப்பட்ட ஒரு பத்திரியாளரின் பதிவாக ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை எனும் நூல் அமையப்பெற்றுள்ளது.

முக்கியமான வேதனைக்குரிய ஒரு விடயம் என்னவென்றால் இலங்கை இராணுவத்தினால் அமைக்கப்பட்ட 'பூசா' தடுப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட பலரும் இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்டது, மட்டுமல்லாது பல கஷ்டங்களையும் சந்தித்தனர் என்பதனை நேரில் பார்த்த பல வேதனையினை 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' எனும் நூல் விபரிக்கின்றது.

இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களினை பாதுகாப்பதற்காக வந்த இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட அப்பாவி தமிழ் மக்களின் கை மற்றும் கால்களினை கட்டி வைத்து அவர்களை துன்புறுத்தி அதனை பார்த்து சந்தோஷப்பட்டார்கள் இந்திய இராணுவத்தினர் என்பதனை கவலையுடன் எழுதியுள்ளார்.

### அந்த ஒரு உயிர் தானா உயிர் :


வீரகேசரி நாளிதழில் தனது பத்திரிகைத்துறைப் பிரவேசத்தை ஏற்படுத்திக்கொண்ட ஆசிரியர்தலையங்கங்கள் 'அந்த ஒரு உயிர் தானா உயிர்' என்னும்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்தஇரண்டு ஆக்கங்களைத் தவிர மற்றவை மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் தினக்கதிர் நாளேட்டில் பிரதம ஆசிரியராக இருந்த வேளையில் எழுதப் பட்டவை.

அனைத்தும் சமகால அரசியல் நிலையை வைத்து எழுதப்பட்டவை. தமிழ்மக்களின் மன எழுச்சியையும் இவை பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன.

தமிழ் மக்களின் எந்தக் கருத்துக்களும், நிலைப்பாடுகளும் வெளியுலகம் அறிய முடியாதவாறு ஊடக முடக்கம் 1987இல் இந்தியப் படைகளால் தொடர்ந்தது. இது உண்மைகளை அறிவிக்கும் ஊடகங்களின் ஊடகச் சுதந்திரம் அற்ற நிலையை உருவாக்கியது.

ஆயினும் வியட்நாம் போரின்போது 1974-ஆம் ஆண்டு போர்க்களத்தில், பான்ஃன் தி கிம் என்ற வியட்நாம் சிறுமி ஒருவள் உடலில் தீக்காயங்களோடு நிர்வாணமாக ஓடி வரும் அந்த ஒரு காட்சி உலகையே உறைய வைத்தது. அந்தப்படம் போருக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்ட பேருதவி செய்தது. அதனை செய்ததும் இதே போன்ற ஊடகங்கள்தான்.

இதற்கு ஒப்பாகவே 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச்சிறை' என்ற நூல் ஈழத்தில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த போது நிகழ்த்திய நீண்ட துன்பியல் வன்முறைக்




களத்தினை விபரிக்கும் சாட்சியமாக, மிக முக்கியமானதொரு ஆவணமாக உள்ளது.

எஸ்.எம்.கோபாலரத்தினம் தான் கைபிடித்த பேனாவை - எழுதுகோல் கருவியை நேசித்து வரலாற்றை புனைவின்றி உண்மையின் பதிவாக காலத்தின் பதிவேடுகளில் பதிந்தவர். ஊடகர் எஸ்.எம்.கோபாலரத்தினம் எழுத்துக்கள் ஈழப்போர்க்கால களத்தின் சாட்சியங்களாக வரலாற்றில் நிலைபெற்றிருக்கின்றன.



# உடன்கட்டை ஏற்றுதல்

## உடன்கட்டை ஏற்றியதை நேரில் பார்த்த அனுபவத்தை எழுதி வைத்துள்ளார் ஒரு ஐரோப்பியர்.

இது 1798 ல் எழுதப்பட்டது.

***அவர் பெயர்:*** Donald Campbell

பெண் ஒருத்தி, இறந்து போன தன் கணவனோடு சேர்த்து எரிக்கப்படவிருந்த நிகழ்ச்சியைப் பார்க்கச் சென்றேன்.

இந்த வேதனை தரும் கொடிய சம்பவத்தை நிகழ்த்தத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த இடம் தஞ்சாவூர் கோட்டையிலிருந்து ஒருமைல் வடக்கே உள்ள காவிரி ஆற்றின் கரை..

அந்தப் பெண்ணுக்கு 16 வயதிற்கு உள்ளே தான் இருக்கும்.

வெள்ளை சேலை கட்டி இருந்தாள். தலையிலும் கழுத்தைச் சுற்றிலும் வெள்ளை நிற மல்லிகை பூ சூடி இருந்தாள். அவளைச் சுற்றி 20 பெண்கள் நின்று கொண்டு ஒரு வெள்ளைத் துணியை அவள் தலைக்கு மேல் வெயில் படாமல் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கிருந்து 20 அடி தள்ளி சில பிராமணர்கள் விறகுக் கட்டைகளால் எட்டடி நீளத்தில் நான்கடி அகலத்தில் சிதை தயாரித்துக் கொண்டிருந்தார்கள்.

முதலில் மூன்றடி உயரத்திற்கு கம்புகளை செங்குத்தாக நிறுத்தினார்கள். உள்ளே சிறிய மரத்துண்டுகளால் நிரப்பினார்கள்.

பக்கத்தில் மூங்கில் கழிகளின் மேல் கிடத்தப்பட்டிருந்த இறந்தவருக்கு 60 வயதுக்கு மேல் இருக்கும்.

இறந்தவரின் உடம்பைச் சுற்றி நான்கு பிராமணர்கள் முதல் முறை சூரியனுக்கு எதிர் திசையாகவும் அடுத்த மூன்று முறை சூரிய ஒளி வீசும் திசையிலுமாக சுற்றி வந்தார்கள்.

இப்போது அவர்கள் தங்களுடைய நீண்ட தலைமுடியை அவிழ்த்து விட்டுக் கொண்டும் உடனே மீண்டும் முடிந்து கொண்டும் ஏதோ மந்திரங்களை உச்சரித்தார்கள்.

மற்றவர்கள் மந்திரம் சொல்லிக் கொண்டு கையில் இருந்த பச்சை இலையால் தண்ணீரை எடுத்து அருகில் குவித்து வைக்கப்பட்டிருந்த சாண எருக்களின் மீது தெளித்துக் கொண்டிருந்தார்கள்.

வடகிழக்கு மூலையில் அமர்ந்திருந்த ஒரு வயதானவர் கையில் இருந்த ஓலைச் சுவடியில் உள்ளதை வாசித்துக் கொண்டிருந்தார்.

அந்த சூழலின் அழுத்தமும் சோகமும் தாங்க முடியாமல் அருகில் இருந்தவரிடம் இன்னும் எவ்வளவு நேரம் நடக்கும் என்று கேட்டேன்.

இன்னும் இரண்டு மணி நேரத்திற்கு மேலாகும் என்று சொல்லவே நான் கோட்டையை நோக்கித் திரும்பினேன்.

500 கெஜ தூரம் நான் சென்றிருக்கும் பொழுது ஒருவர் என் பின்னாலேயே வந்து திரும்பி வருமாறு அழைத்தார்.

சடங்கு உடனே நடத்தப்பட இருப்பதாகச் சொன்னார்.

நான் சென்றபோது அந்தப் பெண்ணை மற்ற பெண்கள் அழைத்துச் சென்று ஆற்றில் குளிக்க வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவள் நெற்றியில் செந்நிறத்தில் ஆறு பென்ஸ் காசு அளவுக்கு பொட்டு வைத்தார்கள்.

பிறகு ஈரமண் போன்று எனக்குத் தெரிந்த ஏதோ ஒன்றை பிசைந்து அவள் நெற்றியில் தடவினார்கள்.

பிறகு அந்தப் பெண் சிதைக்கு அழைத்து வரப்பட்டு அவள் சிதையைச் சுற்றி மூன்று தடவை நடந்தாள்.

சிதையில் அவள் கணவன் உடல் ஏற்கனவே ஏற்றி வைக்கப்பட்டிருந்தது.





இவள் யாருடைய துணையும் இல்லாமல் தானாகவே அதில் ஏறி தன் கணவன் உடல் அருகில் அமர்ந்தாள்.

பிறகு தான் அணிந்திருந்த நகைகளின் திருகுகளை, திருகி கழற்றி அந்த ஆபரணங்களை கையில் எடுத்து மீண்டும் அந்த திருகுகளை பொருத்தி பக்கத்தில் நின்ற இரு பெண்களிடமும் ஆளுக்கு ஒன்றாக கொடுத்தாள்.

தன் காதில் அணிந்திருந்த ஆபரணங்களையும் அவள் மிகுந்த நிதானத்துடன் திருகை கழற்றி எடுத்து, மீண்டும் திருகை பொருத்தி அந்த பெண்களிடம் பிரித்துக் கொடுத்தார்.

பிரித்துக் கொடுக்கும் பொழுது ஏதோ சிறிய குழப்பம் ஏற்பட அவள் பொறுமையாக அதை சரியாகப் பிரித்துக் கொடுத்தாள்.

பிறகு மெதுவாக அப்படியே மல்லாக்க சாய்ந்து படுத்தாள். ஒரு மஞ்சள் துணியால் தன் முகத்தை மூடிய பிறகு புரண்டு தன் கணவருக்கு நெருக்கமாக படுத்து தன் வலதுகையை தூக்கி அவர் மார்பின் மீது வைத்தாள்.

அதன் பிறகு எந்த அசைவுமின்றி காத்திருந்தார்.

பிராமணர்கள் இறந்தவரின் வாயில் சிறிது அரிசியையும் மீதி அரிசியை அவள் மீதும் தூவினார்கள். பிறகு சிறிது நீரை இருவர் மீதும் தெளித்தார்கள்.

பிறகு ஒரு சிறிய கயிறு கொண்டு இருவரையும் சேர்த்துக் கட்டினார்கள். பிறகு,இருவர் உடலும் மற்றவர் கண்களில் மறையும் அளவுக்கு மரக்கட்டைகளை சுற்றி அடுக்கினார்கள்.

குறுக்குவாக்கில் சிறிது கட்டைகளை அடுக்கிய பிறகு ஒரு பாத்திரத்தில் இருந்து எண்ணெய் போன்ற திரவத்தை அந்த பெண் இருந்த பகுதியில் ஊற்றினார்கள்.

பிறகு மீண்டும் கட்டையை அடுக்கினார்கள்.

இப்போது வெறும் விறகு குவியலாகவே எனக்குத் தெரிந்தது.

இதே நேரத்தில் ஒரு பிராமணர் சிதைக்கு அருகே இருந்தவர் அந்தப் பெண்ணின் தலைப்பகுதி அருகே குனிந்து அவளை கூப்பிடுவது போல் சத்தம் கொடுத்தார்.

ஏதோ அவளிடம் சொல்வது போல சொல்லி பின் எல்லோரையும் பார்த்து சிரித்தார்.

பிறகு முழுவதுமாக வைக்கோலால் மூடினார்கள் சுற்றிலும் கயிறால் இறுக்கிக் கட்டினார்கள்.

பிறகு ஒருவர் சிறிது வைக்கோலை எடுத்து அருகில் கனன்று எரிந்து கொண்டிருந்த சாண எருக்களில் பற்ற வைத்து அதை சிதையில் போட்டார்.

பிறகு தீ நன்றாக பற்றுமாறு விசிறி விட்டார்கள்.


அப்போது காற்றும் அதே திசையில் வீச தீ வேகமாக பற்றி கொண்டது. ஏதோ ஒரு கிறீச்சிடும் ஒலியை நான் கேட்டது மாதிரியும் மற்ற இரைச்சலிடமிருந்து அதை தனிமைப்படுத்தி கேட்காதது மாதிரியும் இருந்தது ..

சில நிமிடங்களில் அந்த குவியல் சாம்பல் ஆனது.

நான் அந்த மொத்த நடவடிக்கைகளையும் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன்.

என் பார்வை முழுவதும் அந்தப் பெண்ணின் மீது தான் இருந்தது.

இந்த கொடூரமான சடங்கை நடத்தியவர்கள் அதை நிறைவேற்றியதில் பெருமிதம் கொண்டிருந்த மாதிரியும், ஐரோப்பியன் ஒருவன் அதைப் பார்த்துக் கொண்டிருப்பது அவர்களை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை என்பதும் கோட்டைக்கு திரும்பிய வழியில் என் சிந்தனையாக இருந்தது.





# எதுவும் சில காலம்

முல்லை பாஸ்கர்

பறந்து இருக்கும்
இவ் வையகத்தில்
சிறகுகளை விரித்து
பறக்கத் துண்டிக்கும்
பறவைக்கு
விரிந்து கிடக்கும்
செவ்வானம்!

சிதறிக்கிடக்கும்
விண்மீன்களை
அள்ளிக் கொள்ளத்
துடிக்கும் மேகங்கள்!
இவற்றையெல்லாம்
வேடிக்கை பார்க்கும்
வெள்ளை நிலா!!

காட்டு வெள்ளத்தில்
அடித்து வரப்பட்ட
கானாங்குருவி ஒன்று
கச்சேரி பண்ண
அது ஆலாபனையா?
இல்லை முகாரியா?
ஒன்றும் புரியவில்லை!

இத்தனையும் கனவா?
விடியல் வந்து - என்
தூக்கங்களை
களவாடியபோதும்
கவலை ஏதுமில்லை!
என் வண்ண வண்ண
கனவுகள் கலைந்த
பொழுதிலும்
வருந்தியது இல்லை!

விளக்கொளியைநாடும்
விட்டில்பூச்சி போல்.
மாணவர்களே.!!
மதியை மயக்கி,
உன்
எதிர் காலத்தையே
இடுக்காட்டுக்குள்
அழைத்துச் செல்லும்
இந்த போதைக்குள்
ஏன்
மூழ்க நினைக்கின்றாய்.??

உன்னை நேசிக்கும்
உறவுகளை
உதாசீனப்படுத்தி,
இந்த உலகத்தையே
புதைக்குழிக்குள் தள்ள
தயாராகிவிட்டாய்.
எதுவும் சில காலம்தான்!!

உனக்கே புரியவில்லை!
இளமைஇன்பம்
வாழ்க்கை.வசந்தம்..
துன்பம்..துயரம்..
புரிந்து கொண்டால்.?
இந்த பூமியும்
புன்னகைக்கும்!!



# வெளிநாட்டு வாழ்க்கை

## ‘சொற்ப பணத்தின் மேல் ஆசை’: எதிர்காலத்தையே கேள்விக் குறியாக மாற்றும் வெளிநாட்டு வாழ்க்கை



வி.தீபன்ராஜ்

இலங்கையை பொறுத்தவரையில் பணவீக்கம் அதிகரித்து வருவதன் காரணமாக பலர் வறுமையான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். பெரும்பாலான மக்கள் பஞ்சம் பட்டினியில் வாடுகின்றனர். இதன் காரணமாக தன் வறுமையை போக்குவதற்காக ஆண் மற்றும் பெண் இருவரும் வெளிநாடு செல்வது வழமையாகி விட்டது.

வெளிநாட்டு கனவுகளை கொண்டதன் காரணமாக அன்றைய காலம் தொட்டு இன்றைய காலம் வரை வெளிநாடு செல்கின்றனர் மக்கள். வறுமையில் இருந்து வாழ்க்கையை மேம்படுத்த முடியும் என வெளிநாடு செல்வது கட்டாயம் என நம்புகின்றனர். இதனை முதலில் தீர்மானிப்பது வருமானம். வருமானம் அதிகம் வழங்கும் நாடுகளில் ஒன்றான கனடா, இலங்கையில் இருந்து அங்கு சென்று தொழில் புரியும் சிலரின் உறவினர்களுக்கென வழங்கப்படும் சுற்றுலா விசாக்களை விற்பனை செய்கின்றன.

கனடா செல்வதற்கு அதிகம் ஆர்வமும் பண ஆசையும் அதிகம் உள்ளவர்கள் அதனை அதிகம் பணம் கொடுத்து வாங்குகின்றனர். தம் வறுமை நிலையைப் போக்குவதற்காக அதிகம் வருமானம் பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் அந்த விசாக்களை பெற்றுக் கொள்கின்றனர்.

வாங்கப்படும் விசாக்களை வாங்குகின்றவர்கள், விற்கின்றனர். அரசாங்கத்திற்கு தெரியாமல் மறைமுகமாக இவ்வாறாக பணப் பரிமாற்றம் நடக்கின்றது. இன்றைய கால கட்டத்தில் இது ஒரு மறைமுகத் தொழிலாக ஆகிவிட்டது. பொதுவாக கனடா என்ற கனவு இன்றைய இளைஞர்களின் வருமானம் என்ற பெயரில் அதிகம் ஆசை காட்டி இச் சட்ட விரோத தொழிலின் மேம்படுத்துகின்றன.

பண ஆசை கொண்ட சிலர் அந்த வீசாக்களை பற்றிய எந்த





**கொள்ளைக் கும்பலிடம் வடக்குக் கிழக்கு இளைஞர்களே கூடுதலாக ஏமாற்றமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கனடாவில் வாழும் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் உறவினர்களும் இந்தக் கும்பல்களின் ஏமாற்று வேலைகளை அறியாமல், நேரடியாகவே அவர்களின் கைகளுக்கு முற்பணமாக பத்து இலட்சம் ரூபாவை அனுப்புகின்றனர் என்பதுதான் வேதனைக்குரிய விடயம்**

விவரமும் தெரியாமல் வாங்குகின்றனர். கனடா விசா சுற்றுலா விசாவின் மூலம் கனடா செல்ல முடியும். அங்கு சென்று ஒரு மாத காலம் மாத்திரம் இருக்க முடியும். ஏனென்றால் சுற்றுலா வீசாவின் மூலம் குறிப்பிட்ட காலம் மட்டும்தான் கனடாவில் இருக்க முடியும். விசாக் காலம் முடிவடைந்த பின்னர் அவர் நாடு திரும்ப வேண்டும். திரும்பாவிட்டால் அவர் கைது செய்யப்படுவார். இது நம் அறிந்த ஒன்றுதான். இதனைத் தெரியாத சிலர் மாட்டிக் கொள்கின்றனர்.

அதிலும், பணத்தையும் செலுத்தி விட்டு கனடா செல்ல வாய்ப்பும் இல்லாமல், பணத்தை மீளப் பெறவும் முடியாமல் ஏமாற்றப்பட்ட பலர் உள்ளனர். ஒரு தீர்வினை பெற்றுக் கொள்ள முடியாமல் போனபலரின் வாழ்க்கையும் கனடா வேலை வாய்ப்பும் கனவாகவே போய்விட்டது. மறைமுகமாக கனடா செல்வதற்கான வீசாக்களை வழங்கிய சிலரை நம்பி பணத்தை செலுத்தி விட்டு, ஏமாற்றப்பட்டு, செல்வதற்கு வழியும் இல்லாமல், பணத்தை மீளவும் பெற முடியாமல், போலீஸ் நிலையங்களிலும் புகார் செய்ய முடியாமல் சிக்கித் தவிக்கும் பலரின் வாழ்க்கை பரிதாபம்தான்.

கனடா ஆசையால் மோசமாக ஏமாற்றப்படும் இலங்கை தமிழ் இளைஞர்கள் குறித்த எச்சரிக்கைத் தகவல், கனடாவுக்கு வேலை வாய்ப்பு, கல்வி, மற்றும் சுற்றுலா விசாவில் செல்ல முடியுமெனக் கூறிய கும்பல் ஒன்றிடம் இளைஞர்கள் பலர் ஏமாந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

கொழும்பில் உள்ள கனடா விசாவுக்கு விண்ணப்பிக்கும் அங்கீகாரம் பெற்ற தனியார் நிறுவனத்திற்கு (Accredited Private Company) நேரடியாகச் சென்று விண்ணப்பங்களைக் கையளித்த பின்னரே இந்த ஏமாற்று வேலை இடம்பெறுகின்றதாகவும் கூறப்படுகின்றது.

இந்த ஏமாற்று நடவடிக்கைகளில் கனடா விசாவுக்கு விண்ணப்பிக்கும் அங்கீகாரம் பெற்ற குறித்த தனியார் நிறுவன உயர் அதிகாரிகள் சிலருக்கும் தொடர்பிருப்பதாகவும் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் சந்தேகிக்கின்றனர்.

கனடாவுக்குச் செல்வதானால் குறைந்தது இலங்கை ரூபாவில் அறுபது அல்லது அறுபத்து ஐந்து இலட்சம் ரூபா வரை பணம் செலுத்த வேண்டும். ஆனால் மேற்படி விசாவில் கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறுகின்ற கும்பல் முற்பணமாகப் பத்து இலட்சம் ரூபாவை மாத்திரமே பெற்றுக் கொள்கின்றது.

வேறு சிலரிடம் இரண்டு இலட்சம் ரூபாவையும், இன்னும் சிலரிடம் பத்து இலட்சம் ரூபா முற்பணத்தையும் பெற்று, விசா வந்த பின்னர் மேலதிகமாக ஐந்து இலட்சம் வரையும் அக் கும்பல் பெறுகின்றது.

மிகுதிப் பணத்தைக் கனடா போய்ச் சேர்ந்ததும் வழங்க முடியுமெனக் கூறுவதால் பல தமிழ் இளைஞர்கள் அவர்களை நம்பி ஏமாந்துள்ளதாக கூறப்படுகிறது.

கொழும்பில் உள்ள கனடா தூதரகம் குறித்த தனியார் நிறுவனத்தின் மீது நடவ



டிக்கை எடுக்க வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதேவேளை கொள்ளைக் கும்பலிடம் வடக்குக் கிழக்கு இளைஞர்களே கூடுதலாக ஏமாற்றமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கனடாவில் வாழும் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் உறவினர்களும் இந்தக் கும்பல்களின் ஏமாற்று வேலைகளை அறியாமல், நேரடியாகவே அவர்களின் கைகளுக்கு முற்பணமாக பத்து இலட்சம் ரூபாவை அனுப்புகின்றனர் என்பதுதான் வேதனைக்குரிய விடயம். எனவே இவ்வாறான கொள்ளைக்கும்பலிடம் தாங்கள் ஏமாந்தது போல மற்றவர்கள் ஏமாறாமல் இருக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.



# துரோகம் பலவிதம்!

அவர் ஒரு பிரபலமான குழந்தை வைத்திய நிபுணர். மூன்று தாதியர்களோடு வைத்தியசாலை வராண்டாவில் கைகளைத் தூக்கியபடி

நாங்கள் அப்பாவிகள்.!!! வைத்தியர்களும், தாதியும்.. சரணடைகின்றோம்!! ஆங்கிலத்தில் சத்தமிட்டபடி வந்துகொண்டிருந்தனர்.

துப்பாக்கி வெடிக்கும் சத்தம்!

அந்த இடத்திலேயே விழுந்து மரணமடைகிறார் வைத்திய நிபுணர்.

நடந்தது யாழ்ப்பாண வைத்தியசாலையில்.

நடந்த தினம் அக்டோபர் 21, 1987.

1987 ஆம் ஆண்டு தீபாவளியை இந்தியாவில் விமர்சையாக கொண்டாடிக்கொண்டிருந்தார்கள்.

யாழ்ப்பாணத்திலோ பதட்டம்!

எந்த நிலையிலும் தாக்குதல் நடத்தப்படலாம்.

அச்சத்தில் பெரும்பாலான மக்கள் வேலைக்குப்போவதைத் தவிர்த்திருந்தனர்.

இந்தியத் தூதரகம் இப்போதைக்குத் தாக்குதல் நடத்தப்படாது என்று ஒரு அறிக்கையை விட்டிருந்தனர். அதை நம்பி சிலர் வேலைக்குச் சென்றிருந்தனர்.

இந்திய தூதரகத்தின் அறிக்கை வானிலை அறிக்கையாக மாறியது. காட்டுமிராண்டித்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

அந்த நேரம் யாழ்ப்பாண வைத்தியசாலையினுள் விடுதலைப்புலிகளின் ஒரு அணி நின்றது.வைத்தியசாலையில் இருந்த ஒரு வைத்திய நிபுணரும், ஒரு பெண் வைத்தியரும் அவர்களைச் சந்தித்துக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க புலிகளின் அணி வைத்தியசாலையை விட்டு வெளியேறியது.

ஆனாலும் மிகவும் நேர்மையான இந்திய இராணுவம் தன் கடமையைச் செவ்வனே செய்து முடித்தது. விடுதலைப் புலிகள் எப்போதோ வெளியேறிவிட்டார்களென சொல்லியதையும் கேட்காமல், வைத்தியர்கள், தாதிகள் உட்பட ஒருமாதம் கூட ஆகாத குழந்தை ஒன்றையும் சேர்த்து 70 பேரைக் கொலை செய்து தன் வக்கிரத்தைத் தீர்த்துக்கொண்டது.

தமிழர் அமைப்புக்கள் மட்டுமல்லாமல் கரடியே காறித் துப்பினதுபோல, இலங்கை சிங்கள அரசுகூட இது மனிதாபிமானமற்ற தாக்குதல் என்று அறிக்கை விட்டது.

இறந்தது தமிழர்களாச்சே, அறிக்கை விடுவது போல விட்டு தொடர்ந்தும் இந்தியாவோடு உறவுகொண்டாடியது இலங்கை அரசு.

இந்த கொலைகளுக்குக் காரணம் ராஜிவ் காந்தி!

இன்றும், ஏராளமான தமிழர்கள் 'ராஜிவ்காந்தி ஜி!' என்று கோஷம் போட்டுக்கொண்டே ராகுல் காந்திக்காக போராடத் தயராக இருக்கிறார்கள்.

நாம் ஹோலிப்பண்டிகை கொண்டாடவும் தயார்.

வாழ்க ஜனநாயகம்!

நம்புங்கள் அடுத்த தீபாவளிக்குள் தீர்வு நிச்சயம்!

# மன அழுத்தம்

உண்மையாகவோ, அல்லது கற்பனையாகவோ, உடல் ரீதியாக அல்லது மனரீதியாக ஏற்படும் மாற்றங்களுக்கு சரியான முறையில் ஈடு கொடுத்து, மாற்றுத் திறனை வெளிப்படுத்தாத நிலையில் தோன்றும் தொடர் விளைவுகளின்செயலே ‘மன அழுத்தம்’ ஆகும்.

இச் சொல்லானது உளவியல் ரீதியாக 1930ம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டது. எனினும் அக் காலத்தைவிட இக் காலத்திலேயே இது பெரும்பாலும் பேசப்படுகிறது.

இயல்பான ஒன்றான மன அழுத்தம் என்பதுபல காரணங்களுக்காக தோன்றுகிறது. சில நேரங்களில் மனிதன்உணர்ச்சிகள் அதிகமாகவும்,சில நேரங்களில் உணர்ச்சியற்றவனாகவும் காணப்படுகின்றான்.

இந்த மன அழுத்தம் ஏற்பட பல காரணங்கள்இருக்கலாம்.சுற்றுப்புறத்திலிருந்து வரலாம். நம் எண்ணங்களினால்வரலாம். ஏதாவது ஒரு செயலை நாம் செய்யும்போது ஏற்படும் பதற்றம்அல்லது தோல்வியால் ஏற்படலாம்.

இது ஒன்றும் பெரிய வியாதியல்ல.இதனைநாமே சுலபமாக வெல்ல முடியும்.ஒரு விஷயத்தைக் குறித்து நாம் பதற்றப்படும் போதும்,அல்லது தோல்வியுறும் போதும்,எதிர்பாராமல் ஏற்படும் சில காரணங்களாலுமே மன அழுத்தம் தோன்றுகிறது.இவ்வாறான நேரங்களில் நாம் பதற்றமடையவோ,பயப்படவோ கூடாது.

நமக்கு பதற்றம்,பயம் எதனால் வருகிறது?அதை எப்படி நாம் சரி செய்யலாம் என சிந்தனையில் மாற்றம்கொண்டு வரவேண்டும்.



மன அழுத்தத்ததில் உள்ள ஒருவரால் இயல்பாக சுவாசிக்க கடினமாய் இருக்கும்.ஏனெனில் அவரது மன அழுத்தம்காரணமாக ஒட்சிசன் அளவு குறைவதால்,சீரான இரத்த ஓட்டமின்றி, மூச்சை இழுத்து வெளியிடுவதில் சிரமம் ஏற்படலாம்.இதனால்நோய் எதிர்ப்பு சக்திஅழிந்து விடும்.

தசை பகுதிகள் வலுவிழந்து போவதால் தோள்பட்டை முதுகு,கழுத்து, பகுதிகளில் வலியும், தலைவலியும் ஏற்படும்.சில வேளைகளில் இரத்த ஓட்டம் அதிகரித்து மாரடைப்பு ஏற்படலாம்.நரம்பு மண்டலம் பாதிப்பதால், சுயநினைவு,புத்தி பேதலிக்கும் நிலை கூடஏற்படுகிறது. இவை மன அழுத்தத்தால் ஏற்படும் பாரியவிளைவுகளாகும்.

ஆனால், இவற்றை விட மன அழுத்தம் ஏன் உருவாகிறது என்பதை கண்டறிந்து அதனை சுமுகமான முறையில்தீர்த்தலே நன்மையாகும்.

### மன அழுத்தத்தை ஏற்படுத்தும் காரணிகள்:

★ தன்னை நம்மை அறியாமல் நாம் கட்டுப்படுத்த முடியாத ஒன்றை நினைத்து கவலைகளை வளர்த்துக் கொள்வது.

★ ஓய்வு, பொழுதுபோக்குக்கென நேரம் ஒதுக்காமல் விடுவது.

★ நாம் நம்பும் ஒன்று நம்மை கைவிட்டுப் போகும் போது.

★ கூடுதலான தனிமையை உணரும் போது.

★ மேலும் வேலை, உறவுமுறை சிக்கல்கள், நிதி நிலைபோன்ற பல காரணங்களால் இந்த மன அழுத்தம்

கலையமுதினி
(இலண்டன்)





உருவாகிறது. வாழ்க்கை என்பது நாம் நினைப்பது போல அமைவதில்லை. நிறைய முரண்பாடுகளும், சவால்களும் நிரம்பியது. நம் இலட்சியங்கள், ஆசைகள் நிராசையாகும் போதும்மனித மனம் அதனை ஏற்றுக் கொள்ளாமல் தடம் மாறும்,தடுமாறும். இது ஆழமானதாக இருந்தால்,மனம் இயல்பு நிலைக்கு திரும்பாமல்,நிஜத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் ஏற்படும் போராட்டம் மன அழுத்தமாகிறது.

இவர்கள் எந்நேரமும் அழுவார்கள் அல்லது சோகமாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது.எதிலும் பற்றற்றவர்கள் போல,எதையும் பகிர்ந்து கொள்ளாமல்தனிமையை நாடுவார்கள்.மறதியுடன்கூடியகுழப்பத்தையும்கோபம்,பயம்,விரக்தியென மாறிமாறிக் காணப்படுவர்.

இவர்களின் இத் தன்மையானது, உச்சக் கட்டத்தையடையும் போதும் தம்மையறியாமலே,பிறருக்கு தீங்கு விளைவிப்பார்கள் அல்லது தம்மைத் தாமேஅழித்துக் கொள்ள முயல்வார்கள்.

உலக மக்கள் தொகையின் நான்கு வீத மக்கள் மன அழுத்தத்தில் உள்ளார்கள் எனவும்,அதில் பெரும்பாலானவர்கள்பெண்கள் என்றும் உலக சுகாதார அமைப்பு கூறுகிறது. தற்கொலைக்கும்,மன அழுத்தத்திற்கும்,நிறைய தொடர்புண்டு. இம் மன அழுத்தத்தால் உலகில் நிமிடத்திற்கு இருவர் தற்கொலை செய்வதாக,புள்ளி விபரங்கள் கூறுகின்றன.வளர்ச்சியடைந்த நாடுகளில் மன அழுத்தத்திற்கான, காரணங்களை அறிந்து,அதை வெளிக்கொணர்ந்து, சமுகத்தில் அவர்கள்வாழும் நிலைக்கு கொண்டு வருவதில், சமுக நிறுவனங்கள்ஆர்வம் காட்டுகின்றன.

ஆனால் எமது நாடுகளில்,அதாவது கீழைத்தேச நாடுகளில் மன அழுத்தத்தில் இருந்தால் பைத்தியம் எனவும்,பேய் பிடித்



துள்ளது எனத் தவறாகவே புரிந்து அவர்களை மேலும் துன்புறுத்துகின்றனர்.

இதை தவிர்த்து அவர்களிடம் நேர்மறை எண்ணங்களை வளர்த்து, அவர்களிடம்அன்பாகப் பேசுவதன் மூலம் இதைக் குறைக்கலாம் என்று நம்பப்படுகிறது.

நம் தாயகத்தைப் பொறுத்தவரை, மன அழுத்தமானது இன்று பல்கிப் பெருகி காணப்படுகிறது.தனிப்பட்ட இழப்புக்கள், உறவுகளின் பிரிவுகள், நிதி நருக்கடி, போதைப்பொருள் பயன்பாடு, நாம் எதிர் கொள்ளும் அவமானங்கள் என்பன முக்கிய காரணியாக இடம் பெறுகின்றன.இதிலும் பெண்களை முதன்மையாக கொண்ட குடும்பங்களில்,பெண்கள் பெரும் மன அழுத்தத்திலேயே காணப்படுகின்றனர். யுத்தம் மௌனமாகும் முன் இருந்த நிலைக்கும்,இன்றைய நிலைக்கும் நிறைய முரண்பாடுகள் உள்ளன. பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பல அவர்களை தற்கொலை வரை கொண்டு செல்கிறது.

மருந்துகள் மூலம் மன அழுத்தத்தை குறைக்க முடியாது. மன அழுத்தத்திற்கு உள்ளானவர்கள் தாமாகவே முன்வந்து, தம் பிரச்சனைகளை பேசி, உதவிகளைப் பெற்று ஒரு ஆரோக்கியமான சமுகத்தை உருவாக்க வேண்டும். அதற்கான சூழ்நிலைகளை நாம் தோற்றுவிக்க வேண்டும்.

நம் சுற்றுச்சூழலில் மன அழுத்தத்திற்கு ஆளானவர்களைக் கண்டால், அவர்களை அன்போடு அணுகி, அவர்களின் பிரச்னைக்கு தீர்வு காண அல்லது அவர்களுக்கான உதவியை பெற்றுத் தர உதவுங்கள், அல்லது வழிகாட்ட முன்வாருங்கள். மீண்டும் கேலி பேசி அவர்களை பாதிப்புக்கு உள்ளாக்காதீர்கள்.

மன அழுத்தத்தால் உறவுகளை இழந்த வாழ்வுகளுக்கு, மீண்டும் உயிர் கொடுத்து, அவர்கள்வாழ்வை சிறப்பாக வாழ முடியும் என்ற நம்பிக்கையை கொடுக்க வேண்டியது சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரதும் கடமையாகும்.

# புத்திசாலித்தனம்

கேரளாவில் ஒரு பெரிய தொழிற்சாலை கட்டப்பட்டது. அந்த ஆலை கட்டும் போது பெரும் பிரச்சனை ஏற்பட்டது.

பிரச்சனை என்னவென்றால் ஆலையில் கட்டப்பட்ட ஆழமான குழியின் அடிப்பகுதியில் மிகவும் கனமான இயந்திரம் வைக்கப்பட வேண்டும். ஆனால் இயந்திரத்தின் எடை ஒரு சவாலாக இருந்தது. இயந்திரம் தளத்திற்கு வந்துவிட்டது, ஆனால் 30 அடி ஆழமான குழியில் அதை எவ்வாறு இறக்குவது என்பது பெரும் சிக்கலாக மாறிவிட்டது.

இயந்திரம் சரியாக நிறுவப்படவில்லை என்றால், அடித்தளம் மற்றும் இயந்திரம் இரண்டும் மிகவும் பாதிக்கப்படும். மிக அதிக எடையைத் தூக்கக்கூடிய கிரேன்கள் எல்லா இடங்களிலும் கிடைக்காத காலம் இது. கிடைக்கக்கூடியவர்கள் இயந்திரத்தை தூக்கலாம், ஆனால் அதை ஆழமான குழியில் தரையிறக்குவது அவர்களின் திறனுக்கு அப்பாற்பட்டது.

இறுதியாக, ஆலை கட்டும் நிறுவனம் கைவிட்டு, இந்த பிரச்சனைக்கு தீர்வு காண டெண்டர் விடப்பட்டது. இதனால், ஏராளமானோர் இந்த இயந்திரத்தை குழிக்குள் பொருத்துவதற்கான தங்கள் செலவு விபரத்தை அந்தத் தொழிற்சாலைக்கு அனுப்பினர். கிரேன் வரவழைத்து இயந்திரத்தை பொருத்தி விடலாம் என நினைத்தனர்.

அதன்படி, பணியை முடிக்க, 10 முதல், 15 லட்சம் ரூபாய் வரை கேட்டனர். ஆனால் அந்த மக்களிடையே ஒரு ஜென்டில்மேன் இருந்தார்.

மெஷின் தண்ணீரில் நனைந்தால், ஏதாவது பிரச்சனை வருமா? என்று நிறுவனத்திடம் கேட்டார்.

இது இயந்திரத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்று நிறுவனம்பதிலளித்தது.



அதன்பின், அந்த மனிதர் தனது செலவு விபரங்கள் அடங்கிய படிவத்தை நிரப்பினார். அனைத்துப் படிவங்களையும் பார்த்தபோது, அந்த நபர் வேலையை முடிக்க 5 லட்சம் ரூபாய் மட்டுமே கேட்டுள்ளார்.

எனவே வெளிப்படையாக, இயந்திரம் அமைக்கும் வேலை அவருக்கு வழங்கப்பட்டது. ஆனால் விசித்திரமான விஷயம் என்னவென்றால், இந்த நபர் இந்த வேலையை எப்படி செய்வார் என்பதை பகிர்ந்து கொள்ள மறுத்துவிட்டார். மேலும், அதைச் செய்வதற்கான திறமையும் சரியான குழுவும் தன்னிடம் இருப்பதாக மட்டுமே கூறினார்.

இந்த வேலையைச் செய்ய வேண்டிய தேதி மற்றும் நேரத்தைச் சொல்லுமாறு அவர் நிறுவனத்திடம் கேட்டார்.

இறுதியாக அந்த நாள் வந்தது.

ஒவ்வொரு ஊழியரும், மேலாளரும், நிறுவனத்தின் முதலாளியும், சுற்றியிருந்தவர்களும் கூட, அந்த மனிதன் இந்த வேலையை எப்படிச் செய்வான் என்று தெரிந்துகொள்ள ஆர்வமாக இருந்தனர். அவரோ தளத்தில் எந்த முற்கூட்டிய தயாரிப்பும் செய்யவில்லை.

சரி முடிவு செய்த நேரத்தில், நிறைய லாரிகள் அந்த தளத்தை அடைய ஆரம்பித்தன. அந்த லாரிகள் அனைத்தும் பனிக்கட்டிகளால் நிரப்பப்பட்டிருந்தன. அவ்வளவு பனிக்கட்டிகளும் குழிக்குள் நிரப்பப்பட்டன.

குழி முழுவதுமாக பனியால் நிரம்பியதும், இயந்திரத்தை நகர்த்தி பனி அடுக்குகளின் மேல் வைத்தனர். இதற்குப் பிறகு, ஒரு சிறிய தண்ணீர் பம்ப் சுவிட்ச் ஆன் செய்யப்பட்டு, குழியில் ஒரு குழாய் செருகப்பட்டது.

தண்ணீர் வெளியே எடுக்கப்பட்டது. பனி உருகியது, தண்ணீர் தொடர்ந்து கொட்டியது, இயந்திரம் கீழே செல்லத் தொடங்கியது.

சுமார் 4-5 மணி நேரத்திற்குள் வேலை முடிந்தது. மொத்த செலவு ரூ.1 லட்சத்திற்கும் குறைவாகவே வந்தது. இயந்திரம் கச்சிதமாக பொருத்தப்பட்டு, அந்த நபருக்கு ரூ.4 லட்சத்துக்கு மேல் லாபம் கிடைத்தது.

வணிகம் உண்மையில் மிகவும் சுவாரஸ்யமான விஷயம். பிரச்சினைக்கு எளிய தீர்வைக் கண்டறிவது ஒரு கலையாகும், இது மனிதனின் விவேகம், புத்திசாலித்தனம் மற்றும் நடைமுறை புரிதலைப் பொறுத்தது.

கஷ்டமான பிரச்சனைகளுக்கு கூட விவேகத்தின் மூலம் எளிய தீர்வுகள் கிடைக்கும்.



# தமிழர் தாயகத்தின் வடபகுதி பற்றிய சுவாரசிய தகவல்கள்

**வட மாகாணம்**

**இலங்கையின் வடக்கின் புராதனபெயர் - நயினாதீவு (நாகதீவு)**
**வடக்கில் சிறிய மாவட்டம் - யாழ்ப்பாணம்.**
**வடக்கில் பெரிய மாவட்டம் - முல்லைத்தீவு.**
**வடக்கில் கடற்பரப்பில்லாத மாவட்டம் - வவுனியா.**
**வடக்கில் குளங்கள் அதிகமாக காணப்படும் மாவட்டம் - முல்லைத்தீவு.**
**வடக்கில் காணப்படும் பெரிய தீவு - நெடுந்தீவு.**
**வடக்கில் சிலிக்கன் மணல் காணப்படும் இடம் - நாகர்கோவில்.**
**வடக்கு மாகாணசபை அமைந்துள்ள இடம் - கைதடி.**
**வடமாகாணத்தில் சனத்தொகை அடர்த்தி கூடிய மாவட்டம் - யாழ்ப்பாணம்.**
**வடமாகாணத்தில் சனத்தொகை அடர்த்தி குறைந்த மாவட்டம் - முல்லைத்தீவு.**

**வடமாகாணத்தின் பரப்பளவு - 8884 சதுர கிலோமீட்டர்.**
**வடமாகாணத்தின் நிலப்பரப்பு 8290 சதுர கிலோமீட்டர்.**
**வடக்கில் எண்ணெய் வளம் உள்ள மாவட்டம் - மன்னார்.**
**வடக்கில் சிறுவர் நீதிமன்றம் அமைந்துள்ள இடம் - குருநகர், யாழ்ப்பாணம்.**
**வடக்கில் அல்லது இலங்கையில் நீளமான பாலம் - வேலணை -புங்குடுதீவு.**
**வடக்கில் காணப்படும் முனை -பருத்தித்துறை (பேதுறு)**
**வடக்கில் காணப்படும் நீரேரிகள் - கச்சாய் அல்லது கிளாலி, சுண்டிக்குளம், தொண்டைமானாறு.**

**வடக்கில் இருந்து பாராளுமன்றம் சென்ற முதலாவது பெண் -** 15 February 1989 - 24 June 1994 **- திருமதி புலேந்திரன் ராஜமனோகரி - வன்னி.**

வடக்கில் ஒட்டு தொழிற்சாலை ஒட்டுசுட்டானிலும், உப்பளம் ஆனையிறவிலும், சீமேந்து தொழிற்சாலை காங்கேசன்துறையிலும் இரசாயன தொழிற்சாலை பரந்தனிலும் காணப்படுகிறது.

வடமாகாணத்தில் பாதுகாக்கப்பட்ட பறவைகள் விலங்குகள் காப்பகம் என அறிவிக்கப்பட்ட இடம் - சுண்டிக்குளம் (கிளிநொச்சி மாவட்டம்).

வேலணை தீவு அல்லது லைடன் தீவுகள் எனப்படுவது வடக்கில் பெரிய கூட்டிணைக்கப்பட்ட தீவாகும்.

யாழ்ப்பாணத்தில் காணப்படும் ஒரே ஆறு - வழுக்கையாறு (பருவகால ஆறு).

இலங்கையில் காணப்படும் குளங்களில் மூன்றாவது பெரிய குளம் - இரணைமடுக் குளம். 'செங்கையாழியன்' என அழைக்கப்படும் வடமாகாணத்தின் மறைந்த எழுத்தாளர் - கலாநிதி க.குணராசா.





வடக்கில் உள்ள கைத்தொழிற் பேட்டை - அச்சுவேலி.

வவுனிக்குளத்தை கட்டுவித்த தமிழ் மன்னன் - எல்லாளன்.

பனைமரத்தின் விஞ்ஞான பெயர் - ‘Borassus flabellifer‘.

வடக்கிற்கான ரயில் சேவை 1989.01.19 பின் 13.10.2014 உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப் பட்டது.

வடக்கு ரயில் பாதையை புனரமைத்த இந்திய நிறுவனம் - இர்கொன்.

இரணைமடு நீர் விநியோக திட்டத்திற்கு உதவி வழங்குவது - ஆசிய அபிவிருத்தி வங்கி.



இரணமடு நீர் விநியோக திட்டத்திற்கு மாற்றீடான மற்றுமொரு திட்டம் - ஆறுமுகம் திட்டம்.

யாழ்ப்பான பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது - ஒகஸ்ட் 1, 1974.

வடமாகாணத்தில் ஒவ்வொரு வருடமும் மரம் நடுகை தினம் நவம்பர் 01 - 30 வரை கொண்டாடப்படுகிறது.

மருத மரத்தின் விஞ்ஞான பெயர் - Terminalia elliptica.

வெண்டாமரை பூவின் விஞ்ஞான பெயர் - Nelumbo nucifera.

ஆண் மானின் விஞ்ஞான பெயர் - அதுடிண் ச்துடிண்.

சுன்னாகம் கழிவு ஒயில் தொடர்பான நிறுவனம் - நொதேர்ன் பவர்.

யாழ் நூலகம் ஆரம்பிக்கப்பட்டது - 1933 ஆம் ஆண்டு.

யாழ்ப்பான நூல்நிலையம் எரிக்கப்பட்ட ஆண்டு - 31.05.1981

யாழ்ப்பாண வரலாற்றை கூறும் நூல்கள் - வையாபாடல், யாழ் வைபவ மாலை.

யாழ்ப்பான பல்கலைக்கழகத்தை உருவாக்கியவர் - சேர் பொன் இராமநாதன்.

முறிந்த பனை (The Broken Palmyrah) என்ற நூலை எழுதியவர்கள் - ராஜினி திராணகம, ராஜன் ஹூல், சிறிதரன், தயா சோமசுந்தரம்.

மன்னருக்கான ரயில் சேவைகள் 1914ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் யுத்தத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டது - 14.03.2015.

மன்னார் - நாவற்குழி பிரதான பாதை அ32.

பரந்தன் - முல்லைத்தீவு பிரதான பாதை அ35.

மாங்குளம் - முல்லைத்தீவு பிரதான பாதை அ34.

முல்லைத்தீவோடு இணைக்கப்பட்ட பிரதேசம் - மணலாறு (வெலிஓயா).

இலங்கையில் வறுமை கூடிய மாவட்டம் -கிளிநொச்சி.

மதுபான விற்பனை மற்றும் எய்ட்ஸ் பாதிப்பு அதிகரித்து காணப்படும் மாவட்டம் - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 1984 பெப்ரவரியில் கிளிநொச்சி மாவட்டம் பிரிக்கப்பட்டது.

யாழ் கோட்டை போர்த்துகேயரால் 1625 இல் கட்டப்பட்டது.

தற்போது காணப்படும் யாழ் கோட்டை ஒல்லாந்தரால் உடைக்கப்பட்டு 1658 யூன் 23 இற்கு பின் கட்டப்பட்டதாகும்.

பண்டைய யாழ்ப்பாண அரசின் நாணயம் - சேது நாணயம்.

யாழ்ப்பாண அரசின் பழைய சின்னமாக விளங்குவது - நந்தி.

வன்னி இராட்சியம் வீழ்ச்சியடைந்தது - 1803ம் ஆண்டு.

ஒல்லாந்தரால் சொத்துரிமை தொடர்பாக யாழ்ப்பாணத்துக்கு மட்டும் உரித்தான சட்டம் - தேசவழமைச் சட்டம்.


யாழ் நூலை எழுதியவர் - சுவாமி விபுலானந்தர் 1947.

சுவாமி விபுலானந்தர் இயற்பெயர் - மயில்வாகனன் 1892.

சைவசமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் - ஆறுமுகநாவலர் (1822 டிசம்பர் 18 ஆறுமுகம் பிள்ளை).

நாவலர் 1872 இல் முதல் உருவாகிய சைவ ஆங்கிலப் பாடசாலை - வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை.

மன்னாரில் எண்ணெய் வள ஆய்வில் ஈடுபட்ட நிறுவனம் - கெய்ன் இந்தியா நிறுவனத்தின் துணை நிறுவனமான கெய்ன் லங்கா.





# கணித மேதை ராமானுஜன்

உலகே வியந்த கணித மேதை ராமானுஜன் தனக்கு வேண்டும் என்று கேட்டது என்ன தெரியுமா? கண்டிப்பாக உங்கள் குழந்தைகளிடம் இந்தக் கட்டுரையை பகிருங்கள்.

இன்றைக்கு ஒரு பள்ளி மாணவனுக்கோ அல்லது கல்லூரி மாணவனுக்கோ படிப்பதற்குரிய சௌகரியங்களுக்கும் அடிப்படை வசதிகளுக்கும் வீட்டிலோ வெளியிலோ எந்தப் பஞ்சமும் இல்லை.

அரசாங்கமே அனைவருக்கும் 'லேப்டாப்' வேறு தருகிறது. சோற்றுக்கோ சுகத்துக்கோ பஞ்சமில்லை. சோறு சலித்தால் இருக்கவே இருக்கிறது கே.எப்.சி, பீட்சா ஹட் போன்றவை. அம்மா தரும் காபி சலித்தால் இருக்கவே இருக்கிறது காஃபி டே. கேளிக்கைக்கும் பஞ்சமில்லை. தொலைகாட்சி சலித்தால் இருக்கவே இருக்கிறது மல்டிப்ளெக்ஸ்.

மொபைல் ஃபோன் வடிவத்தில் ஒரு சினிமா தியேட்டரே நமது கைகளில் தவழ்கிறது. காமிராவிலிருந்து ஆப்பிள் ஃபோன், ஐபாட் வரை எதற்கும் பஞ்சமில்லை.

மின்சாரமின்றி நம்மால் ஒரு மணிநேரம் கூட இருக்கமுடியவில்லையே அந்தக் காலத்தில் சாதனையாளர்கள் பள்ளி செல்லும் நாட்களில் எத்தனை கஷ்டப்பட்டிருப்பார்கள்?

பாரதி ராமானுஜம் இவர்களைப் போன்றவர்களை இறைவன் செல்வந்தர்களாக படைக்கவில்லை என்றாலும் பரவாயில்லை, குறைந்த பட்சம் பசித்தால் சாப்பிட சோறு கிடைக்கும் நிலையிலாவது படைத்திருக்கக்கூடாதா? ஒரு வாய் சோறு பாரதிக்கும் ராமானுஜத்துக்கும் கொஞ்சம் கூடுதலாக கிடைத்திருந்தால், இன்னும் எத்தனை எத்தனையோ பொக்கிஷங்களை அவர்கள் இந்த உலகிற்கு தந்திருப்பார்களே

ஏ.டி.எம். இயந்திரம் நாம் கார்டை சொருகியவுடன் பணத்தை தருகிறதே ராமானுஜம் கண்டுபிடித்த தேற்றத்தின் அடிப்படியில் தான் அது இயங்குகிறது என்பது தெரியுமா?

இராமானுஜன் தன் குறுகிய வாழ்க்கைக் காலத்திலேயே 3900 க்கும் அதிகமான புதுக் கணிதத் தேற்றங்களைக் கண்டுபிடித்தவர். சிறு வயதிலேயே யாருடைய உதவியும், வழி காட்டுதலும் இன்றி வியப்பூட்டும் வகையில் கணிதத்தின் மிக அடிப்படையான ஆழ் உண்மைகளைக் கண்டுபிடித்தவர்.


இராமானுஜன் பிறந்தது முதல்இராமானுஜனின் நிழல் போல், ஒட்டி உறவாடி வாட்டி வதைத்தது வறுமையே ஆகும். வறுமையின் கோரப் பிடியில் சிக்கித் தவித்த இராமானுஜனின் உண்மை நிலையை உணர்த்துவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இராமானுஜனின் தந்தை சீனிவாச அய்யங்கார், கும்பகோணத்தில் உள்ள ஜவுளிக் கடை ஒன்றில் வேலை பார்த்து வந்தார். இவரது மாத ஊதியம் ரூ.20 ஆகும். இராமானுஜனின் தாயார்கோயில்களில் பஜனைப் பாடல்களைப் பாடுவதன் வாயிலாக மாதம் ரூபாய் 10 சம்பாதித்து வந்தார்.குடும்பமே போதிய வருமானமின்றித் தவித்தது. பல நாட்கள் உண்ண உணவின்றித் தண்ணீரை மட்டுமே குடித்து வளர்ந்தவர் இராமானுஜன்.

ஒரு நாள் இராமானுஜன் பள்ளிக்குச் செல்வதற்கு முன் உணவுத் தட்டுடன் சாப்பிடத் தயாரானான். ஆனால் தாய் கோமளத்தம்மாளோ, அய்யா சின்னசாமி, அம்மா எப்படியும் மாலைக்குள் அரிசி வாங்கி சமைத்து வைக்கிறேன். இரவு சாப்பிடலாம். அதுவரை பொறுத்துக் கொள் என வேண்டினாள். இராமானஜனோமறு வார்த்தை பேசாமல் இரண்டு டம்ளர் தண்ணீர் குடித்து விட்டுஅம்மா நான் பள்ளிக்குச் சென்று வருகிறேன் என்று கூறி பள்ளிக்குச் சென்று விட்டான்,

ஆனால், அன்று மாலை பள்ளியில் இருந்து இராமானுஜன் வீடு திரும்பவில்லை, கவலையில் கண்ணீர் விழிகளுடன் கோமளத்தம்மாள் இராமானுஜனைத் தேட ஆரம்பித்தாள், எங்கு தேடியும் காணவில்லை. அச்சமயம் இராமானுஜனின் நண்பன் அனந்தராமனின் தாயார் அங்கு வந்து விசாரிக்க, இராமானுஜனைக் காணவில்லை எனக் கூறி அழுதாள் அந்தத் தாய். தன் மகன் காலையும் சாப்பிடவில்லை, மதியமும் சாப்பிடவில்லை, மாலை வெகுநேரமாகியும் வீடு திரும்பவில்லை எனக் கூறி அழத் தொடங்கினாள். கோமளத்தம்மாளை சமாதானம் கூறி வீட்டில் அமரவைத்து விட்டுத் தானும்,அனந்தராமனும் ஆளுக்கொரு பக்கமாக இராமானஜனைத் தேடத் தொடங்கினர்.

அனந்தராமன் பல இடங்களில் தேடி அலைந்தான். எங்கும் இராமானுஜனைக் காணவில்லை, திடீரென்று அனந்தராமனுக்கு ஒரு சந்தேகம். ஒரு வேளை சாரங்கபாணிக் கோயிலுக்குச் சென்றிருப்பானோ? என்று. உடனடியாக கோயிலுக்குச் சென்று தேடினான், கோயிலின் ஒரு மண்டபத்தில் கணக்குப் புத்தகங்களைத் தலைக்கு வைத்துக்



கொண்டு இராமானுஜன் தூங்கிக் கொண்டிருந்தான்.

அவன் படுத்திருந்த தரை முழுவதும் சாக்கட்டியால் கணக்குகள் போடப்பட்டிருந்தன, அனந்தராமன் அவனைத் தட்டி எழுப்பினான், திடுக்கிட்டு எழுந்த இராமானுஜன், என்ன அனந்தராமா! அதற்குள் எழுப்பிவிட்டாயே நேற்று நமது கணக்கு வாத்தியாருக்கே விடை கண்டுபிடிக்கத் தெரியாத அந்தக் கணக்கை நான் மனதிலேயே போட்டுப் பார்த்தேன். போட்டு முடிப்பதற்குள் எழுப்பிவிட்டாயே என்றவன், இரு! கனவில் நான் போட்ட பாதிக் கணக்கையாவது இந்த நோட்டில் எழுதிவைத்துவிட்டு வருகின்றேன் என்று கூறி எழுதத் தொடங்கினான்,

1913 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆம் தேதி, இராமானுஜன் அவர்கள், இலண்டன் கேம்ப்பிரிட்ஜ் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஜி.எச். ஹார்டி என்பாருக்கு ஒரு கடிதம் எழுதினார், தான் கண்டுபிடித்த தேற்றங்கள் சிலவற்றையும் இணைத்து அனுப்பினார். இராமானுஜனின் தேற்றங்களால் கவரப் பட்ட ஹார்டி, இராமானுஜனை இலண்டன் கேம்ப்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திற்கு வருமாறு அழைத்தார், பிப்ரவரி 27 இல் ஹார்டிக்கு இராமானுஜன் எழுதிய கடிதம், படிப்போரை நெகிழச் செய்வதாகும்.

'நான் தற்சமயம் தங்களிடம் வேண்டுகோளாக வைப்பதெல்லாம் ஒன்றுதான். நான் உண்ண உணவின்றி அரைப் பட்டினியாக இருக்கும் ஒரு மனிதன். எனது மூளையைப் பாதுகாக்கஎனது வயிற்றிற்கு உணவு தேவையாக உள்ளது. இதுவே எனது முதல் தேவையாகும்' என்று எழுதினார்,

இராமானுஜனின் உண்மை நிலையை, வறுமையில் உழன்ற அவல நிலையை விளக்க இக்கடிதம் ஒன்றே போதுமானதாகும்.

ஊதா நிற மையினால் கணக்குகளை தாளில் எழுதிவரும் இராமானுஜன், ஒரு பக்கம் முடிந்ததும், அடுத்த பக்கத்தில் எழுதாமல், அதே பக்கத்திலேயே, மேலிருந்து கீழாக, ஊதா நிற வரிகளுக்கு இடையே சிகப்பு நிற மையினால் எழுதுவார்.

நோட்டு வாங்கக் கூட காசில்லாத நிலையில் இராமானுஜன் இருந்தமைக்கு இந்த நோட்டுகளே சாட்சிகளாய் இருக்கின்றன. -

ஐந்து வருடம் இலண்டனில் தங்கி உலகையேத் தனது பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துப் பெருமையுடன் தாயகம் திரும்பினார் இராமானுஜன். அவருடன் இரண்டறக் கலந்து



காசநோயும் வந்தது. காசநோயால் பாதிக்கப் பட்டு எழும்பும் தோலுமே உள்ள உருவமாய் இளைத்த இராமானுஜன், அந்நிலையில் கூட தனது கணித ஆய்வை நிறுத்தவில்லை. 1920 ஆம் ஆண்டு சனவரி 12 ஆம் நாள் ஹார்டிக்குத் தனது இறுதிக் கடிதத்தை எழுதினார்.

'இந்தியாவிற்குத் திரும்பியபின் இதுநாள் வரை தங்களுக்குக் கடிதம் எழுதாததற்கு மன்னிக்கவும். நான் ஆச்சரியப்படும் வகையில் ஒரு சார்பினைக் கண்டுபிடித்துள்ளேன். அதற்கு மாக் தீட்டா சார்பு எனப் பெயரிட்டுள்ளேன். இக்கடிதத்துடன் சில சார்புகளை அனுப்பியுள்ளேன்' என்று எழுதினார்,

தனது கடைசி மூச்சு உள்ளவரை கணித்தை மட்டுமே நேசித்த, சுவாசித்த மாபெரும் கணித மேதை சீனிவாச இராமானுஜன். இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் 1946 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட Discovery Of India எனும் நூலில் இராமானுஜன் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்,

'இராமானுஜனின் குறுகிய கால வாழ்வும் மரணமும் இந்தியாவின் நிலையினைத் தெளிவாகக் காட்டுகிறது. கோடிக் கணக்கான இந்தியர்களுள் சிலருக்கே கல்வி கற்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. வறுமையின் பிடியில் சிக்கி உண்ண உணவின்றி, பசியால் தவிக்கும் ஏழைகளுக்கு உண்ண உணவும், கற்க கல்வி வசதியும் ஏற்படுத்தப் படுமேயானால், இந்தியாவில் இருந்து விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், மருத்துவர்கள், தொழிலதிபர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் இலட்சக் கணக்கில் தோன்றிப் புதிய பாரதத்தைப் படைப்பார்கள் என்பது உறுதி.'

மிக எளிய குடும்பத்தில் பிறந்து 'கொடிது கொடிது வறுமை கொடிது' என அவ்வை பாடிய இளமையில் வறுமையோடு வளர்ந்து கணித உலகின் சக்கரவர்த்தியாகப் பிரகாசித்த ராமானுஜம் ஒரு கணிதமேதை என்று மட்டும் தெரியும். கல்லூரி மாணவர்க்கு அவரது கணித பங்களிப்பு பற்றி எதுவும் தெரியாது. கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்ததுபோல் ராமானுஜம், ராமானுஜம் நம்பர் என்கிற ஒன்றை கண்டுபிடித்தார் என்று சில பேராசிரியர்களே இன்னமும் நம்பிக் கொண்டிருக்கும் அவலம் ஒரு புறம். அவர் பிறந்து வாழ்ந்த வீட்டை அவர் ஊர்க்காரர்களாலேயே அடையாளம் காட்ட முடியாமல்போன அவமானம் ஒரு புறம்.

இதற்கிடையே கணிதமேதை குறித்த வாழ்வாதாரங்களைத்தான் காப்பாற்றவில்லை . கணிதத்தையாவது காப்பாற்றினோமா என்றால் நாலும் மூணும் எத்தனை என்பதற்கே கால்குலேட்டரைத் தேடும் ஒரு புதிய தலைமுறை. அடடா!



ந.மாலதி

# பாலஸ்தீன் தேசிய போராட்டம்

## (காலத்தின் தேவைகருதி மீள்பிரசுரமாகிறது)

இன்றைய பாலஸ்தீனிய-இஸ்ரேலிய பிரச்சனையை இன்றைய உலக ஒழுங்கின் பின்னணியில் தான் புரிந்து கொள்ள வேண்டும். ஆனாலும் இதன் ஆயிரமாண்டுகள் பின்னணியும் தெரிந்திருப்பது புரிதலை ஆழமாக்குவதற்கு உதவும். இதன் வரலாற்று பின்னணியில் கிறிஸ்தவ, இஸ்லாமிய பேரரசுகள் தாக்கம் செலுத்துகின்றன.

### பழைய வரலாறு:

10,000 ஆண்டுகளுக்கு முன் ஆறுகள் ஓடி செழுமையாக்கப் பட்ட நிலப்பரப்பான மத்திய கிழக்கில் விவசாயமும் அதனால் உருவான ஓரிடத்தில் வாழும் நாகரீகமும் ஆரம்பித்ததாக சொல்லப்படுகிறது. மத்திய கிழக்கின் ஒரு பகுதி நிலமே பாலஸ்தீன் என்று பழைய வரலாற்றில் குறிப்பிடப்படுகிறது.

இங்கு வாழ்ந்த மக்களை இன்றைய காலத்தில் அரேபியர்கள் என்கிறோம். இந்த அரேபியர்கள் மத்தியில் ஏறக்குறைய 4000 ஆண்டுகளுக்கு முன் உருவானதுதான் யூத மதம்.

இவர்களின் கதையாடல்களில் இவர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்த போது மோசஸ் இவர்களை பாலஸ்தீனத்திற்கு நடத்தி சென்றார் என்பார்கள். 2000 ஆண்டுகளுக்கு முன் ஆட்சி செய்த யூத அரசன் டேவிட் ஜெரூசலத்தில் கட்டிய கோவில் யூதர்களின் முக்கிய வழிபாட்டு தலமாக தொடர்கிறது. 1000 ஆண்டுகளுக்கு முன் எழும்பிய ரோமாபுரி அரசின் கிறிஸ்தவ சிலுவைப்போர் காலத்தில் இக்கோவில் அழிக்கப்பட்டது.

யூதர்களும் தொடர்ச்சியாக ஐரோப்பா எங்கும் பரவினார்கள். இதற்கு பின்னர் இஸ்லாமிய மதத்தின் தோற்றத்தை தொடர்ந்து மத்திய கிழக்கு, தெற்கு ஐரோப்பா, வடக்கு ஆபிரிக்க பகுதிகளை ஏறக்குறைய 600 ஆண்டுகளாக 19ம் நூற்றாண்டு வரை ஆட்சிசெய்தது இஸ்லாமிய பேரரசான





ஒட்டமான் பேரரசு. அப்பேரரசின் கீழ் கலைகள், அறிவியல் வளர்ச்சிகள் பற்றி ஆய்வாளர்கள் வியந்து பேசுவார்கள். ஒட்டமான் அரசின் கீழிருந்த ஐரோப்பிய பிரதேசங்கள் ஏற்கனவே கத்தோலிக்க மதத்தை பின்பற்றியவை.

ஏறக்குறைய 500 ஆண்டுகளின் முன் இப்பிரதேசங்களின் அரசர்கள் ஒட்டமான் பேரரசுடன் தொடர்ந்து போர் செய்து போத்துக்கேய மற்றும் இஸ்பானிய பேரரசுகளை வளர்த்தார்கள். இக்காலத்திலேயே ஐரோப்பாவில் யூதர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் எதிரான இனவாத கருத்துக்கள் வளர்ந்தன. தொடர்ந்து பிரித்தானிய பேரரசு உட்பட ஐரோப்பாவில் வளர்ந்த பேரரசுகள்தான் உலகெங்கும் காலனிகளை உருவாக்கினார்கள்.

இன்று நாம் காலனிய காலம் என்று அறிந்திருக்கும் காலத்தை இந்த ஐரோப்பிய பேரரசுகள் ஆரம்பித்து வைத்தன. இந்த காலனிய காலத்தின் இறுதியில், அடுத்தடுத்து 30 ஆண்டுகளுக்குள் இடம்பெற்ற முதலாம் மற்றும் இரண்டாம் உலக போர்கள்தான் இன்றைய ஐநாவையும் உலக ஒழுங்கையும் நிர்ணயித்தவை.

## முதலாம் உலகப்போரும் சியோனிஸ்டுகள் குடியேற்றமும்:

பலநூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் வாழ்ந்த யூதர்கள் அங்கு அவர்கள் மேல் காட்டப்பட்ட இனவாதத்தால் உலகளாவிய சியோனிச இயக்கம் ஒன்றை உருவாக்கி தமது பூர்வ நிலமாக அவர்கள் கருதிய பாலஸ்தீனத்தை மீண்டும் கற்பனை செய்ய தொடங்கினார்கள். செல்வந்தர்களான யூதர்கள், வரலாற்று பாலஸ்தீனம் என்று இன்று அழைக்கப்படும் பாலஸ்தீனத்தில் நிலங்கள் வாங்கி அங்கு யூதர்களை குடியேற்றினார்கள்.

படத்தில் வெள்ளை நிறத்தில் காட்டப்பட்டிருக்கும் பகுதிகளே இவ்வாறு யூதர்கள் குடியேறிய பகுதிகள். முதலாம் உலக போரின் போது உலகிலேயே பலம் மிக்க பேரரசாக இருந்த பிரித்தானிய பேரசு இந்த சியோனிச கனவுக்கு ஆதரவு வழங்கி பாலஸ்தீனிய பிரச்சனைக்கு வித்திட்டது என்று சொல்வதும் பிழையாகாது.

முதலாம் உலக போரின் இறுதியில், 1917இல், பிரித்தானியா ஒட்டமான் பேரசின் கீழிருந்த பாலஸ்தீன நிலத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. இக்காலத்திலேயே பிரித்தானியா சியோனிச கனவுக்கு ஆதரவு வழங்கும் 'பல்ஃவோர்' (Balfour) பிரகடனத்தை செய்தது.

பிரித்தானியா பாலஸ்தீனத்தை ஆட்சி செய்த குறுகிய காலத்தில், அதன் சியோனிச திட்டத்தை எதிர்த்து பாலஸ்தீனத்தில் இருந்த அரேபியர்களின் ஆயுதப்போராட்டத்தை சிறுக சிறுக ஆரம்பித்தார்கள். அரேபிய போராட்டக்காரர்களுக்கு எதிராக யூதர்களுக்கு ஆதரவாக பிரித்தானியா தனது இராணுவத்தை இயக்கியது. அரேபியர்களின் எதிர்ப்பை அழித்தொழித்தது பிரித்தானியா. யூதர்கள் பெரும்தொகையாககுடியேறுவதை முதலில் ஆதரித்த பிரித்தானியா இப்போது அரேபியர்களின்எதிர்ப்பை சமாளிப்பதற்காக யூதர்களின் பாலஸ்தீனத்திற்கு வரும் தொகையை கட்டுப்படுத்த முயன்றது.

இப்போது சியோனிச சக்திகள் பிரித்தானியவை வெளியேற்றும் எண்ணத்துடன் அதன் மேலும் தாக்குதல் நடத்தின. பாலஸ்தீனர்களை அவர்களின் நிலத்தில் இருந்து வெளியேற்றும் திட்டங்களையும் சியோசிஸ்டுகள் தொடர்ந்து அமுல்படுத்தினார்கள். இரண்டாம் உலக போரும் சியோனிச ஆதரவு சூழலும்இரண்டாம் உலக போர்ச்சூழலில் ஐரோப்பாவில், முக்கியமாக ஜெர்மனியில், யூதர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனவழிப்பால் யூதர்களுக்கு ஆதரவான சூழல் ஒன்று உலகில் உருவானது.

யூதர்களுக்கு ஆதரவாக உருவான சூழலில் வரலாற்று பாலஸ்தீனத்தை யூதர்கள் இடங்கள், அரேபியர்கள் இடங்கள் என்று படத்தில் காட்டப்பட்டது போல் பங்குபோட்டு ஐநாவின் ஊடாக ஒரு தீர்மானத்தையும் 1947 இல் நிறைவேற்றியது பிரித்தானியா. தொடர்ந்து 1948 இல் பிரித்தானியா அங்கிருந்து வெளியேறியது. சர்ச்சைக்குரிய ஜெரூசலம் ஐநாவில் நிர்வகிக்கப்படும் என்றும் இத்தீர்மானம் சொல்லியது.

அக்காலத்தில் பாலஸ்தீனத்தில் இருந்த யூதர்கள் 30 வீதம். இவர்களில் பெரும்பான்மையோர் சில வருடங்களுக்கு முன்னர்தான் ஐரோப்பாவில் இருந்து அங்கு குடியேறிவர்கள். இருந்தும் இவர்களுக்கு 55 வீதம் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டது. அரேபிய நாடுகளை தவிர்த்த ஏனைய நாடுகள் இதனை ஆதரித்தன. பேரளவில் அரேபிய மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதாற்கான கட்டமைப்புக்களை உருவாக்கி விட்டு பிரித்தானியா வெளியேறினாலும், யூதர்கள் அடுத்தடுத்து இவற்றை நீக்கினார்கள்.

இப்போது தங்களுக்கு ஆதரவாக செல்வாக்கு நிறைந்த யூதர்கள் வாழும் ஐக்கிய-அமெரிக்காவை தங்களுடன் இணைத்து கொண்டார்கள்.

ஐநா தீர்மானம் நிறைவேற்றி ஆறு மாதங்களுக்குள் இஸ்ரேயில் தனிநாட்டு பிரகடனம் செய்தது. அரேபிய நாடுகளுக்கும் இஸ்ரேயிலுக்கும் இடையில் தொடர்ந்து நடந்த போரில் அரேபிய நாடுகள் தோல்வியை தழுவின. அரேபிய பாலஸ்தீனர்கள் பாலஸ்தீனத்திலிருந்து அகதிகளாக வெளியேறினார்கள்.

அரேபியர்களுக்கு என்று பிரிக்கப்பட்ட பிரதேசங்கள் பல இஸ்ரேயிலின் கட்டுப்பாட்டில் போனது. ஜோர்டன் நாடு West Bank மற்றும் கிழக்கு ஜெரூசலத்தையும், எகிப்து Gaza Strip ஐயும் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. 750,000 பாலஸ்தீனியர்கள் தங்கள் இடங்களைவிட்டு வெளியேறிய இந்நிகழ்வையே 'அல் நக்பா' (The Catastrophe) என்று நினைவுகூருகிறார்கள்.

தொடர்ந்த இஸ்ரேயில் அரேபிய போர்கள்ஆறு நாட்கள் போர் என்று குறிப்பிடப்படும் போர் இஸ்ரேலுக்கும் அரேபிய நாடுகளுக்கும் இடையில் 1967 இல்




PALESTINE FOR THE JEWS.

OFFICIAL SYMPATHY.

Mr. Balfour has sent the following letter to Lord Rothschild in regard to the establishment of a national home in Palestine for the Jewish people:—

I have much pleasure in conveying to you, on behalf of his Majesty's Government, the following declaration of sympathy with Jewish Zionist aspirations which has been submitted to and approved by the Cabinet:—

His Majesty's Government view with favour the establishment in Palestine of a national home for the Jewish people, and will use their best endeavours to facilitate the achievement of this object, it being clearly understood that nothing shall be done which may prejudice the civil and religious rights of existing non-Jewish communities in Palestine, or the rights and political status enjoyed by Jews in any other country.

I should be grateful if you would bring this declaration to the knowledge of the Zionist Federation.

நடந்தது. அதிலும் இஸ்ரேயில் வெற்றி பெற்றது. எகிப்தின் கையில் இருந்த Gaza Strip, ஜோர்டானிடமிருந்த West Bank மற்றும் கிழக்கு ஜெரூசலம், யாவும் இஸ்ரேயிலின் கைகளுக்கு மாறியது. கைப்பற்றிய பிரதேசங்களில் இருந்து இஸ்ரேயில் வெளியேற வேண்டும் என்ற தீர்மானத்தை ஐநா பாதுகாப்புச்சபை நிறைவேற்றியது. ஆனால் இஸ்ரேயில் வெளியேறவில்லை.

1973ம் ஆண்டு எகிப்தும் சிரியாவும் இஸ்ரேயிலுடன் போரிட்டன. ஐநாவால் ஒரு போர்நிறுத்த ஒப்பந்தம் உருவானது. ஐநா சமாதான படைகள் அங்கு நிறுத்தப்பட்டன. எகிப்தும் இஸ்ரேயிலும் 1979 இல் ஒப்பந்தம் செய்த பின்னர் ஐநா படைகள் அங்கிருந்து வெளியேறின. கோலன் மலையில் ஐநா படைகள் தொடர்ந்து நிறுத்தப்பட்டன. இதனோடு ஏனைய அரேபிய நாடுகள் பாலஸ்தீன விடுதலைக்காக நேரடியாக போரிடுவதும் நின்று போயிற்று. ஏராளமான அரேபிய நாடுகளின் மத்தியில் இருந்தும் பாலஸ்தீன மக்கள் தனித்து விடப்பட்டார்கள்.

பாலஸ்தீன் விடுதலை இயக்கம்:

அரேபிய நாடுகளான சிரியா, லெபனன், ஜோர்டன் மற்றும் ஏனைய வளைகுடா நாடுகளில் வாழ்ந்த புலம்பெயர் பாலஸ்தீனிய மக்களிடையே ஃபாற்றா (Fa-ta-h) என்ற அமைப்பு 1959 இல் தோற்றம் பெற்றது. உலகெங்கும் வாழும் பாலஸ்தீனிய மக்களை ஒன்று சேர்த்து பாலஸ்தீன் விடுதலைக்காக போரை முன்னெடுப்பது அப்போது அதன் நோக்கமாக இருந்தது. பிற்காலத்தில் இதுவே PLO அமைப்பின் முதன்மை பங்காளியானது. PLO எனப்படும் பாலஸ்தீன் விடுதலை இயக்கம் 1964 இல் நிறுவப்பட்டது. 1967 ஆறு நாட்கள் போரை தொடர்ந்து இது பலமாக இயங்க ஆரம்பித்தது.

யசார் அரபத் 1969 இலிருந்து 2004 இல் அவர் இறக்கும் வரை அதன் தலைவாராக தொடர்ந்தார். வெவ்வேறு கொள்கைகளை கொண்டிருக்கும் பாலஸ்தீன மக்கள் எல்லோரும் இன்றும் பாலஸ்தீன விடுதலை போராட்டத்தின் குறியீடாக யசார் அரபத்தை போற்றுகிறார்கள்.

PLO&Fatah இஸ்ரேயிலின் மீது பல தாக்குதல்களை நடத்தியது. 1974 இல் அரேபிய நாடுகளின் கூட்டணி PLO வை பாலஸ்தீன மக்களின் ஏக பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டது. இதை தொடர்ந்து ஐநா பொதுச் சபையில் பேசும் முதலாவது நாடற்ற மக்களின் தலைவராக 1982 இல் யசார் அரபத் ஐநாவில் பேசினார்.

அரேபிய வழக்கில் இன்ரஃபாடா (Intifada) என்பது அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் தலைமைத்துவம் இல்லாமல் கிளர்ந்தெழுந்து போராடுவதை குறிக்கும். இஸ்ரேயில் அடக்குமுறைகளுக்கு எதிராக பாலஸ்தீனியர்களின் முதலாவது இன்ரஃபாடா 1987 இலிருந்து 1993 வரையான காலப்பகுதி வரை தொடர்ந்தது.

பல வன்முறை போராட்டங்களை தொடர்ந்து, 1991 இல் யசார் அரபாத்தும் இஸ்ரேயிலின் பிரதமர் யிட்சக் ரபீனும் ஒஸ்லோ ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்கள். இதற்காக இருவருக்கும் 1994 இல் சமாதானத்திற்கான நோபல் பரிசும் கிடைத்தது. Gaza வினதும் West Bank இனதும் சில பகுதிகளை நிர்வாகிக்க ஒஸ்லோ ஒப்பந்தம் பாலஸ்தீன் தேசிய சபையை (PA) உருவாக்கியது. அது முதலில் PLO வின் ஒரு அமைப்பாக இயங்கியது. காலப்போக்கில் வேறு கட்சிகளும் தேசிய சபை தேர்தலில் இறங்கிய போது பாலஸ்தீன் தேசிய சபை தனித்து இயங்க, PLO ஃபாற்றா என்ற அதன் முந்தைய பெயரை எடுத்துக்கொண்டது.

ஒஸ்லோ ஒப்பந்தம் பாலஸ்தீனத்தின் சில பகுதிகளில் இருந்து இஸ்ரேயில் வெளியேறவும் ஒரு கால அட்டவணையை ஏற்றுக் கொண்டது. இந்த போர்நிறுத்த ஒப்பந்தம் பல காலம் நீடிக்கவில்லை. இஸ்ரேயிலின் தொடரும் அடக்குமுறைகளை ஏற்றுக் கொள்ளாத பாலஸ்தீன மக்கள் மீண்டும் போராடினார்கள். அதுவே இரண்டாவது இன்ரஃபாடா என்று அன்று அழைக்கப்படுகிறது. 2000 ஆண்டிலிருந்து 2005 வரை அது நீடித்தது. அதை தொடர்ந்து இஸ்ரேயில் எச்த்ச் விலிருந்து வெளியேறியது.

## ஹமாஸ்:

Gaza வில் ஃபாற்றாவுக்கு போட்டியாக ஹமாஸ் என்ற பாலஸ்தீன ஆயுத அமைப்பு இப்போது பலம் பெற்றது. 2006 பாலஸ்தீன் தேசிய சபை தேர்தலில் ஹமாஸ்






பெரு வெற்றி அடைந்தது சர்தே சத்திற்கு அதிர்ச்சியை கொடுத்தது. தொடர்ந்து 2007-2017 வரையான காலப்பகுதியில் இந்த இரு பாலஸ் தீன அமைப்புக்களான ஃபாற் றாவும் ஹமாஸூம் கடுமையாக மோதிக்கொண்டன. 2017இல் இரு அமைப்புக்களும் ஒன்றாக செயற் படுவதற்கான ஒப்பந்தம் செய்து பாலஸ்தீன தேசிய சபையில் சே ர்ந்து இயங்குகின்றன. எச்த்ச் வில் ஹமாஸூம் West Bank இல் ஃபாற் றாவும் பலமாக இயங்குகின்றது.

## ஐநா:

இன்று 6 மில்லியன் பாலஸ்தீனி யர்கள் உலகின் பல பாகங்களிலும், 4 மில்லியன் பாலஸ்தீனியர்கள் பாலஸ்தீனத்திலும் வாழ்கிறார்கள். அதே நேரம், இன்று உலகின் யூத மக்கள் தொகை ஏறக்குறைய 20 மில்லியன். இவர்களில் 6 மில்லியன் யூதர்கள் இஸ்ரேயிலில் வாழ்கிறார் கள். 12 மில்லியன் யூதர்கள் ஐ-அமெ ரிக்காவில் வாழ்கிறார்கள்.

1977 இலிருந்து ஐநாவின் பொதுச் சபை பாலஸ்தீன பிரதேசங்களை 1948 இல் பிரகடனப்படுத்திய நவம்பர் 29ம் திகதியை பாலஸ் தீன மக்களுக்கான கூட்டொ ருமை நாளாக பிரகடனப்படுத்தி அந்நாளை பாலஸ்தீன மக்களின் போராட்டத்தை பிரபலமாக்கும் நாளாக அவதானித்து வருகிறது. தனது அங்கத்துவ நாடுகளையும் பாலஸ்தீன மக்களின் கூட்டொ ருமை நாளாக இந்நாளை அவ தானிக்க கேட்டு வருகிறது. இவ் வளவு உலக ஆதரவு இருந்தும் ஐ-அமெரிக்க, ஐரோப்பிய எதிர்ப்பு இவர்களுக்கு கிடைக்க வேண்டிய நீதியை தடுத்தே வருகிறது.

2011 இல் ஐநாவின் முழு உறுப் பினராவதற்கு பாலஸ்தீன் தேசிய சபை விண்ணப்பித்தது. ஆனால் பாலஸ்தீன் தேசிய சபையை பார் வையாளராகவே ஐநா பொதுச்சபை ஏற்று வாக்களித்தது. தற்போது இத் தேசிய சபையின் தலைவராக உள்ள முகமத் அபாஸ் வன்முறைகளை எதிர்க்கிறார். சர்வதேச மட்டத் தில் பாலஸ்தீன தனிநாட்டிற்கான அங்கீகாரம் பெறுவதற்காகவே இவர் உழைக்கிறார். பயங்கரவாத அமைப்பாக ஐ-அமெரிக்காவால் தடைசெய்யப்பட்ட ஹமாஸ் கூட இஸ்ரேயில்-பாலஸ்தீன் என்ற இரு நாட்டு தீர்வை ஏற்கிறது.

இந்தியா மற்றும் சிறிலங்கா உட் பட, உலகின் 140 க்கும் அதிகமான நாடுகள் பாலஸ்தீன தனிநாட்டை



அங்கீகரித்து தூதரகங்களையும் வைத்திருக் கின்றன. இஸ்ரேயிலும் ஐ-அமெரிக்காவும் தான் தொடர்ந்து இத்தீர்வை எதிர்க்கின்றன. உலகில் இன்று நிலவும் அநீதிக்கு அடிப் படை காரணம் எதுவென்று இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.


## எமக்கான பாடங்கள்:

பாலஸ்தீன தேசிய பிரச்சனையை புரிந்து கொள்வது இன்றைய உலக ஒழுங்கை புரிந்து கொள்வதற்கு மிகவும் உதவும். பாலஸ்தீன தேசிய பிரச்சனையின் செயற் பாட்டாளர்களில் முதன்மையானதாக ஐக்கிய அமெரிக்காதான் இயங்குகிறது. உண்மையில் உலகம் பாலஸ்தீனியர்களின் பக்கமும் மேற்குலகம் ஐ-அமெரிக்க-இஸ்ரேயில் கூட்டணிக்கு பின்னாலும் நின் றுதான் இயங்குகின்றன. இவ்விரு பிரிவுக



ளின் இடையில் இயங்கும் ஐநாவின் பலவீ னத்தை பற்றியும் நாம் புரிந்து கொள்ள லாம். சர்வதேச சட்டங்கள் என்று சொல் லப்படுபவை எல்லாம் இங்கு பலமிழந்து போகின்றன. இருந்தும் இதே ஐநாவும் மேற்குலகமும் மனித உரிமைகள் பற்றி பேசுவது எத்துணை நகைமுரணானது என் பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த உலக ஒழுங்கை மாற்றினால்தான் ஐ-அமெரிக்காவுக்கு இடையூறாக உள்ள தேசிய போராட்டங்களுக்கு நீதி கிடைக் கும். இதை மாற்றுவதற்கு சீனா போன்ற வேறொரு வல்லரசுதான் தேவையா? அல்லது சமூக நீதியை முன்னிறுத்தும் அமைப்புக்களும் போராட்டங்களும் சிந்த னைகளும் உலக மக்களிடையே வளருவ துதான் தேவையா என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.



# பேச்சு வழக்கில் வேறுபடும் தமிழ்

**சதுர்சன்**

ஈழத் தமிழுக்கும்இந்தியத் தமிழுக்கும் முற்காலத்தில் இருந்து வேறுபாடுகள் காண்கிறார்கள் தமிழ் ஆய்வாளர்கள்.

**ஈழத்தமிழின் வட்டார வழக்குகள்**

- ★ யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழ்
- ★ மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ்
- ★ புலம்பெயர் பேச்சுத் தமிழ்
- ★ முகலாயர் பேச்சுத் தமிழ் என்றும், இவைதவிர இலங்கையில் மலையக மக்களால் பேசப்படும் தமிழ்
- ★ மலைநாட்டுப் பேச்சுத் தமிழ்

என்றும் அழைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டிலும் மற்றும் இந்தியாவில் உள்ள பிறமாநிலங்களிலும் பேசப்படும் தமிழை இந்தியத் தமிழ் என்று அழைப்பார்கள்.

**இந்தியத் தமிழின் வட்டார வழக்கு:**

- ★ திருநெல்வேலித் தமிழ்
- ★ அரிசபம் பேச்சுத்தமிழ்.
- ★ கொங்கு தமிழ்.
- ★ செட்டிநாட்டுத் தமிழ்.
- ★ சென்னைத் தமிழ்.
- ★ நாஞ்சில் தமிழ்.
- ★ மணிப்பிரவாளம்.
- ★ மலேசியத்தமிழ்.
- ★ ஜீனூன் தமிழ்.
- ★ பெங்களூர் தமிழ்

என பல வகைப்படுகிறது.

தமிழ் பேச்சு வழக்குகள் செந்தமிழிலிருந்து கி.மு. 300 - கி.மு. 700 ஒலிவடுவ மாற்றம் மற்றும் ஒலி மாற்றம் கொண்டு என அறியப்படுகிறது.

இந்தியத்தமிழுக்கும் இலங்கைத்தமிழுக்கும் இடையில் பல வேறுபாடுகள் உள்ளன.இலங்கைப் பேச்சு வழக்குகள் தமிழ்நாட்டுப் பேச்சு வழக்கிலிருந்து வேறுபட்டும், பொதுவான தன்மையினைக் கொண்டும் காணப்படுகின்றன.

இந்தியாவில் பாவனையில் இல்லாத பல சொற்களையும் இலக்கண வடிவங்களையும் இலங்கைத் தமிழ் பேச்சு வழக்குகள் கொண்டுள்ளன.

அத்துடன் பல சொற்கள் சிறிய மாற்றத்துடன் பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கைத் தமிழ் பேச்சு வழக்குகள் கிராந்த மற்றும் மேற்கத்தைய மொழிகளில் தாக்கத்திலிருந்து சற்று குறைந்து காணப்படுகின்றன,

ஆனால் இந்திய தமிழில் கிராந்த மற்றும் மேற்கத்தைய மொழிகளின் தாக்கத்தினுள் பெருமளவு ஏற்கொள்ளப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

இந்திய தமிழில் ‘சரி’ என்றால் ‘ஆம்’ என்று சொல்லுவார்கள் ஆனால் ஈழத்தில் ‘சரி’ என்றால் ‘ஓம்’ என்று சொல்லுவார்கள். இது ஈழத்தமிழின் சிறப்புக்களில் ஒன்று.

ஈழத்தமிழ் பழமையானதும் மிகப் பண்டையதும் புராதன தமிழுக்கு நெருக்கமானதுமாகக் கூறப்படுகிறது. இது தொல்காப்பியர் கால புராதன தமிழின் பண்புகளைத் தக்கவைத்துள்ளதாகக் கருதப்படுகிறது.

சங்க இலக்கியங்களான திருக்குறள், குறுந்தொகை ஆகியவற்றில் பாவிக்கப்பட்ட பல தமிழ் வடிவங்கள்இன்றும் ஈழத்தமிழில் பாவனையில் உள்ளன.இந்தியத்தமிழ் இலக்கியத்தமிழில் இருந்து பெருமளவு மாற்றம் பெற்றுள்ளது.


ஆனால் பல சங்ககாலத் தமிழ்ச்சொற்களை இன்றும் பல வட்டார வழக்குத்தமிழ்கள் காப்பற்றி வருகிறன.மலேசிய மற்றும் சிங்கப்பூர் தமிழ் தற்பொழுது தமது பழைய நிலைக்கு திரும்புகின்றன. ஈழத்தமிழ் இந்தியத் தமிழுடன் ஒருவருக்கு ஒருவர் புரியக்கூடியவிதத்தில் இல்லை.ஆனாலும் அவை இரட்டைநடை வழக்கைப் பகிர்கின்றன.

ஒருகாலத்தில் இந்தியத் தமிழ் பேசுவோரால் மலையாளமென பலமுறை பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்டது ஈழத்தமிழ்.

யாழ்ப்பாணத்தவர் ‘ழ’ கரத்தைச் சரியாக உச்சரிப்பதில்லை. இங்கே ‘ழ’ கரமும், ‘ள’ கரமும் ஒன்றுபோலவே உச்சரிக்கப்படுகின்றன. ‘வாழை’க்கும், ‘வாளை’ க்கும் யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழில் உச்சரிப்பு வேறுபாடு கிடையாது.

(தமிழகத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களிலும் இதே உச்சரிப்புத்தான் உச்சரிக்கப்படுகிறது.) யாழ்ப்பாணத்தவர் பேசும்போது ர கர - ற கர, ல கர - ள கர, மற்றும் ன கர - ண கர வேறுபாடுகள் மிகவும் தெளிவாக இருக்கும்.

ற கர மெய் இரட்டித்து வரும்போது யாழ்ப்பாணத்து




உச்சரிப்பு வடதமிழ்நாட்டு உச்சரிப்புடன் ஒத்து அமைவதில்லை. வடதமிழகத்தில் ற்ற, ற்றி .... என்பன t-ra, t-ri என உச்சரிக்கப்படும்போது, தென்தமிழகத்தில் குறிப்பாக திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களைப் போல யாழ்ப்பாணத்தில் t-ta, t-ti என உச்சரிக்கப்படுவதாய் சொல்லப் படுகிறது.

பொதுவாக, எல்லா நாட்டு மக்களின் பேச்சு மொழி, எழுத்து மொழியிலிருந்து சற்றே வேறுபடும். அது போலவே, பேச்சுத் தமிழில் சொற்களும் பல விதமான மாற்றங்களுக்கு உள்ளாகின்றன. சில சொற்களைக் குறுக்கி ஒலிப்பதும், சிலவற்றை நீட்டி ஒலிப்பதும், சிலவற்றின் ஒலிகளை மாற்றி ஒலிப்பதும் பொதுவாகக் காணக்கூடியதே.

யாழ்ப்பாணத் தமிழும் இதற்கு விதிவிலக்கல்ல. எனினும் சொற்களின் எழுத்தோசை யாழ்ப்பாணத் தமிழில் ஒப்பீட்டு ரீதியில் குறைவான திரிபுகளே இருப்பதாகக் கூறலாம். தமிழ்நாட்டுப் பேச்சுத் தமிழுடன் ஒப்பிட்டு நோக்குவது இதனைப்புரிந்து கொள்ள உதவும்.

எடுத்துக்காட்டாக.

ன், ம் போன்ற மெய்யெழுத்துக்களில் முடியும் பல சொற்களை உச்சரிக்கும்போது, இந்த எழுத்துக்களை முழுமையாக உச்சரிக்காமல், ஒரு மூக்கொலியுடன் நிறுத்துவது தமிழ்நாட்டில் பரவலாகக் காணப்படுகின்றது.

நான் என்பதை நா. என்றும், மரம் என்பதை மர என்றும் உச்சரிப்பதைக் காணலாம். நான் என்பதைச் சில சமயங்களில் நானு என்று நீட்டி உச்சரிக்கும் வழக்கமும் உண்டு. யாழ்ப்பாணத்தில் இச் சொற்களை நான், மரம் என்று முழுமையாக உச்சரிப்பார்கள்.

இகர, உகரங்கள் தனியாகவோ, உயிர்மெய்யாகவோ சொல் முதலில் வருகின்றபோது, தமிழ் நாட்டில் பல இடங்களில், அவற்றை முறையே எகர,ஒகரங்களாக உச்சரிப்பார்கள். எடுத்துக்காட்டாக, இடம், எடம் எனவும், குடம், கொடம் எனவும் ஆவதைப் பார்க்கலாம். இந்த உச்சரிப்புத் திரிபும் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் இல்லை.

எனினும் ஒலிகள் திரிபு அடைவது யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் இல்லாதது அல்ல. இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. பல சொற்களில் ற கரம், ட கரமாகத் திரிபு அடைவதுண்டு.

ஒன்று என்பது ஒண்டு என்றும், வென்று என்பது வெண்டு என்றும் திரியும். இது போலவே கன்று, பன்றி, தின்று என்பவை முறையே கண்டு, பண்டி, திண்டு என வழங்குவதை உற்று நோக்கலாம்.

இலங்கையில் பயன் பாட்டில் உள்ள சில சொற்கள்:
பேச்சுத் தமிழ் (பொருள்)

★ ஆம்பிளை (ஆண்)
★ இளந்தாரி (இளைஞன்)
★ ஒழுங்கை (ஒடுங்கிய தெரு)
★ கதிரை (நாற்காலி)
★ கமம் (விவசாயம்/வயல்)
★ கமக்காரன் (விவசாயி)
★ காசு (பணம்)
★ காணி (நிலம்)
★ கொடி (பட்டம்)
★ சடங்கு (விவாகம்)
★ திகதி (தேதி)
★ பலசரக்கு (மளிகை)
★ பெட்டை (சிறுமி)
★ பெடியன் (சிறுவன்)
★ பேந்து/பிறகு (பின்பு)
★ பொம்பிளை (பெண்)
★ முடக்கு (பாதைத் திருப்பம்)
★ வளவு (வீட்டு நிலம்)
★ வெள்ளாமை (வேளாண்மை)
★ கதை (பேசு)
★ பறை (பேசு)
★ பாவி (பயன்படுத்து)
★ பேசு (ஏசு)
★ விளங்கு (புரிந்துகொள்)
★ வெளிக்கிடு (புறப்படு/உடை அணிந்து தயாராகு)
★ ஆறுதலா (மெதுவாக)
★ கெதியா (விரைவாக)
★ தேத்தண்ணி (தேநீர்)
★ புதினம் - செய்தி
★ கொழுவுதல் - மாட்டிவைத்தல் அல்லது இணைத்தல்.
★ சத்தி - கக்குதல் வாந்தி.
★ தலையிடி - தலைவலி.
★ அரியண்டம் - சிக்கல்.
★ தேசிக்காய் - எலுமிச்சை.
★ மச்சம் - இறைச்சி வகைகள்.
★ துவாய் - துண்டு.
★ நொடி - விடுகதை.
★ பொழுதுபட - மாலை.
★ அவா - அவர்கள்.
★ கெலி - ஆசை.
★ கெதியா - விரைவாக, சீக்கிரமாக.
★ ஆறுதலா - மெதுவாக.
★ நித்திரை - தூக்கம்.
★ கிட - படு.
★ இனத்தாட்கள் - சொந்தக்காரர்கள்.
★ வந்தவ - வந்திருக்கின்றனர்.
★ சீவிக்கலாம் - வாழலாம்.
★ கிட்டடியிலே - அண்மையில், சில நாட்களுக்கு முன்னர்.
★ கண்டுட்டன் - பார்த்துட்டேன்.
★ தமையன் - அண்ணன்.
★ நாரி - முதுகு.
★ திறமா - நன்றாக.




★ காவிக் கொண்டு - தூக்கிக் கொண்டு.
★ காணும் - போதும்.
★ காணாது - பத்தாது.

யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் நான்கு வகையான பேச்சு வகைகள் உள்ளன.

★ மரியாதை மிகு பேச்சு வகை,
★ இடைநிலை பேச்சு வகை,
★ இயல்பான பேச்சு வகை,
★ மரியாதை அற்ற பேச்சு.

வகை என வகைப்படுத்துகின்றனர் மொழி வல்லுனர்கள்.

மரியாதை மிகு பேச்சு என்பது.

வாருங்கள் அல்லது வாங்கோ, சொல்லுங்கள் அல்லது சொல்லுங்கோ என்று பன்மையாக பேசப்படும் வகை யாகும்.சிறியவர்களாக இருந்தாலும் பெரியவர்கள் அவர்க ளிடம், வாங்கோ, சொல்லுங்கோ போன்ற மரியாதையான சொற்களைப் பயன்படுத்தும் முறையும் உள்ளது.

இடைநிலை பேச்சு வகை என்பது.

வாரும், சொல்லும் எனப் பேசப்படும் வகையாகும்.

இயல்பான பேச்சு வகை என்பது

வா, போ, இரு என்பன போன்று பேசப்படும் வகையாகும்.

மரியாதை அற்ற பேச்சு என்பது

வாடா, சொல்லடாஎன மரியாதையற்ற பயன்பாடாகும். இந்த மரியாதை அற்ற சொற்கள் நண்பர்களிடையேயோ, இளைய சகோதரர்களிடம் பெரியவர்களாலோ, குழந்தைக ளிடம் பெற்றோராலோ, சிறியவர்களிடம் பெரியவர்களாலோ பயன்படுத்தப்படும்.

'இடை நிலை பேச்சு வகை' யாழ்ப்பாணத் தமிழரிடம் மட்டுமே காணப்படும் ஒரு தனிச்சிறப்பாகும். இந்த இடை நிலை பேச்சு வகை, தமிழ்நாட்டு பழைய வரலாற்றுத் திரைப் படங்களில் காணப்பட்டாலும் தற்போது பெரும்பாலும் மறைந்து விட்ட நிலை என்றே உருவாகியுள்ளது. இந்த இடைநிலை பேச்சு வகை நண்பர்களிடையேயும், சமவய தினரிடையேயுமே அதிக வழக்கில் உள்ளது. 'நீர், உமது, உமக்கு' எனச் சுட்டுப்பெயர்கள் வடிவிலும், 'இரும், வாரும், சொல்லும், கேளும், கதையும், என்ன சொன்னீர்?' என வினைச் சொற்கள் வடிவிலும் பேச்சு வெளிப்படும் இடங்களும் உள்ளன.

### ஈழத்தில் உள்ள உறவு முறைகளின் பெயர்கள்:

தந்தையின் உடன் பிறந்தாளை, 'அத்தை' என்று அழைக்கும் வழக்கம் யாழ்ப்பாணத்தில் மிகவும் குறைவு. தந்தையோடு பிறந்த பெண்களையும், தாயோடு பிறந்த ஆண்களின் மனை வியரையும், மாமி என்றே அழைப்பது இவ்வூர் வழக்கம்.

பழைய தலைமுறையினர், தாயோடு பிறந்த ஆண்மகனை அம்மான் என்றும், தந்தையுடன் பிறந்த பெண்ணின் கணவரை மாமாஎன்றும் குறிப்பிட்டனர். இன்று அம்மான்என்ற சொல் கைவிடப்பட்டு, மாமா என்பதே இரு உறவுக்கும் பயன்படு கின்றது. மனைவி கணவனை இஞ்சாருங்கோ, அல்லது இஞ் சாருங்கோப்பா என்றும், கணவன் மனைவியை பெயரைச் சொல்லியோ அல்லது இஞ்சாருமப்பா என்றும் அழைத்து வந்தனர்.

அக்காவின் கணவரை அத்தான்அல்லது மைத்துனர் என்றும், தங்கையின் கணவரை மச்சான்என்றும், அண்ணாவின் அல் லது தம்பியின் மனைவியை மச்சாள்என்றும் அழைத்தனர்.

அண்ணி என்ற சொல் மிக அரிதாகவே யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும் மாமா, மாமியின் மகனை மச்சான் என்றும், அவர்களின் மகளை மச்சாள் என்றும் அழைக்கும் வழக்கமும் இருந்து வந்தது. ஆனால் இன்றைய தலைமுறையினர் அண்ணி என்று சொல்லத்தொடங்கிவிட் டார்கள்.

ஈழத் தமிழில் கணவன், மனைவி என்ற சொற்களுக்கு ஈடாக, யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் புருசன், பெண்சாதி அல்லது என்னவள், என்னவன் என்பர். தாய், தந்தை, ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் என்பவர்களிடையே ஒரு வரையொருவர் அழைக்கப் பயன்படும் விளிச் சொற்களும்,






அவர்கள் பற்றிப் பிறருடன் பேசும்போது பயன்படுத்தும் குறிப்புச் சொற்களும் ஒரு பேச்சு மொழியின் அடிப்படையான சொற்களாகும்.

தற்காலத்தில் யாழ்ப்பாணத்துப் பிள்ளைகள் தந்தையை அப்பா என்றும், தாயை அம்மா என்றும் அழைக்கிறார்கள். இன்று வாழும் மூத்த தலைமுறையினரில் பலர், இவர்களை முறையே, அப்பு, ஆச்சி என அழைத்தனர். இடைக் காலத்தில் தந்தையை 'ஐயா' என்று அழைக்கும் வழக்கமும் இருந்தது.

அக்காலத்தில், பெற்றோரின் பெற்றோரை, பெத்தப்பு, பெத்தாச்சி,அம்மாச்சி, அப்பாச்சி, ஆச்சி என்றார்கள். இன்று அவர்கள் அம்மம்மா, அப்பம்மா, அம்மப்பா, அப்பப்பா என்றும் சில வீடுகளில் தாத்தா, பாட்டிஎனவும் அழைக்கிறார்கள்.

இதுபோலவே பெற்றோரின் உடன் பிறந்த ஒத்தபாலாரும், சில பத்தாண்டுகளுக்கு முன்வரை, பெரியப்பு, சின்னப்பு, பெரியாச்சி, சின்னாச்சி, குஞ்சையா, குஞ்சம்மா என்றும், பின்னர் பெரியையா, சின்னையாஎன்றும் அழைக்கப்பட்டனர். இன்று, பெரியப்பா, சித்தப்பா, பெரியம்மா, சின்னம்மா அல்லது சித்தி என்ற உறவுப்பெயரிட்டு அழைக்கிறார்கள்.

பால் வேறுபாடின்றிப் பிள்ளைகளைக் குறிக்கும்போது, 'பிள்ளை'என்ற சொல்லே பயன்படுகின்றது. ஆண் பிள்ளையை ஆம்பிளைப் பிள்ளை என்றும், பெண் பிள்ளையைப் பொம்பிளைப் பிள்ளைஎன்றும் குறிப்பிடுவர்.

உறவுச் சொற்களாக வழங்கும்போது, ஆண்பிள்ளையை மகன் என்றும், பெண் பிள்ளையை மகள் என்றுமே வழங்குவர். பல குடும்பங்களில், ஆண்பிள்ளையைத் தம்பிஎன்றும், பெண்பிள்ளையை தங்கச்சி அல்லது பிள்ளைஎன்றும் அழைப்பது வழக்கம்.

பிள்ளைகள் தங்களுக்குள் பயன்படுத்திக் கொள்ளும் உறவு முறைச் சொற்கள் வேறானவை. அண்ணன், அக்கா, தம்பி,




தங்கச்சி போன்ற உறவுகள் ஒன்றுக்கு மேற்பட இருக்கும் போது, பெரிய, சின்ன, இளைய, ஆசை, சீனிபோன்றவற்றில் பொருத்தமான ஒரு அடைமொழியைச் சேர்ப்பர். பெரியண்ணன், ஆசைத்தம்பி, சின்னக்காஎன்றோ, அவர்களுடைய பெயரைச் சேர்த்து, மறவன் அண்ணா, மதியக்கா என்றோ வேறுபடுத்தி அழைப்பது வழக்கம்.

மேலே நான் குறிப்பிட பல உறவு முறைகள் இந்தியத் தமிழில் வேறுமாதிரி இருக்கும் என்பது என்கருத்து. எனக்கு வெளிப்படையாக அனைத்து இந்திய உறவுமுறைக்கான சொற்கள் தெரியவில்லை என்பதனால் நான் குறிப்பிடவில்லை.

ஈழத்தமிழர்கள் பயன்படுத்தும் தமிழ் மொழியில் உள்ள வேறுபாடுகளையும் மறந்து விட முடியாது. பொதுவாக தமிழகத்தில் பேசப்படுகின்ற தமிழ் சொற்களில் இருந்து இலங்கைத் தமிழர்களின் பேச்சுத் தமிழ் வேறுபாடுகள் சில.




**சான்றாக இந்த சொற்றொடர் .பேச்சு மொழி**

1. நான் கடைக்குப் போனேன். - தமிழ் நாடு மற்றும் மலேசியா சிங்கப்பூரில் பேசப்படும் வகை

**கடைக்குப் போனனான். - ஈழத்த் தமிழர் பேசும் வகை இது.**

2. எத்தனை நாள் உங்கள் நண்பர் வீட்டில் தங்கியிருப்பீர்கள்? - தமிழ் நாடு மற்றும் மலேசியா சிங்கப்பூரில் பேசப்படும் வகை.

**எத்தினை நாள் உங்கள் நண்பர் வீட்டில் நிற்பீர்கள்? - ஈழத் தமிழர் பேசும் வகை.**

3. நீ மகிழியிடம் பேசினாயா? - தமிழ் நாடு மற்றும் மலேசியா சிங்கப்பூரில் பேசப்படும் வகை.

4. நீ மகிழியிடம் கதைச்சியா? - ஈழத் தமிழர் பேசும் வகை.

இப்படியாக பல வேறுபாடுகளை ஈழத் தமிழர்களின் பேச்சு வழக்கில் காணமுடிகின்றது.



கொற்றவை

அங்கம்: 13

# வனல்

வேலைக்கு வந்த இடம் ஒரே களேபரமாக இருந்தது. காவற்துறையினரும் அவருடன் வந்த சில அதிகாரிகளும், எல்லோரையும் 'போங்கோ..! கெதில போங்கோ..!'என்று விரட்டிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கும்கட்சிக்காரருக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுவிட்டது. இடையில், ஊடகத் துறையிலிருந்து புகைப்படமெடுக்க வந்தவர்கள் அந்த இடத்தையும் எலும்புக் கூடுகளையும் அனுமதி பெறாமல் புகைப்படம் எடுக்கத் தொடங்கி விட்டனர். இதனால் வாய்த்தர்க்கமும் தள்ளுமுள்ளுமாக அந்த இடம் அமளிப்பட்டது.

உடல் உழைப்பின் அசதியும், வெயில் வெக்கையும், இப்போது கிணற்றில் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டது தந்த அதிர்ச்சியுமாகஎப்போது வீட்டுக்குப் போவோம் என்றிருந்தது ஆனந்தனுக்கு. வேலைக்கு கூட்டி வந்தவருக்கோ ஒரே கடுப்பு.

இனி இப்ப இவங்கள் வேலை செய்ய விட்ட மாதிரித்தான். புறுபுறுத்துக்கொண்டே நின்றவர்

வாய் பாக்காம ஏறுங்கோ! கெதியில வாங்கோ! என்று வேலைக்கு வந்தவர்களில்தனது கோபத்தைத் தீர்த்துக் கொண்டார். வரும்போது இரண்டு தடவையாக வானில் ஏற்றப்பட்டு வந்தவர்கள் இப்போது ஒரேதடவையில் வானிற்குள் அடைக்கப் பட்டனர். வியர்வை வெக்கையுடன் ஆள் நெரிசலுமாக மூச்சு விடவே முடியவில்லை. கடைச்சந்தி வந்தவுடன்,

நான் இங்கயே இறங்கிறன்..! என்று இறங்கிக் கொண்டான் ஆனந்தன்.

கணேசண்ணரின் பலசரக்குக் கடையில் அரிசி, சீனி, கொஞ்சம் பருப்பு, சோயாமீற், எண்ணெய் என்று சில அத்தியாவசிய பொருட்களும், வெண்ணிலாவுக்கு 'கிறீம் பிஸ்கெட்'டும் வாங்கிக் கொண்டு கடையின் பின்னால் பூட்டி வைத்திருந்த தனது சைக்கிளை எடுத்து வீடு நோக்கி உழக்கத் தொடங்கினான்.

'இன்னும் கொஞ்ச நேரத்தில வீட்ட போயிடலாம் தேகம் கழுவிப் போட்டு சாந்தியின்ர கையால ஒரு நல்ல தேத்தண்ணி குடிக்க வேணும்' மனம் ஏங்கியது.

வழமையாக அவன் வருகையை எதிர்பார்த்து வெளியிலே காத்திருப்பாள் சாந்தி. இன்று அவளை எங்கும் காணவில்லை. சைக்கிள் விடும் சத்தம் கேட்டு ஓடி வந்த வெண்ணிலா பதட்டமாக

எங்கையப்பா போனனீங்கள்? எத்தினை தரம் கோல் எடுக்கிறது.? அம்மாவுக்கு காய்ச்சல் நெருப்பாக் கொதிக்குது. எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை. கெதியில வாங்கோப்பா. என்றாள். அவளின் கண்களும் மூக்கும் சிவந்திருந்தன. அழுதிருப்பாள் போல.

ஐயையோ!! அங்க இருந்த நெருக்கடியில போன் அடிச்ச சத்தம் கேட்கவில்லை போல

காய்ச்சலோ? சரிநான் வந்திட்டனல்லோ நான் பாக்கிறன் பயப்பிடாதை! இந்தச் சாமானுகளைக் கொண்டுபோய் வை பிள்ளை!

உள்ளே நைந்து போய் படுத்திருந்தாள் சாந்தி.அவள் அருகில் பாதி குடித்த தேநீர் குவளை ஒன்று இருந்தது. காலையில் எவ்வளவு சுறுசுறுப்பாக இருந்தாள்? நெற்றியில் கை வைத்துப் பார்த்தான் ஆனந்தன். அனலாய்க் காந்தியது. ஸ்பரிசம் பட்டதும் கண்ணைத் திறந்து பார்த்தாள் சாந்தி.

வந்திட்டியளோ? தேத்தண்ணி போடட்டே? எழும்ப முற்பட்டவளை அதட்டி படுக்க வைக்க வேண்டியிருந்தது. ஆனந்தனின் அயர்ச்சியெல்லாம் வீட்டு நிலைமையைப் பார்த்ததும் மாயமாகி விட்டது.

வெண்ணிலா! அம்மாவுக்குப் பக்கத்தில இருங்கோ கை



கால் கழுவிக்கொண்டு ஓடி வாறன். பக்கத்தில டொக்டர் சிவபாலனிட்டை ஒருக்காக் காட்டிக்கொண்டு வருவம்.

அவர்கள் தயாராகவும் நாலாவது வீட்டுக்காரரின் ஓட்டோ சவாரி முடித்து வரவும் சரியாக இருந்தது.

நெஞ்சுச்சளி பிடித்து தொற்று ஆக்கிப்போட்டுது என்றார் வைத்தியர். ஏழு நாட்களுக்கான 'ஆண்டிபயாடிக்'கும் வேறு சில மருந்துகளும் கொடுத்து, நேரத்துக்கு சத்தான உணவுகள் எடுக்க வேண்டும் என்ற புத்திமதியும் சொல்லி அனுப்பினார் டொக்ரர். வெண்ணிலாவையும் சாந்தியையும் ஓட்டோவில் இருந்திவிட்டு,

இந்தா இப்ப வந்திடுறன் என்று வைத்தியரை தனிய சந்திக்கப் போனான் ஆனந்தன். சாந்தி இவ்வளவு சோர்ந்து போய் இருந்து அவன் பார்த்ததில்லை. அவனுக்கு ஒரே யோசனையாக இருந்தது.

தம்பி..! உமக்கு நிலைமையள் விளங்கும். அவவின்ர பொய்க்கால் அண்டி அண்டி அந்த இடம் புண்ணாப் போச்சு. இவ்வளவு நாளும் உங்களுக்கு காட்டிக் கொள்ளக் கூடாது எண்டு சமாளிச்சு இருந்திருக்கிறா. இப்ப ஏலாமப் போச்சு. ஆண்டிபயோடிக் அதுக்கும் சேர்த்துத்தான்.. காய்ச்சலுக்கு அதுகும் ஒரு காரணம். மருந்து முடிய ஒருக்கா வாரும் பெரியாஸ்பத்திரி போய் சில டெஸ்டுகள் எடுக்கோணும். வேற கால் மாத்த வேண்டி வரலாம் ஒரு செலவு வரும் பார்த்துக் கொள்ளும். என்றார்.

டொக்டர் சிவபாலன் நல்ல மனிதர். அவனிடம் மருந்துக்கு மட்டுமே காசு எடுப்பார். சேவைக்கு வாங்குவது கிடையாது. கைராசியானவர். பார்த்தவுடனேயே பிரச்சனை இதுதான் என்று கண்டுபிடித்து டொக்டர் சொன்னது மனதுக்கு ஆறுதலளித்தாலும், தனக்கு செலவு வைக்கக் கூடாது என்று சாந்தி தன்னை வருத்திக் கொண்டது கொஞ்சம் மனவருத்தமாகவும் இருந்தது.

அடுத்து வந்த நாட்களில் ஆனந்தன் வேலை எதற்கும் போகவில்லை. சாந்தியை கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொண்டான். உள்ளே,அவனிருந்த இடத்தில் அனைவருமே சமைக்க கற்றிருந்தனர். ஆனந்தனும் நல்லதொரு சமையற்காரன். ஆனாலும் சாந்தி அவனை சமைக்க விட்டதேயில்லை. இப்போது தனது திறமையைக் காட்டி குடும்பத்தை மகிழ்வித்தான் ஆனந்தன்.

சற்றுத் தேறியதும் பெரியாஸ்பத்திரியில் எக்ஸ் றே, ஸ்கான் என்று ஓடித்திரிந்தனர். சாந்திக்கு புதிய கால் வைக்க வேண்டியிருந்தது. டானியல் அண்ணர் இல்லையென்றால் ஆனந்தன் என்ன செய்திருப்பானோ தெரியாது. தானாகவே முன்வந்து உதவினார் அவர். 'நல்ல மனிதர்..' நன்றியுடன் நினைத்துக் கொண்டான் ஆனந்தன். மண்டிக்காரரும் ஒரு சிறுதொகை கடனாகத் தந்து உதவியிருந்தார்.

புதிய கால் பழக்கப்பட கொஞ்சக் காலம் எடுக்கும். அதுவரை வேதனைதான். தாண்டித் தாண்டி நடந்தாலும் தனக்கு நோகுது என்று வாயைத் திறந்து சொல்ல மாட்டாள் சாந்தி. 'இவளை நல்லா வைச்சிருக்க வேணும் என்னுடைய சொத்தே இவளும் எங்களின் செல்ல மகளும்தான். 'நினைத்துக் கொண்டான் ஆனந்தன்.

வேறு சில பிரபல பாடசாலைகளுக்கு முன்னால் இருந்த பெட்டிக் கடைகளும் இப்போது மண்டிக்காரர் கைவசம் வந்துவிட்டன. அவற்றிற்கான பொருட்களை ஏற்றியிறக்கும் வேலையையும்தனியாக ஆனந்தன் ஒருவனிடமே ஒப்படைத்திருந்தார் மண்டிக்காரர். அவனில் அவ்வளவு நம்பிக்கை.

இது தவிர நகர்ப் பகுதியில் இருந்த ஒருசில மருந்தகங்களுக்கு மருந்துகள் வழங்கும் ஒப்பந்தத்தையும் எடுத்து தனது தொழிலை விரிவுபடுத்தியிருந்தார் அவர். எல்லாம் அந்த தாடிக்கார கட்சிக்காரரின் உபயம்தான். தாடிக்காரர் அரசாங்கத்தினருடன் ஒன்றுக்குள் ஒன்றாக இருப்பவர்.கூட்டுக் களவாணிகள். ஆனாலும், அவர்களை தட்டிக் கேட்க யாருமில்லை.

மருந்தகங்களுக்கு மருந்து வழங்குவதற்கென ஒரு சிறியரக வானையும் ஆனந்தனிடம் ஒப்படைத்திருந்தார் மண்டிக்காரர். நீண்ட காலத்தின் பின் வாகனம் ஓடுகிறான் அவன். அன்றும் அப்படித்தான். யாழ் நகரில் இருந்த ஒரு மருந்தகத்திற்கு மருந்துகளை வழங்கியாகி விட்டது. அடுத்த வேலைக்கிடையில் ஒரு மணித்தியால இடைவெளியிருந்தது. இதனால் ஒரு தேநீர்க்கடையில் ஒதுங்கினான் ஆனந்தன்.

நகர்ப் புறத்தில் இருந்த தேநீர்க் கடை சிறியதாக இருந்தாலும் நவீன மயப்படுத்தப்பட்டு இருந்தது. ஒரு சிறிய 'ரிவி'யும் அங்கு ஓடிக் கொண்டிருந்தது. வழமையான தேநீர்க்கடைகளைப் போல இங்கும் மக்கள் இருந்து ஊர்ப் புதினம் கதைத்துக் கொண்டு இருந்தனர். 'இது ரீக்கடைகளுக்கேயான சிறப்புப் போல' என்று எண்ணிக் கொண்டான் ஆனந்தன்.

வசாவிளான் பக்கத்தில கிணற்றுக்குள் எலும்புக்கூடு கண்டு பிடிக்கப்பட்டதைப் பற்றி விலாவாரியாகப் பேசினார்கள். கடந்த வாரம் முல்லைத்தீவில் மனிதப் புதைகுழியில் கிடைத்த தடயங்கள் பற்றியும் அலசினார்கள். ஒருவர் அந்த சமயத்தில் அங்கிருந்தவராம்.புதைகுழி தோண்டுவதை நேரில் பார்த்தவர் என்றார். உடனே எல்லோரும் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

'போர்க் காலங்களிலும் இப்படித்தான். மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று பேசிக் கொள்வார்கள். ஒரு தாக்குதல் சம்பவம் மிக விரைவாக மக்களிடையே பரவி விடும்.' எண்ணிக் கொண்டான் ஆனந்தன்.

கதை முக்கியமான பிரச்சனையின் பக்கம் திரும்பியது.





பெரியவர் குடும்பத்தோட வாறார் எண்டது எத்தினை சனத்துக்கு நிம்மதி தெரியுமோ?.. எனக்கு அப்பவே தெரியும் அவர் வருவார்.! வந்தே தீருவார்.! கடவுள் எங்களைக் கை விட்டிட மாட்டான்!!. தழுதழுத்த குரலில் யாரோ ஒருவர் சொல்ல, அவருக்கு ஆதரவாக சில குரல்கள் எழுந்தன.

பேய்க்கதை கதைக்காதையும்.! இத்தினை வருசம் எங்கை போனது உந்தக் கதை? லட்சக்கணக்கில சனமும், பெடியளும் சாக அவை மறைவா இருந்திருப்பினம் எண்டு உண்மையா நம்புறீரோ.? அப்பிடியோ அவர் இருந்தவர்,.? தன்னை ஒறுத்தல்லோ காலம் முழுக்க சண்டை பிடிச்சவர் உது கள்ளக் காசு அடிக்க பிளான் பண்ணுறாங்கள் யார் உதைக் கிளப்பினது எண்டு பிடிச்சு பச்சை மட்டையால வெளுக்க வேணும் அதை விட்டிட்டு கதை காவுறியள்.. ஒருவர் கோபமாகச் சொன்னார். அவருக்கு ஆதரவாகவும் பல குரல்கள் எழுந்தன.

விவாதம் சூடு பிடித்தது. ரிவியையூ ரியூப் சனல் ஒன்றுக்கு மாற்றினார்கள்.

உதைப் பாரும். உவர் அங்க உள்ளுக்க இருந்தவர். அங்க நடந்தது ஒண்டுவிடாமல் உவருக்கும் தெரியும்.. உவற்றை பேட்டியில என்ன சொல்லுறார் எண்டு கேளுங்கோ

உவனோ? பச்சைக் கள்ளன்! காசுக்கு ஊம்பி.!! விழுந்திட்டான்.! இங்க ஒண்டும் சொல்லாமல் வெளிநாட்டுக்கு ஓடி, அங்க நிண்டு படம் காட்டுறார். கெதியில பாருங்கோ..! உவற்றை வண்டவாளம் வெளிச்சத்துக்கு வரும் சனத்தை ஏமாத்தத்தான் உந்த வேலை.

உள்ளேரிவியை எட்டிப் பார்த்த ஆனந்தன் அதிர்ந்து போனான்.

‘இவனா.? இவன் என்ன பேட்டி கொடுக்கிறான்? என்ன பிரச்சனையை கிளப்ப இருக்கிறான்.?’

நிமலனை அவனுக்கு முன்பே தெரியும். அவனும் நிமலனும் ஒரே பாசறையில் அடிப்படைப் பயிற்சி எடுத்தவர்கள். பிறகு வெவ்வேறு துறைகளில் பிரிந்து போய்விட்டார்கள். எப்போதாவது சிறப்புப் பயிற்சிகளின்போது சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். அப்போதெல்லாம் 'எப்பிடி மச்சான்? ஓகேயா?' என்றளவில்தான் அவர்களின் உறவு இருந்தது. அவனும் ஒரு பெரிய பொறுப்பில்தான் இருந்தான்.

இறுதிச் சண்டையின் பின் ஆனந்தனை அடைத்து வைத்திருந்த இடத்திற்கே நிமலனையும் கொண்டு வந்தார்கள். தலையில் காயம் பட்டிருந்தான் அவன். கொஞ்சம் அசாதாரணமாக நடந்து கொண்டான். அனேகமாக அங்கு அடைக்கப்பட்டிருந்த எல்லோருமே காயத்துடன்தான் இருந்தனர். ஆனாலும் அந்த மூடர்கள் எந்தச் சித்திரவதைகளையும் நிறுத்தவில்லை. ஒரு கட்டத்தில் அந்த தொடர் சித்திரவதைகளால் மனதும் உடலும் மரத்துப் போய்விட்டது.உயிர் போய்விடாதா என்ற ஆசைதான் எல்லோர் மனதிலும் இருந்தது. மாறி மாறி ஆறாம் மாடிக்கும் நாலாம் மாடிக்கும் விசாரணை என்ற பெயரில் கொண்டு சென்று புதிது புதிதான சித்திரவதைகளை அறிமுகப் படுத்தினார்கள்.

விசாரணை என்ற பெயரில் எல்லோரும் வேறு வேறு விசாரணைக் கூடங்களுக்கு பிரித்துக் கொண்டுசெல்லப்பட்டு துன்புறுத்தப்பட்டனர்.அநுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான் நிமலன். ஆனந்தன் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் இருந்தபோது நிமலனையும் அங்கு கொண்டுவந்தார்கள். நீண்ட வருடங்களின் பின்னர் அவனுடன் ஒன்றாகத் தங்கும் சந்தர்ப்பம் ஆனந்தனுக்குக் கிடைத்தது.

அவர்கள் வைக்கப்பட்டிருந்த இடத்தில் வேறு சில மூத்த, அனுபவம் நிறைந்தவர்களும் இருந்தனர்.எந்த சித்திரவதைகளிலும் வாயை விடாமல் எப்படி நழுவலாக நடந்து கொள்ள வேண்டும் என்ற யுக்தியை அவர்கள் இவர்களுக்குக் கற்றுக் கொடுத்தனர்.

மூளைச் சலவை செய்வதற்கு எந்த யுக்திகளையும் கையிலெடுக்கத் தயங்க மாட்டார்கள். எங்கடை வாழ்க்கை முடிஞ்சுது. இனி மக்களின்ரை எதிர்காலத்தைப் பார்க்க வேணும்.. இதுவரை கால போராட்ட உணர்வை மழுங்கப் பண்ணி சனத்தை சிதைச்சு சிதறடிக்க எங்களை வைச்சே என்னவும் செய்யப் பாப்பாங்கள். சொல்லுற ஒவ்வொரு வார்த்தையும் சனத்தை யோசிச்சு சொல்ல வேணும். என்ன? தம்பியவை! கவனம்!

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தங்களின் அனுபவ அறிவைத் தந்து எச்சரிக்க அவர்கள் பின்நின்றதில்லை

அந்த நாளும் வந்தது.

ஒருநாள் சாதாரண உடையில் இருவர் வந்தனர். பார்த்தவுடனே சி ஐ டி என்று மனதுக்குப் பட்டது.

நீதிமன்ற அனுமதியுடன் வந்திருக்கிறோம். உன்னை விசாரிக்க வேண்டும். வா..! என்றனர்.

‘இதுதான் கடைசி. சுட்டபின் எங்காவது குழியில் புதைக்கப் போகிறார்கள் அல்லது ஆற்றில் வீசப் போகிறார்கள்.’ என்று எண்ணிக்கொண்டான் ஆனந்தன். சாந்தியையும் குழந்தையையும் ஒரு தடவையாவது பார்த்துவிட மாட்டோமா என்ற ஏக்கத்துக்கு இப்படி ஒரு முற்றுப்புள்ளி விழப் போகிறதா?

நொண்டியவாறு கட்டடத்தின் ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் அருகில் வந்தான்ஆனந்தன். வானிற்கு அருகில் சேலையணிந்த ஒரு இளம் பெண்ணும் நவநாகரிகமாக காற்சட்டை சேர்ட்டுடன் இருந்த ஒரு பெண்ணும் நின்றிருந்தனர். அவர்கள் அவனை அனுதாபத்துடன் பார்த்தனர்.

சிவில் உடையில் வந்தவர்கள் பின் இருக்கையில் அவனுடன் ஏறிக் கொண்டனர். அந்த இரு யுவதிகளும் முன்னே சாரதிக்கு அருகில் ஏறிக்கொண்டது விசித்திரமாக இருந்தது.வான் கறுப்புக் கண்ணாடி போட்டு மறைக்கப் பட்டிருந்தது. எங்கே கொண்டு செல்கிறார்கள் என்பது தெரியவில்லை. சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் பிரயாணம் செய்திருப்பார்கள். சரியாக அனுமானிக்க முடியவில்லை.

இடத்தை அடைந்ததும் கைவிலங்கு கழற்றப்பட்டது.

இரண்டாம் மாடிக்கு வந்திருக்கிறீர்கள்!! என்றது ஒரு குரல்.

**தொடரும்....**

பொழில்



# அன்று நாம் வாழ் நிலம் துறந்தோம்!!

கலங்கியது மனசு.
அடுத்து
என்ன செய்வது என்று
புரியவில்லை!
கால்கள் தம்போக்கில்
ஊர்ந்து செல்லும்
மனிதப் பேரணியில்
இணைந்துகொண்டது!!

கொஞ்சப்பேரா எண்ணிப் பார்க்க?
ஐந்து லட்சம் பேர்
யாழைத் துறந்து
தென்மராட்சி நோக்கி
பயணப்பட்ட நிகழ்வு!!

படபடவெனப் பொரியும்
துப்பாக்கு வேட்டுகள்
கூவி வந்து உயிர் குடிக்கும்
தொடர்ந்த ஷெல் தாக்குதல்
விடுவேனா என்று
தலைக்கு மேல் வட்டமிடும்
உயிர்கொல்லி விமானங்கள்

எதுவுமே அன்றெம்மை
அச்சுறுத்தவில்லை!!
பாட்டன் பூட்டன்
ஆண்ட நிலங்கள்
அப்பன் அம்மை
தேடிய சொத்துகள்
அத்தனையும் துறந்து

வெற்றுக் கால்கள்
உடலைச் சுமக்க..
கனத்த இதயம்
தாய் நிலத்தை
துறந்து தவிக்க
சொந்த இடம்விட்டு

அகதியாய் போனோமே
அன்றைய நாள்
தமிழின வரலாற்றில்
ஒரு
மறக்கவியலா நாள்!!

நாவற்குழி பாலம் கடக்கையில்
நினைத்திருப்போமா
பின்னொரு நாளில்
கிருசாந்தி இங்கு
கொல்லப்படுவாள்
பிணந்தின்னிக் கழுகுகள் -அவளை
கூட்டத்தோடு கொன்று
கிடங்கில் புதைக்கும் என்று.

செம்மணிச் சுடலை
சிறுவயதுப் பயம் எனக்கு
ராவிலும் பகலிலும்
பிணம் எழுந்து ஆடுமாமே?

பின்னாளில் இங்கு
பலநூறு பிணங்கள்
ஒற்றைக் குழிக்குள்
எழாமல் கிடக்கும்
என்ற எண்ணம்
கிஞ்சித்தும் வரவில்லை!!

கோப்பாய் வயல்கடந்து
வந்த வரிசை மக்களில்
சிறுமி ஒருத்திக்கு
வந்தது சந்தேகம்
ஆச்சி..!! மாலதி அக்காவின்
தூபியை ஆர் காப்பார்?

நடக்கும் வலுவிழந்தோர் - பிறர்
தோள் சாய்ந்து நடந்தனர்
மழலைகள் கூட அழ மறந்தனர்
மரண வீட்டு மரியாதை போல
சிற்றடியெடுத்து
மெதுவாய் நடந்தனர்
ஆடவர் பெண்டிர் அனைவரும்.

எல்லோர்
தலையிலும் தோளிலும்
முதுகிலும் கரத்திலும்
ஒரு பொதி
உணவோ உடையோ
எதுவோ
மனச் சுமைக்கு முன்
அது வெறும் தூசு.

‘யாழ்ப்பாணம் உங்களை
வரவேற்கிறது’
வளைவு கடந்து
தென்மராட்சி பெருவெளியேக
அனைவர் கண்ணையும்
கரித்தது கண்ணீர்!!

தாய்மண்ணே!
மீண்டும் வருவோம்
எங்களை உன்னிடமிருந்து
பிரிக்கவே முடியாது.!

**(30/10/1995 அன்றைய யாழ்ப்பாண இடப்பெயர்வு வரலாற்று நிகழ்வையொட்டி எழுதப்பட்டது.)**